

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

● மாசி – 2021

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

மாசி - 2021

படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.



ஆசிரியர் : சோபா

வடிவமைப்பு : நெகிழன், 7904748374

படைப்புகள் அனுப்ப : R.Mahendran,
34 Redriffe Road, Plaistow,
London, e13 0JX, UK

மின்னஞ்சல் : neythal34@gmail.com
mahendran54@hotmail.com

காசோலைகள் : R.Mahendran எனும் பெயருக்கு எழுதுங்கள்.



நன்றி : இணையம்


## வணக்கம்,

காற்றுவெளி மாசி இதழ் (2021) தங்கள் பார்வைக்கு வருகிறது. உலகின் பல பாகங்களிலிருந்தும் சிற்றிதழ்களின் தேவை உணரப்படுகின்றது. சிற்றிதழ்களின் மீதான கரிசனையும் அதிகமாகவே உள்ளது.மறுப்பதற்கில்லை.சிற்றிதழ்களில் சில விளம்பரங்களில் தங்கியிருப்பதும்,சந்தாக்களை எதிர்பார்த்திருப்பதும் தான் அதன் அடுத்த நகர்விற்குப் பாதை போடும்.ஓரிரு இதழ்களுடன் நின்றுபோனவைகள் அனேகம் எனலாம்.ஒரு இதழ் எனினும் அது காத்திரமான படைப்புக்களுடனேயே வந்திருக்கிறது எனலாம்.கணிசமான படைப்பாளர்கள் தங்கள் படைப்புக்கள் சிற்றிதழ்களில் வருவதையே விரும்புகிறார்கள்.வெளிவந்த சிற்றிதழ்களின் பட்டியலும், அவற்றில் எழுதிய படைப்பாளர்களின் எண்ணிக்கையும் அதிகமாகும்.

காற்றுவெளியும் ஒவ்வொன்றின் அனுபவங்களையும் கருத்தில்கொண்டே பயணிக்கிறது. இதுவரை விளம்பரங்களில் காற்றுவெளி தங்கியிருக்கவில்லை என்பது புரியும்.அவ்வப்போது மீளவும் அச்சில் கொண்டுவர முயற்சிக்கும் போதெல்லாம் சூழல் ஒத்துழைக்கவே மறுக்கிறது. எதிர்காலத்தில் சாத்தியமாகலாம்.

படைப்பாளர்களுக்கும், இதழை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்லும் பங்காளர்களாகவும் நீங்கள் இருப்பது மகிழ்வே.

சிற்றிதழ்களை அறிமுகப்படுத்த உங்கள் பிரதிகளை அனுப்புங்கள்..


ஒவ்வொரு இதழுக்கும் நிதிப்பங்களிப்புச் செய்யவிரும்புவோர் தொடர்புகொள்ளுங்கள். நூல்களுக்கான விளம்பரம் தனி.

தொடர்வோம்.

நட்புடன்,

சோபா.

● நெளஷாத் கான் லி, அபுதாபி



# சிலந்தி கூடுகள்

வீட்டை விட்டு துபாய் வரும் போது ஆயிரம் கனவுகளோடு வந்தேன் கனவெல்லாம் கானலாய் மட்டும் தான் ஆகும் என்பதை வந்த பிறகு தான் உணர்ந்தேன்.

டிகிரி முடித்து இருந்தாலும் தயக்கம், பயம், போன்ற உணர்வுகள் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது ஏனென்றால் நான் வளர்ந்த இடம், சூழ்நிலை அப்படி அமைந்து இருந்தது..

வீட்டிலோ தனி அறை, ரெண்டு பேன் (சுவற்றில் ஒன்று -டேபிள் பேன் ஒன்று ) தலைக்கு ரெண்டு தலையணை, காலுக்கு ஒன்று, சைடில் கட்டி பிடித்து தூங்க ஒரு தலையணை என்று சொகுசு வாழ்க்கை தான், காலையில் டீயுடன் நூடுல்ஸ் மதியம் தயிர் சாதம் உருளை கிழங்கு, இரவு தோசை, சப்பாத்தி, ஒரு கிளாஸ் பால் என்று ராஜ போக வாழ்க்கை தான் எனக்கு.

எப்ப செலவுக்கு பணம் கேட்டாலும் ஒரே பிள்ளை தானே என்று அளவுக்கு மிஞ்சி கொடுக்கும் அன்பான அப்பா அம்மா என்று என் வாழ்க்கை அழகாக சென்று கொண்டு இருந்தது..

கல்லூரி படிப்பை முடித்தேன். எப்படியாவது நல்ல வேலை, கை நிறைய சம்பளம், அப்பா அம்மா கனவான சொந்த வீடு என்று அனைத்து ஆசைகளையும் நிறைவேற்றி விட வேண்டுமென்று நெஞ்சு துடித்தது அதற்கான தேடல் தொடங்கியது.

நான் நினைத்தது போல இந்த உலகம் இல்லை இந்த சமூகத்தில் போட்டியும்,பொறாமையும் அதிகமாகவே நிறைந்து இருந்தது இங்கு பெரும்பாலும் யாருக்கும் உதவும் மனப்பான்மையே இல்லை, அரசு வேலை என்பது பகல் கனவு காண்பது போன்றது என்பது எனக்கு மட்டும் தான் தெரியும். அதனால் பிரைவேட் பேங்க் வேலைக்கு முயற்சி செய்தேன் என் மதத்தினாலேயே எனக்கு சில வேலை கிடைக்க வில்லை,நினைத்தது கிடைக்கவில்லை என்றால் கிடைத்ததை வைத்து கொண்டு சந்தோசப் பட்டுக் கொள் என்று சில பெரியோர்கள் சொல்வார்கள் அதனால் உறவினர் ஒருவரின் உதவியால் துபாயில் புதியதாக துவங்க பட்ட ஒரு சூப்பர்மார்க்கெட்டில் டேட்டா என்ட்ரி பணிக்கு விசா கிடைத்தது அதனால் துபாய் சென்றேன்.

முதல் நாள் வேலை கொஞ்சம் டென்ஷனாகவே இருந்தது பன்னிரண்டு மணி நேர வேலை எல்லோரும் புதியவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்ற பயம் வேறு உள்ளுக்குள் இருந்தது. சாப்பாடு ஹோட்டலில் தான் ரூம் கம்பெனி தருவதாக வாக்கு அளித்தது .கையிலோ உறவினர் கொடுத்த 150 திர்ஹம்ஸ் மட்டுமே இருந்தது சம்பளம் வரும் வரை இந்த காசை கொண்டு தான் சமாளிக்க வேண்டும்.எப்படியோ அந்த முதல் நாள் வேலை முடிந்து விட்டது.

அன்றிரவு பன்னிரண்டு மணி ஊர் டைம் ஒன்றரை மணி இருக்கும். கம்பெனி சூப்பர்வைசர் ஒரு பிளாட்க்கு கொண்டு போனார் அந்த பிளாட்டில் மூன்று ரூம்களும் ஒரு பெரிய ஹாலும் இருந்தது அல்பபெட் ஆர்டர் பெயர் படி முதலில் வந்தவர்களுக்கு ரூமுக்கு எட்டு பேர் வீதம் மூன்று ரூம்களில் 24 பேரை போட்டனர் மீதம் உள்ள நாற்பது பேரை அந்த பெரிய ஹாலில் போட்டனர் ஹாலில் போட்ட நபர்களில் நானும் ஒருவன் சூப்பர்வைசர் சொன்னார் புதியதாக ஷாப் ஓபன் செய்ததால் கம்பெனிக்கு திடீரென்று அனைவருக்கும் ரூம் கிடைக்கவில்லை அதனால் ஒரு ரெண்டு மாசம் அட்ஜஸ்ட் செய்து கொள்ளுங்கள் என்றார். மொத்தம் அறுபத்தி நான்கு பேர் மூன்று பாத்ரூம் அதுவும் அனைவருக்கும் ஒரே நேரத்தில் வேலை காலை ஒன்பது மணி வேலைக்கு 5 மணி அல்லது 5.30 மணிக்கு எழுந்தால் தான் பாத்ரூம் கிடைக்கும் அதன் பின் கொஞ்சம் கண் அசந்து போய் லேட்டாகி போனாலும் கியூ தான் அதுவும் பத்து நிமிசத்துக்கு மேலே பாத்ரூம் ல இருந்தா சண்டை தான் வரும்.. பல் விலக்கறது,பாத்ரூம் போறது,குளிக்கிறது இதெல்லாம் பத்து நிமிஷத்துக்குள்ளே முடிக்க முடியுமா ????என்பது எனக்கு தெரியாது ஆனா அந்த பத்து நிமிசத்துக்குள்ள பாத்ரூமிலிருந்து வந்தாகணும் இல்லைனா பிரச்சனை ஆயிடும்.

ஒரு பெரிய ஹாலுலே நாற்பது பேர் அந்த நாற்பது பேருல பரதேசி போல நானும் ஒருவன், பாத்ரூம் போறதுக்கு கியூ -வுல நிக்கணும்,தயிர் சாதமும், வத்த குழம்பும் மற்றும் அறுசுவை உணவை ருசியா சாப்பிட்டவனுக்கு இங்கு காஞ்சு போன ரொட்டியும் ருசி இல்லாத குபூஸும் தான் கிடைத்தது இது பத்தாது என்று மூன்று ரூம்களுக்குரிய சாட்டிங் ஹாலில் நாற்பது பேரை போட்டது ஊரில் சிங்கிள் ரூமில் சொகுசாக சிங்கம் போல ராஜபோகத்துடன் தூங்கியவனுக்கு இங்கு பிச்சைக்காரனை போல தரையில் ப்ளாங்கெட் கொடுத்து தூங்க போட்டது,அந்த பிளாட்டை விட்டு வெளியே வந்தா அனல் கக்கும் சூரியன்,வேலை இல்லாத நேரங்களில் பிளாட்டில் இருக்கலாம் என்றால் அவ்வளவாக சுத்தம் இருக்காது மலபாரி,பாகிஸ்தானி,பங்காளி,நேபாளி என்று அனைத்து மொழி பேச கூடிய பல

குண நலன்களை கொண்ட பல நிறம் கொண்ட பல நாட்டு மனிதர்கள் எப்போதும் என்னை சுற்றி.

ரெண்டு மாதம் என்று சொல்லி ஐந்து மாதங்கள் அந்த ஹாலிலேயே போட்டார்கள் முதல் ரெண்டு மாதம் லீவே கொடுக்க வில்லை ஒரு ஐந்து மாதம் கழித்து ஒரு ரெண்டு பிளாட் எடுத்தார்கள் ஒரு பிளாட்டுக்கு இருபது பேர் வீதம் ரெண்டு பிளாட்டில் ஆட்களை போட்டார்கள் ஒரு பிளாட்டில் ரெண்டு ரூம்கள் ஒரு ரூமில் எட்டு பேர் என்று ரெண்டு ரூமில் மொத்தம் 16 பேர் மீதி உள்ள 4 பேரை ஹாலில் படுக்க வைக்க பட்டனர் இங்கும் அது போல எங்களின் வாழ்க்கை தொடங்கியது. ஒன்பது மணி வேலைக்கு ஆறு மணிக்கே எழுந்து விடுவேன் சிலர் லேட்டாக எழுவார்கள் எனக்கு சண்டை போடுவது பிடிக்காது அதனால் முன்னதாகவே எழுந்து குளித்து விடுவேன் என்னோடு ஒரு ரூமில் மலபாரிகளும் மற்றொரு ரூமில் பாகிஸ்தானியும் பங்காளியும் கலந்து இருந்தார்கள் ஞ்அடிக்கடி கிறுக்கு மனசு ஊரை பற்றி நினைத்து சந்தோசப் பட்டு கொள்ளும் இந்த பாழாய் போன பணத்துக்காக சொந்த நாட்டை விட்டு பல தரப்பட்ட,பல நாட்டு மனிதர்களோடு ஒத்து வாழ்கிறோம் ஆனால் சொந்த வீட்டில் தான் உடன் பிறந்த சகோதரர்களோடு ஒத்து போகாமல் இருக்க கூடிய சகோதர்கள் எத்தனை பேர்?? ருசியாக சமைத்தாலும் அம்மாவின் -மனைவியின் -சகோதரியின் சமையலை புகழாமல் குறை சொல்லும் பிள்ளைமார்கள், கணவன் மார்கள்,சகோதர மார்கள் எத்தனை பேர்??? அனுதினமும் குடும்பத்துக்காகவே உழைக்கும் அம்மாக்களை,மனைவி மார்களை எத்தனை ஆண்களின் ஆன்மாக்கள் மதிக்கிறது???என்று யோசித்து பார்க்க வேண்டும்.

என்னை சுற்றி உள்ள இடம் சுத்தம் இல்லாமல்,அழுக்கோடு கியூ முறை வாழ்க்கையை அதாங்க நீங்க மார் தட்டி சொல்லும் பேச்சுலர் லைப் - தான் என் வாழ்க்கையில் போய் கொண்டு இருக்கிறது. சிலரை பொறுத்த வரை இந்த அயல் நாட்டு வாழ்க்கை சுகமாக தெரியலாம் அது அழகான வீடாக கூட தெரியலாம்,சிலருக்கு அடுக்கு மாடி சொர்க்கமாகவும் தெரியலாம். ஆனால் என்னை போல உள்ள கிராமத்து காரனுக்கு இந்த நகர வாழ்க்கை நரக வாழ்க்கையை போல தான் உள்ளது. இது சிலந்தி வலை போல உள்ள மனிதர்கள் வாழும் கூடு. மூன்று வருடங்கள் கடந்துவிட்டது. நான்காம் வருட அயல் நாட்டு வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கிறேன் என் கனவுகளும், லட்சியமும் இன்னும் நிறைவேறவில்லை ஆனால் நிச்சயம் ஒரு நாள் என் கனவுகளையும், லட்சியத்தையும் அடைவேன் என்ற நம்பிக்கையோடு ஓடும் நதி போல என் வாழ்க்கை செல்கிறது,இந்த வாழ்க்கை எத்தனை வருடத்திற்கு தொடரும் என்று அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம்!!!!!

எரியும் மெழுகுவர்த்தி வாழ்க்கை -அயல்நாட்டு வாழ்க்கை

தூரத்திலிருந்து பார்க்கும் விட்டில் பூச்சிகளுக்கு


மெழுகுவர்த்தியின் வலியும்-வேதனையும் புரிவதில்லை

தீயின் அருகே செல்லும் வரை விட்டில் பூச்சிகள்

தீயை ஒளி என்றே நம்பும்!!

-இப்படிக்கு-

-அயல்நாட்டு பிரவாசிகள் -



# மூங்கிலும் மொழியும்

புல்லாங்குழலில் ஏழு துளைகளை அமைத்து இசையைக் கொண்டு வந்த அற்புதத்தை சங்ககாலத்திற்கு முன்னரே கண்டுபிடித்தவிட்டனர்.வேறு வேறு இசை வடிவங்களை காற்றும் கைவிரல்களுமே தீர்மானிக்கின்றன.

அதே போன்றுதான் எமது குரல் நாண்களும் காற்றுமே ஒலிவடிவாக மொழிகளைத் தீர்மானிக்கின்றன என்பதே அறுதியிட்டுச் சொல்லும் உண்மையாகும்.

உலக மானிடர்கள் ஒரே மொழியைப் பேசாமல் பல்வேறு மொழிகளைப் பேசுகிறார்களே இது எப்படிச் சாத்தியமாகிறது என்பதை பேசும் அனைவரும் நின்று யோசிப்பதில்லை.வாயைத் திறந்தால் பேசும் திறன் வருகிறது என்பது ஒரு சிந்தனை ஓட்டந்தான்.

மொழி ஒலியினால் உருவாகிறது என்பதற்கு உதாரணமாக புல்லாங்குழலுடன் ஒப்பிடுகையில் இசையென்பதும் கலைவடிவத்தின் மொழிதான் என்ற சமாந்தரப் பார்வை கொண்டு பார்க்கையில் மனிதர்களின் சுவாசப் பைகளிலிருந்து வெளிப்படும் காற்று தெண்டைக்குழி குரல் நாண்களை அதிரச் செய்து மூளைக்கலங்களில் பதிவாகியுள்ள மொழி வேறுபாடுகளை நரம்பு மண்டலங்கள் வழியாக உணரச் செய்து ஒலி வாய்வழியாக மொழியாக வடிவமைக்கப்பட்டு வெளிப்படுகின்றது.

மொழியின் உருவத்தை காதுகள் வழியாக மூளைக் கலங்கள் உணருகின்றன.இதனை

இன்னும் கொஞ்சம் இலகு ஒப்பீடாக ஒரு தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் ஒரு பொருளை உதாரணமாக எடுத்துக் கொண்டு பார்க்கையில்,எமது மூளைக் கலங்களில் பதிவிட்ட மொழி உணர்தலை நரம்பு மண்டலங்கள் அறிவிக்க சுவாசப்பைக் காற்றூதல் மொழியின் தன்மைக்கேற்ப குரல் நாண்களை அதிரச் செய்ய,ஒரு தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள்,பொருட்களின் வேறுபாட்டுக்கமைய எவ்வாறு ஒழுங்கமைத்தல் செப்பனிடுதல் என்ற பல நிலைகளைத் தாண்டி வெளியில் வருகின்றதோ அது போல மொழியின் வேறுபாட்டுக்கமைவாக தொண்டைக்குழி வழியாக வாயக்குள் வரும் மொழியொலி அதிர்வுகளை அண்ணாக்கு,நாக்கு பற்கள் என்பவை ஒருவருக்கு தேவையான மொழியை அதற்கமைவான ஒலியாக்கி வாய்வழியாக வெளியே விடுகின்றது.அவ்வாறு வெளியே வருகின்ற வேறு வேறான ஒலிகளுக்குப் பெயர்தான் மொழிகள்.

எனவே மொழி என்பது ஒலிதான் என்பதும் வேறு வேறு மொழிகளின் அடிப்படைத் தரவுகளை மூலைக்கலங்கள் சேமித்து வைத்து ஒருவர் கற்று வைத்திருக்கும் மொழிகளை பேச நினைக்கும் நேரத்தில் அதைப் பேச வைக்கின்ற ஒலிச் செப்பனிடுதலை சுவாசப்பை, காற்று, அண்ணாக்கு, பற்கள் என்பவை செய்கின்றன.

பற்களுக்கு மிகப் பெரும் பங்கு இருக்கின்றது என்றாலும்கூட நாக்கு எமது வாய்க்குள் அங்கை இங்கை என்று தொட்டு எழுத்துக்களின் உருவங்களை ஒலியச்சாக கோர்த்து வாய்வழியச்சாக மொழியொலித் தாளாக வெளியே விடுகின்றது.

மொழிகள் வேறு வேறாக பேசப்படுவதற்குக் காரணமாக,ஒரு மொழியைப் பேசுகின்று மக்கள் தொடர்ச்சியாக வாழுகின்ற நிலத்தைப் பொறுத்தும் காலநிலையைப் பொறுத்தும் குரல் நாண்களில் மாற்றம் ஏற்படுவதாகும்,இந்த மாற்றம் மரபணு வழியாக தொடர்ச்சியாவதால் குரல் நாண்கள் அவரவர்க்கான மொழியை உற்பத்தி செய்துவிடுகின்றன.


உதாரணமாக தமிழர்கள் ஒரு மரத்தை மரமென்றும் சொல்வதற்கும் ஆங்கிலேயர்கள் அதனை ரீ என்று சொல்வதற்கும் குரல் நாணொலி சொல்லொலியாகத் தோற்றம் பெற்றுத் தொடர்வதற்கும் மரபணுத் தொடர்ச்சியே காரணமாகும்.

அதே வேளை மொழிகள் குரல்நாண் வழிச் சொல்லொலிகள் என்ற அடிப்பவீடைக் காரணத்திற்கமையவும் இவை யாவும் ஒருவருக்கொருவர் தொடர்பாடல் மொழியொலி என்பதற்கமையவும் மொழிகளை உயர்ந்தவை தாழ்ந்தவை என்றும் காட்டுமிராண்டிகளின் மொழியெனத் தீர்மானிப்பதும் தவறேயாகும்.

மனிதர்களுக்கு பெயரிடுவதிலிருந்து உலகில் உள்ள அசையும் அசையாப் பொருட்கள் அனைத்தையும் இனம் கண்டறிவதற்காகவும் விளித்தலுக்காகவும் வைக்கப்பட்டவை குறியீட்டொலிகளேயாகும்.ஒலியே மொழிகளின் பிறப்பிடம் என்பதற்கமைய காட்டிடை வாழும் மனிதர்கள் வேறு வேறு விதமாக குரலொலிகள் மூலம் தம்முணர்வை வெளிப்படுத்தலும் அவர்களின் மொழியேயாகும்.

பல் போனால் சொல் போச்சு என்பார்கள்.ஒலிகளை மொழியாக அச்சுக் கோர்ப்பதில் பற்கலுக்கு பெரும் பங்குண்டு.அதே போல நாக்கிற்கும் பெரும் பங்குண்டு.நாக்கும் பற்களும் மொழிக்கான எழுத்துருவை உருவாக்கும் லேத்மிசின் போன்றதே.

பற்கள் இன்றியமையாதது போன்ற நாக்கும் மிக இன்றியமையாததே.நாக்கின் வலுவிழத்தல் ஒலிக்குழறை ஏற்படுத்தி வாய்வழி மொழியொலிச் சிதறலை ஏற்படுத்தும்.



● சாந்தக்கண்ணா

# "புலமும் நிலமும்"

மூன்று தசாப்தங்கள்
முழுதாய்க் கடந்தும்
தாமரையிலைத் தண்ணியாய்
ஒன்றுமே ஒட்டாத ஒரு வாழ்வு

ஊணுக்கு பாணுமில்லா
கொடுநிலை என்றாலும்
கொம்புத் தேனாக இனித்த
தாயக வாழ்வையெண்ணி
இன்னும் தவித்தழுதே மனது

திண்ணையில் கிடந்து - தெருப்
புழுதியில் புரண்டு குரும்பையில்
தேர்கட்டி இழுத்தவர் இன்று
'தெஸ்லாவில்' பறந்தாலும்
ஊரினது வாசமதை உள்ளம் தேடும்

போரது உச்சம்பெற - உயிரை
துச்சமென நினைத்திளைஞர்
தூயவனின் படையிணைய
அச்சமுற்ற பெற்றவரும்
மிச்சமிருந்ததோடு - மீளாக்
கடன் எடுத்து கடல்தாண்டி
எமை அனுப்பி தம் கவலை
தனைக் களைந்தார்

குளிரும், புரியா மொழியும்
இன, நிறவாதம் ஒரு புறம்
ஏதும் இல்லாமை மறுபுறம்
பனிமலைமேல் பனைமரம்
இங்கு படும் பாடு பல நூறு

காசுழைக்கும் கருவியாகி
கடிகாரத்தோடு கடு - கதியாய்
பயணிக்க... ஒய்வென்பதே
எமக்கு ஒவ்வாமையானது

வலிந்து வரவழைக்கும்
வறண்ட புன்னகையும்
கல்வியெனும் பெயரினிலே
பிள்ளைகளின் தலைமீது
பெரும்பாரம் சுமத்தியதும்
கண்டறியா பிணிக்கெல்லாம்
களமாட உடல் தந்ததன்றிக்
கண்டவைகள் வேறென்ன..?

வாலிபம் கரைந்துடலில்
வலிமை நலிந்த பின்னரே
ஏதுமே எமக்கிசையா இப்
'புலத்து வாழ்வு புரிகிறது.

● காவலூர் அகிலன். கிளிநொச்சி.



# மேகா..

இரவிரவாகப் பெய்துகொண்டிருந்த மழை நின்று மரத்திலிருந்த மழைத்துளிநீர் கூரையின் மீது விழுந்துகொண்டிருந்தன. அதன் சத்தத்தை மீறிச் சங்குச் சத்தமும் மணியொலிச் சத்தமும் ஆதியின் காதுக்கெட்டியது திருவெம்பாவைக் காலம் என்பதால் ஊரில் சில இளைஞர்கள் சேர்ந்து வஜனை பாடிவருவதை வழக்கமாக்கியிருந்தார்கள் அப்படி வரும் இளைஞர்களுக்கு சில வீட்டு உரிமையாளர்கள் தேநீர் சிற்றுண்டி போன்றவற்றைக் கொடுத்து அவர்களை ஊக்கப்படுத்துவார்கள் ஆதியும் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என எண்ணியிருந்தான் அதனால் முதல்நாள் நாவல் மரத்தடிக் காளியம்மன் கோவில் சென்று அவ் இளைஞர்களிடம் தம்வீட்டுப் பாதையால் வரும்படி பணித்திருந்தான் அந்த இளைஞர்களும் அதனை ஏற்று ஆதியின் வீட்டுப் பாதையில் பயணம் செய்ய முடிவெடுத்திருந்தார்கள். அதன்படி மறுநாள் அதிகாலை ஆதியின் வீட்டுப் பாதையால் பயணிக்க ஆரம்பித்திருந்தார்கள். தூரத்தில் சங்கூதி மணிச் சத்தம் கேட்டவுடனே ஆதி எழுந்து முழுகிவிட்டு தண்ணீரைக் கொதிக்க வைத்திருந்தான்.

அவர்கள் அருகில் வரும்போது தேநீரை ஊற்றி சிற்றுண்டிகளையும் கொடுத்து அவர்களை

உபசரிக்கலாம் என எண்ணியபடி வாசலில் காத்திருந்தான் பத்து நிமிடங்களின் பின் அவ்விளைஞர்கள் ஆதியின் வீட்டை வந்தடைந்தனர் ஆதி தான் தயாராக வைத்திருந்த சிற்றுண்டிகளை எடுத்துக் கொடுத்து தேநீரையும் பருகக் கொடுத்தான் அவர்கள் குடித்து விட்டு மகிழ்வோடு அங்கிருந்து பயணமாகும் தருவாயில் அவர்கள் கொண்டுவந்த உண்டியலில் ஆயிரம் ரூபாவைப் போட்டுவிட்டு வழியனுப்பி வைத்தான் ஆதி. அவர்கள் தேவாரங்களைப் பாடியபடி தம் பயணத்தைத் தொடர்ந்தனர்.

கேற்றை சாத்தி அதன் தாழ்ப்பாளைப் போட்டுவிட்டு மீண்டும் வீட்டிற்குள் சென்று படுத்துக்கொண்டான்.

பொழுது புலர்ந்தது சூரியன் மெல்ல மெல்ல எழுந்து கொண்டிருக்க கரு மேகங்கள் ஓடிக்கொண்டிருந்தன பறவைகள் கத்தியபடி இரை தேடிப் பறந்தன. அவிழ்த்துவிடப்பட்டிருந்த ஜிம்மி மாடுகளைக் கண்டு குரைத்துக் கொண்டிருந்தது அதன் சத்தம் அவனைத் தூங்கவிடாமல் செய்தது.

எரிச்சலடைந்த ஆதி ஜிம்மியை பேசிக்கொண்டு எழுந்து வந்து அதனைக் கட்டிவிட்டு இருக்கையில் அமர்ந்துகொண்டான். கடிகார முட்கம்பிகள் டிக்..டிக்..டிக் என அடித்து ஓடிக்கொண்டிருந்தது தலையை நிமிர்த்தி மணிக்கூட்டைப்பார்த்தான் நேரம் ஏழு மணி என்பதை காட்டி நின்றது.

அவசர அவசரமாக வெளிக்கிட ஆயத்தமானான் ஆதி. அப்போது மேசையில் இருந்த புத்தகப்பெட்டியொன்று சரிந்து நிலத்தில் விழுந்தது அதில் இருந்த புத்தகங்கள் எல்லாம் வெளியில் பறந்து கிடந்தன. அவற்றை எடுத்து மீண்டும் பெட்டிக்குள் போட்டுவிட்டு எழுந்தபோது நாட்குறிப்பேடொன்று அவன் கண்களுக்குத் தென்பட்டது அதை அவன் பெரும் பொக்கிஷமாகவே பாதுகாத்து வருகின்றான்.

இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டுகாலப்பகுதியில் அந்த நாட்குறிப்பேட்டை மேகா என்கின்ற பெண் ஆதிக்குப் நினைவுப் பொக்கிசமாகக் கொடுத்திருந்தாள் அந்த நினைவுப் பொக்கிசம்தான் இப்போது அவன் கண்களில் சிக்கியிருந்தது.

வேலைக்குப்போகும் நேரத்தை மறந்து அவன் மனது அந்த நாட்குறிப்பேட்டின் நினைவுகள் பற்றி எண்ணத் தொடங்கியது.

அது ஒரு மழை நாள் மேகாவைப் பார்க்கவென வவுனியாவிற்குச் சென்றிருந்தான் ஆதி. நீண்ட நாட்களின் பின் அவளைக் காண்பதற்காக சாலையின் ஓரத்தில் காத்துக்கொண்டிருந்தான் அவளோ அவனைக் காக்க வைக்க வேண்டும் என மனதுக்குள் உறுதிபூண்டு வைத்ததைப்போல் நீண்ட நேரத்தின் பின் வந்திருந்தாள் கோவத்தின் உச்சிக்குப் போயிருந்த ஆதி அவளைக் கண்டவுடன் சாந்தமானான்.

அவள் பேரழகி.. தலைக்கவசத்தை கழற்றி கையிலெடுத்தபடி ஹாய்..என்றாள் காற்றில் பறந்துகொண்டிருந்த தலைமுடிகள் அவள் முகத்தை மறைக்க அதனை எடுத்து காதின் இடுக்கில் சொருகிவிட்டு மீண்டும் ஹாய் ஆதி என்றாள் மேகாவின் முகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த ஆதி திடுக்கிட்டபடி ஹாய்..என்றான் அவள் சிரித்துக்கொண்டே பேச ஆரம்பித்தாள் ஆதியின் கோபத்தனமும், அவனின் நேர்மையான பேச்சும் அவளுக்கு நிறையவே பிடிக்கும் ஆதலால்த்தான் அவனைக் காதலிக்க ஆரம்பித்தாள்.

இருவரும் அருகிலிருந்த தேநீர்ச்சாலையொன்றில் தேநீரைப் பருகியபடி பேசிக்கொண்டிருக்க மழை சோவென அடித்துப் பெய்தது அதன் சத்தம் சாலையின் வாகன ஒலிச்சத்தைத்தை மேவியதாக இருந்தது ஆதி தேநீருக்கான காசைக் கொடுத்துவிட்டு அக் கடையின் வாசலில் வந்து நின்றுகொண்டான் மேகா அவன் அருகில் நின்றுகொண்டு முகத்தைப் பார்த்தபடியே ஆதி..நான் மனதளவில் பாதிக்கப்பட்டவள் என்னைக் கைவிட்டுடாதயடா என்றாள். ஆதி அவள் பக்கமாய்த் திரும்பி அவள் கையை இறுகப் பற்றிக்கொண்டான்.

மேகா நான் உனக்கென இறைவனால் படைக்கப்பட்டவன் நமக்குள் பிரிவென்ற ஒன்று இருக்குமானால் அது மரணத்தின் பிரிவாகவே இருக்குமெனச் சொல்ல அவள் இல்லை அதிலும் இருவரும் சேர்ந்தே செல்லலாம் எனச் சொல்லி அமைதியானாள். அவள் கண்கள் கண்ணீரைப் பனிக்கிக்கொண்டிருக்க ஆதி தன் கைக்குட்டையை எடுத்து மேகாவிடம் நீட்டினான். அவள் அதனை வாங்காமலே தன் விரல்களால் கண்ணீரைத் துடைத்துவிட்டு உந்துருளியை எடுத்துக்கொண்டு பயணமானாள். அவள் பயணிக்கும் திசையை பார்த்துக்கொண்டிருந்த ஆதி மெதுவாய் அங்கிருந்து பேருந்து நிலையத்தை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

அவன் பேருந்து நிலையத்தை அடைந்தபோது யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிக்கக் காத்திருந்த பேருந்தொன்று மெதுவாய் பயணித்துக்கொண்டிருந்தது.

ஓடோடிச் சென்று அதில் ஏறிக்கொண்டான்.ஜன்னல் கரையோரமாக இருந்த இருக்கையொன்றில் அமர்ந்துகொண்டு அதன் கண்ணாடியை இழுத்துத் திறந்து விட்டான் மழை நின்ற கையோடு எழுந்த காற்று மிகவும் குளிர்ச்சியாக அவன் முகத்தில் வீசியது அந்தக் குளிர்ச்சியான காற்றின் வருடலோடு மெல்லத் தலை சாய்த்துக் கண்ணயர்ந்தான் ஆதி. அவன் தூங்கிய சில நிமிடங்களில் யாரோ ஒருவர் தம்பி கொஞ்சம் அரக்கி இருக்கிறீங்களா..? என தட்டியெழுப்பிக் கேட்க உறக்கத்தைக் கலைத்துக்கொண்டு எழுந்து தட்டியவரைப் பார்த்தான். அது அவனோடு கல்வி பயின்ற ஆதிரா எனும் பள்ளித்தோழி அட..நீயாடி..? என்றபடி எழுந்து ஜன்னல்க்கரை இருக்கையை அவளிடம் கொடுத்தான் அவள் நிறைமாதக் கர்ப்பிணி என்பதை அவள் உருவ மாற்றத்தை வைத்து அவன் அறிந்துகொண்டான் இருக்கையில் இருந்த ஆதிராவை நலம் விசாரித்து விட்டு மீண்டும் முன் இருக்கையில் கையை வைத்துத் தூங்கத் தயாரானான்.

ஆதிரா அவனைப் பார்த்து ஆதி நீ கல்யாணம் செய்திட்டாயாடா..? என்றாள்.

மெல்லத் தலையை உயர்த்திய ஆதி சிறு புன்னகையுடன் இல்லடி எனச்சொல்லிவிட்டு மறுபக்கம் திரும்பினான் அவள் ஏன்டா..?ஏன்..?வயசாகிட்டே போகுது நீ இப்புடியே இருக்கப்போறீயா..? எனக்கேட்க அவள் முகத்தை பார்த்து இல்லடி நான் ஒரு பொண்ணக் காதலிச்சிருக்கன் அவளும் என்னக் காதலிக்கிறாள் ஆனால் அதில ஒரு சின்னச் சிக்கல் இருக்கு அதுதான் பயமா இருக்கு எனச் சொல்லிவிட்டு அவள் முகத்தைப் பார்த்தான்.

அவள் என்ன பிரச்சனைடா சொன்னால்த்தானே உன் பிரச்சனைக்குத் தீர்வு காணலாம் என்பதாய் அவனுக்குச் சொல்லிட பிரச்சனையைச் சொல்ல ஆரம்பித்தான் ஆதி.

பயணித்துக்கொண்டிருந்த பேருந்து அதன் வேகத்தை சற்று அதிகரிக்க ஜன்னல் கண்ணாடியை இழுத்துச் சாத்திவிட்டு நீ சொல்டா எனக் கூறியபடி அவன் பக்கம் திரும்பினாள்.

இல்ல ஆதிரா அந்தப் பொண்ணுக்கு ஏற்கனவே கல்யாணமாகிட்டுது ஏதோ ஒரு கருத்து முரண்பாட்டில இருவரும் பிரிஞ்சிட்டாங்க பிரிஞ்ச கையோடயே அவன் வேற கல்யாணமும்

கட்டிற்றான் இப்ப விவாகரத்துக்கான வழக்கு நடந்திற்று இருக்குது.

ஆனால் அவள் இப்ப என்ன உசிருக்கு உசிரா லவ் பண்றாள் நான்தான் உலகமெண்டு வாழ்றாள் ஆனால் எனக்கு எங்க வீட்ட ஏற்பினமா எனச் சொல்லத் தெரியல அவளுக்கு வேற உன்னத்தான் கட்டுவன் எனச் சொல்லியிருக்கன் இப்படியிருக்கும் போது எங்க வீட்ட அவள கட்ட வேணாமென்டுற்றால் நான் என்ன பண்றது அவள்ட கதிதான் என்னவாகும்..? இப்புடியே யோசிச்சு யோசிச்சு பயந்துட்டிருக்கன் நான் செய்யிறது சரியா பிழையா என்டும் தெரியல ஒரே குழப்பமா இருக்குடி நீயாவது சொல்லு நான் என்னதான் பண்ண..என்றான் ஆதி.

ஏய் நான் சொல்றன் என்டு கோவிக்காத வாடிய பூச் சூடினாலும் சூடின பூச் சூடாதே எனப் பெரியவங்க சொல்லுவாங்க அது என்னவோ மெய்தான் இப்ப நீ கல்யாணம் செய்திட்டுப் போயிருவாய் கொஞ்ச நாளில சண்டை சச்சரவு என வந்துபோகும்.

ஏன் உனக்கு உந்தப் பிள்ளைய விட வேற பிள்ளையே கிடைக்கலயா..? பேசாமல் விட்டுப்போட்டு வேற ஒரு நல்ல பிள்ளையாப் பாத்து கட்டு அல்லது வீட்ட பாக்கிற பிள்ளையைக் கட்டு அத விட்டுற்று சும்மா தேவையில்லாமல் போய் உவளுகள்ட வலையில மாட்டிராதடா..எனச் சொல்லிவிட்டு மெதுவாக எழுந்து தான் இறங்குமிடத்தை நடத்துனருக்குக் காட்டி பேரூந்தை விட்டு இறங்கினாள்.

ஆதி இத்தனை நாட்களாய் வீட்டுக்காரர்ட பாக்கத்தாலதான் பிரச்சனை வரும் என நினைத்துக் கொண்டிருந்தான் ஆனால் ஆதிரா கூறியதைப் பார்த்தால் எல்லாப் பக்கத்தாலும் பிரச்சனை வரும்போல எனப் பயந்தான்.

எப்புடியாவது மேகாவை சமாளிச்சு வேற ஒருவனைப் பார்க்கச் செய்துவிட்டால் சரி நானும் ஒதுங்கிடலாம் என எண்ணியபடி பேரூந்தை விட்டு இறங்கி நடக்கத் தொடங்கினான்.

அந்த நேரத்தில் ஆதியின் தொலைபேசி அலறியது அதனை எடுத்துப் பார்த்துவிட்டு அழைப்பைத் துண்டித்தான் மறுபடியும் அழைப்பு வந்தது அப்போது அழைப்பை ஏற்று மேகா இனி நீ எனக்கு அழைப்பெடுக்காத எங்க வீட்ட எனக்கு பொண்ணுபாக்குறாங்க உன்ன ஏற்கிற நிலையில எங்க வீடும் இல்லை

சும்மா காலத்தை வீணாக்கி உன்னையும் நோகடிக்க விரும்பல தயவு செய்து இனி கோல் பண்ணாத எனச் சொல்லிவிட்டு அழைப்பைத் துண்டித்தான். அவள் ஆதி பேசுவதைக் கேட்டுத் துடித்துப் போனாள் அவன் பொய் பேசுகிறான் என எண்ணி மனதைத் தேற்றிக் கொண்டு மீண்டும் அழைப்பெடுத்தாள் அவனது தொலைபேசி இலக்கம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகக் கூற மனமுடைந்துபோனாள். காலை மாலை என மறுபடி மறுபடி அவனது தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்துக்கொண்டிருந்தாள் மேகா.

அவனது நம்பர் இயங்கவே இல்லை இப்படியே நாட்கள் உருண்டோடின அவளும் மெல்ல மெல்ல ஆதியின் நினைவுகளை மறந்து வாழ ஆரம்பித்தாள்.

நாட்குறிப்பேட்டை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்த ஆதியின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகி வடிந்தோடியது தான் மேகாவிற்குச் செய்தது தவறென்பதை உணர்ந்தவனாக எழுந்து நடக்கத் தொடங்கினான்.

ஆதி வெளியே செல்வதை பார்த்த தாயார் தம்பி..கொஞ்சம் நில்லுடா இங்க பார்

இந்தப் பொண்ணு நல்லாப் படிச்ச பொண்ணு ஏதோ கலியாணம் செஞ்சு விவாகரத்து ஆகிடுச்சாம் ஆனால் என்ன பார்க்க லட்சுமிபோல அழகாய் இருக்காள் நல்ல குணம் வேறயுமாம் எனக்கென்டால் பிடிச்சிருக்கு நீ பார்த்துட்டு உனக்கும் ஓகே என்டால் நல்லதம்பி புறோக்கர்டப்போய் குறிப்ப வாங்கிட்டு வா பொருத்தம் பார்ப்போம். என்றபடி படத்தைக் கையில் கொடுத்தாள் மீனாட்சி. வேண்டாம் வெறுப்பாய் படத்தை வாங்கிய ஆதி அதை அங்கேயே போட்டுவிட்டு எழுந்து நடக்க ஆரம்பித்தான்.

ஆனாலும் அவனது மனம் விவாகரத்து ஆன பிள்ளையென்றவுடன் அந்தப் படத்தைப் பார்க்க ஆவல் கொண்டிருந்தது மீண்டும் வந்து படத்தை எடுத்துப் பார்த்தான் மேகா தேவதை போல காட்சியளித்தாள்.

சந்தோசத்தின் மிகுதியால் துள்ளிக்குதித்தான் ஆதி தாயைக் கட்டியணைத்துத் தான் மேகாவை காதலித்ததையும் பின்பு பிரிந்தமையையும் கூறினான். மீனாட்சி ஆதியைத் தடவியபடி எனக்குத் தெரியும்டா எல்லாத்தையும் ஆதிரா எனக்குச் சொல்லிட்டாள் நான்தான் அந்தப்பிள்ளைய தேடிப்பிடிக்க கஸ்ரப் பட்டுற்றன் நாளைக்கு மேகா வீட்டுக்கு வாறென்டு சொல்லிருக்கன் விடியவே எழும்பி வெளிக்கிட்டிரு பிறகு மழையுக்க நனையவேண்டி வந்திரும் என்றபடி தன் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினாள் மீனாட்சி

அன்றைய நாள் நினைவு முழுதும் மேகாவை எப்படிச் சமாளிப்பது அவள் என்னைக் காணும்போது என்ன நினைப்பாள் என்பதாகவே ஆதியின் சிந்தனை இருந்தது

மறுநாள் காலை ஆதி எழுந்து அவசரவரமாக குளித்து வெளிக்கிட்டு அம்மா போலமா என தாயாரிடம் கேட்க தாயாரும் சிரித்தபடி அங்க நாங்க போகத் தேவையில்லை அவங்கதான் இங்க வாறாங்க எனக் கூறிக்கொண்டிருக்க வான் ஒன்று கேற்றுக்குள் வந்து நின்றது மேகாவும் அவளின் தாய் தந்தையர் உறவுகளும் இறங்கி வீட்டிற்குள் வர மீனாட்சி எல்லோரையும் வரவேற்று இருத்திவிட்டு தேநீர் ஊற்றச் சென்றாள்.

அறையினுள் நின்ற ஆதி மேகாவை எட்டிப்பார்த்து மெதுவாய்ச் சிரித்திட அவள் அவனைக் கண்டுகொள்ளாமல் எழுந்து மீனாட்சியோடு சேர்ந்து தேநீரை ஊற்றிப் பரிமாறினாள்

ஆதி மேகாவை வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருக்க மேகா மெதுவாய் வந்து இருக்கையில் அமர்ந்துகொண்டாள் மீனாட்சியும் மேகாவின் தாய் தந்தையரும் பேசிக்கொண்டிருக்க மேகா எழுந்து அம்மா என்னை மன்னிச்சிடுங்க உங்க மகனை உசிருக்கு உசிரா காதலிச்சதென்னவோ உண்மைதான் ஆனால் அந்தக் காதல் இந்த மனசில கிடந்து உக்கிப்போச்சு இரவு பகலா நான் அனுபவிச்ச வேதனைகள் என்னோடயே முடிஞ்சு போகட்டும் நான் ஆதியக் கூடாதென்டு சொல்லவரல்ல ஆனால் இனி என்னால ஆதியோட வாழமுடியுமா என்டும் தெரியல ஒரு பொண்ணு துன்பப்பட்டிருக்கும் போது அவள மேலும் மேலும் துன்பப் படுத்தினால் அவளால என்னதான் பண்ண முடியும் நானெல்லாம் எப்பவோ இந்த மண்ணுக்கு உரமாக வேண்டியவள் ஆனால் என்ர மனசு இந்த மண்ணில கணவனை இழந்து பிரிந்து வாழ்ற பெண்களுக்கு ஏதாவது நல்லது செய்துட்டுப் போகனுமென்டு சொல்லிச்சு அதனாலதான் இன்னும் வாழ்ந்திட்டிருக்கன் ஆதி..! உன்ன காணாமலே போயிருவனோ என்டு பயந்திட்டிருந்தன் இப்ப மனசுக்கு பெரும் ஆறுதல் இது போதும் எனக்கு அடுத்த பிறப்பிருந்தால் நிச்சயமாக உனக்கு மனைவியாக உன் அம்மாவுக்கு நல்ல மருமகளாக வருவேன் எனக்கூறிவிட்டு எழுந்து வான் நிற்குமிடத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

● அ.லில்லி ஏஞ்சல் (முத்தமிழ்),
திருக்கோவிலூர்

# வாழ்வில் நாம் தொலைத்த வள்ளுவ நெறிகள்.

**குறள் எண்:183.**

*புறம்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்*

*அறம்கூறும் ஆக்கம் தரும்.!*

*ஒருவன் இல்லாதபோது இகழ்ந்தும் உள்ளபோது புகழ்ந்தும் பேசி உயிர்வாழ்வதைவிட சாதல் அறப்பயனை அளிக்கும்.இது வள்ளுவ நெறி. இன்று புறம் பேசுதலையே பொழுது போக்காகக் கொண்டு..நேரத்தை வீணாக்குவதுடன் மற்றவரின் துன்பத்திற்கும் வயிற்றெரிச்சலுக்கும் காரணமாக விளங்கக்கூடிய ம(மா)க்களை நாம் எங்கும்பரவலாகக் காண்கிறோம். நீதி நூல்களெல்லாம்,குறைகளை உரியவரிடத்தும் நிறைகளை பிறரிடத்தும் கூறவேண்டும்.என கற்பிக்கின்றன.*

*சிலர் ..ஒருவர் முன் அவரை ஆகா..ஓகோ..வெனப் புகழ்தல்..ழ்ஆயிரந்தான் சொல்லு.. உங்களைப் போல் ஆகுமாயு.. எனப்புகழ்ந்து.. அவர் அவ்விடம் விட்டகர்ந்ததும்.. "தூற்றிப்பேசுவது"..*

*அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சொல்லி.. வயிறு வளர்ப்பது.. காரியம் சாதிப்பது என்றுள்ளனர்..! அதிகார வர்க்கம்.. அரசியல் வட்டத்தில் இது இன்னும் ஒருபடி மேலே சென்று.. என்னவெல்லாமோ செய்கிறது..!*

*சிலபோழ்து.. புறம் பேசித் திரிவோர்தம்*

*குட்டு வெளிப்பட்டு இரு தரப்பாரிடமும்*

*குட்டு பட நேரிடும்! அச்சமயத்தில்*

*தாம் சொன்ன கருத்தை மாற்றியோ திருத்தியோ கூற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக நேரிடும். எனவே.. உள்ளதைச் சொல்லவும், உண்மையைப் பேச மட்டுமே முற்படுதல் நன்று! "நாண் என்பது வில்லின் வலிமை"*

*"நாணயம் என்பது சொல்லின் வலிமை"! ஆகும்*

*எனவே புறங்கூறாமல்.. புரட்டிப் பேசாமல்.. புறம்களைவோம்.. மற்றவரின் திறம் கூறுவோம்.. அதிலும்... அறம்கூறுவோம்..! வள்ளுவத்தின் நெறிகளை மீட்டெடுப்போம்!*


*தித்திக்கும் முப்பாலின் புகழ் எத்திக்கும்..பரவட்டும்! நாமும் பருகுவோம் நம் தலைமுறைக்கும் உவந்தளிப்போம்!*

• வெ.ஹேமந்த் குமார், ஈரோடு

## மறைந்த வானம்!


வானம் தேடி
தூரம் நடந்தேன்,
இறக்கை முளைத்து
எல்லை பறந்தேன்;
காணும் பொழுதில்
நீலம் மறைந்தது,
இருள் ஒளிர
விழி வலித்தது!

வாடிய முகத்துடன்
விழுந்து கிடந்தேன்,
வாகன விபத்தில்
சிறகுகள் இழந்தேன்;
நான் தேடிய
வானம் தெரிகிறது,
என் மனதில்
சிறகு முளைக்கிறது.




பா.சிவகுமார்

## சிறகுகளின் மொழி!



பறவையின் சிறகுகளில்
ஒட்டிக் கொண்டுள்ளது
தினந்தோறும்
நீரையும் சோறையும்
பரிமாறும் பரிவான
மெல்லிதயம் கொண்டவர்கள்
மீதான நன்றியுணர்வு!
பசியாறி விட்டு
பறக்கும் பறவைகளின்
ஒவ்வொரு சிறகடிப்பிலும்
காற்றில் உதிர்கின்றன..
க(ம)னம்மிகு நன்றிகள்!

● ந. கிருஷ்ணசிங்கம்



# சகுந்தலா தந்ததுயர்.. .

எனதுபெயர் சிவநாதன். நான் மட்டக்களப்பு மாவட்டத்தின் புறநகர்பகுதில் பதுளை வீதியில் கரடியனாற்று அரசமரத்துச் சந்தியிலுயுள்ள எங்களின் சொந்தவீட்டில் வசிக்கின்றேன்.

வயல்களும் சலசலத்து நீர்பாயும் கால்வாய்களும் இங்குநிறைந்ததினால் எங்களின் கிராமம் பயிர்வளம்மிக்கது. பார்வைக்கு இச்சையூட்டும் பச்சையுடுத்த பூமியிது.

பயிற்றங்கொடியும் பாகற்கொடியும் படர்ந்த வேலிகளினுள்ளே மரவள்ளி கத்தரி வெண்டைக்காய் வெங்காயம் பூசனிக்காய் முதலானயாவும் விளையும் தோட்டங்களும் கனிமரங்களும் இருபோகநெல்விளையும் வயல்களும் சூழ்ந்த காணிகளுள்வாழும் எம்மை வறுமைவந்து விரைவில் தீண்டுவதில்லை.

மாடு ஆடு கோழிகள் என்று பயன்தரும் பிராணிகள் வளரும் பண்ணைவீடு என்தன் இல்லம். கமநலசேவைத் திணைக்களத்தில் உத்தியோகம்பார்த்து ஓய்வுபெற்ற எனது தந்தையார் கந்தசாமி எமதுவளவில் கட்டியகடையில் பலசரக்குக்கு வியாபாரம் செய்கின்றார். நான் பத்தாம் வகுப்போடு பாடசாலைக் கல்வியைநிறுத்தியது அப்பாவுக்கு மிக்ககோபத்தை மூட்டியது.

எடமூதேசி! தோட்ட வேலையளையாவது ஒழுங்காகப்பாரடா.

என்றுபேசி அதட்டினார். எனது அண்ணன் சண்முகநாதன் சட்டத்தரணியாகி இப்பொழுது பெரும்புகழளோடு மட்டுநகரில் தொழில்நடத்திவருவதைச் சுட்டிக்காட்டி கண்டபடி என்னைத்திட்டுவார். எனக்குப் புத்தகங்கள் படிப்பதிலும் கவிதைகள் எழுதுவதிலும் ஆர்வமதிகம்.

செங்கல்லடிக் கறுத்தப்பாலத்து முகாமிலுள்ள ஆமிக்காரர்கள்ஜீன் கெடுபிடியான செயற்படுகள் அதிகரித்ததால் அண்ணர் வீட்டுக்குவருவதைக் குறைத்துக்கொண்டு மாமியார் கலைமகள் அவர்களின் இல்லத்தில் தங்கியுள்ளார்.

எனது தாயார் அன்னலெட்சுமிக்கு என்மேல் மிகுந்தபிரியமும் இரக்கமும் இருப்பதால் அப்பாவை எதிர்த்து எனக்காகவாதாடுவார். அப்பாவி;ன் சுறுசுறுப்பையும் உடலுழைப்பையும் எனக்குள் பாராட்டிக்கொள்வேன். அவரின் கடைக்குத் தேவையான பொருட்களை வாங்கிவந்து கொடுப்பேன்.

மட்டுநகருக்குச்சென்று சாமான்களை வாங்கிவரும் வேளைகளில் கறுத்தப்பாலத்தடிக் காம்பிலுள்ள ஆமிக்காரன்கள் எனது றைக்டர்வண்டியை மறித்துமிரட்டிப் பொருட்களை எடுத்துச்செல்வதால்..

நான் இப்போது பதுளைநகர் வீதியிலுள்ள துமிந்தபுரத்திற்குச்சென்று சாமான்களை வாங்கிவருவேன். இதனால் கொஞ்சம் சிங்களத்திற் கதைக்கவும் கற்றுக்கொண்டேன். எனக்குள் தன்னம்பிக்கையையும் துணிவையும் அதுதந்தது. பேரம்பேசி வாதாடிப் பொருட்களைக் கொள்வனவுசெய்யும் வலிமையென்னுள் வளர்ந்தது. என்னால் எதையும் சாதிக்கமுடியுமென்ற தெம்பும்மிகுந்தது.

இன்று பொன்னம்பலம் போடியார் ஆள்விட்டு என்னை அழைத்திருந்தார். மிகுந்தமகிழ்ச்சியோடு நான் அங்குசென்றேன். எனினும் மனத்திற்குள் ஒரு அச்சம் இருந்தது. எனக்கும் அவரின்மகள் சகுந்தலாவுக்குமிடையே இருக்கும்; காதலை அவரறிந்து மிரட்டத்தான் கூப்பிடுகின்றாரோ என்றெண்ணியவாறு தயக்கமோடு அங்குசென்றதும் வியப்புத்தரும்வண்ணம் போடியர் புன்னகைபுரிந்தவராக என்னை வரவேற்று அமரவைத்துப் பேசத்தொடங்கினார்.

எடதம்பி..! என்ரைறைக்டர் றைவர் என்னோடை கோபித்துக்கொண்டு வேலையைவிட்டு விலகிப்போட்டான். உழவுநடக்கின்ற இந்தப்பருவத்திலை இப்படியாய்ப்போச்சுது. அதுதான் உன்னை றைக்டரோட்டக் கேக்கலாமெண்டு யோசிச்சனான். இந்தவுதவியைச்செய்ய உன்னைப்போலொருவர் எனக்குக் கிடைக்காது.

என்றவர் சொல்லவும் நான் சம்மதம்கூறிவிட்டு மனத்துள் மகிழ்வுபொங்க விடைபெற்றநேரம் என்காதலி சகுந்தலா புன்னகை புரிந்தவாறுவந்து தேநீர்தரவும் அமர்ந்து சுவைத்துப் பருகினேன்.

எங்களின் காதல் பாடசாலையில் ஆரம்பித்தது. அதுநாளும்பொழுதும் வளர்ந்து இப்போதெல்லாம் இருவரும் மறைவிடங்களில் சந்தித்து உரையாடிக்கொள்ளும் துணிவுபெற்றது. நாம் சேர்ந்துவாழும் குதூகலமான காலத்தை வென்றெடுப்போம். என்றெல்லாம் பேசிக்கொள்ளுவோம்.

சகுந்தலாவின் வீட்டிற்குப் பின்புறத்திலுள்ள ஆவரசம்பூமரப் பற்றைகளும் மூங்கில்படர்ந்த ஒடைக்கரையும் எமது சந்திப்பின் மறைவிடங்களாகின.

இனிமைமிகு எதிர்காலம்குறித்துப் பேசுவோம். கரமிணைத்து மல்லுக்கட்டிப் பொய்வீரம்;புரிவோம். அக்கம்பக்கம் பார்த்துமருண்டவாறு மெல்லச்சிரிப்போம். கோபித்தும் சமாதானமுற்றும் சந்தோசப்படுவோம்.

இரவுபகல் எந்நேரமும் மனத்துள் சகுந்தலா தோன்றிச்சிரிப்பாள். அந்தப்பேரழகின் மேனிவளைவுகளை வர்ணித்து நான் கவிதைகள் எழுதிமகிழ்;வேன்.

அரசமரத்தடிச்சந்தி.. என்ற நாமத்தைதந்த அந்த முதுபெரும் அரசமரம்நிற்கும் காணி சகுந்தலாவின் தந்தையார் பொன்னம்பலம் போடியாருக்குச் சொந்தமானது. அது அவரது பரம்பரைச்சொத்து.

அந்தநிலத்தை அரசபௌத்தசமய அபிவீஜீருத்தியமைச்சு விகாரை அமைப்பதற்காகச் வீகரித்துக்கொள்ளவே.. போடியார் அதை அனுமதிக்கமறுத்து வழக்குத்தொடுத்தார். எனது அண்ணர் அப்புக்காத்து சண்முகநாதன் அந்தவழக்கில் போடியார்பக்க வக்கீலாகத்தோன்றி அரசின் நடவடிக்கையை எதிர்த்து வாதாடினார்.

புத்தசாசனஆய்வுகள் சம்பந்தமான இழுபறிகளைத்தாண்டி எனது அண்ணரின் வாதத்திறமையினால் வழக்கு விரைவில் முடிவுக்குவந்தது. அந்தக்காணிக்குப் பதிலாகப் போடியாருக்கு வயல்நிலமொன்று இலவசமாக அரசால்வழங்கப்பட்டது.

அருவிநீர்வசதியுள்ள அந்த இருபோகச்செய்கை நிலத்தைப் பெற்றுத்தந்த எனது அண்ணரின் வாதத்திறமையைப் போற்றிப்புகழ்த போடியார் தனது இல்லத்தில் அவருக்குப் பெரியதொரு விருந்துபசாரம் நடத்தினார்.

சகுந்தலாவும் தாயாரும் அவருக்கு உணவுபரிமாறினர். நான் அனைத்தையும் அவதானித்தேன். சகுந்தலா வைத்தவிழிவாங்காது எனது அண்ணனையே நோக்கிக்கியபடி நின்றாள்.

அவரின் சிவந்தநிறமும் சுருண்டதலைமுடியும் கம்பீரமான உயர்ந்ததோற்றமும் புன்னகையரும்பும் முகமும் அதன்வசீகரமான அமைதியும் கூர்மையான விழிவீச்சும் இனிமையானபேச்சும் அவளைக் கவர்திருக்கவேண்டும்;.

இந்தநிகழ்வுமுடிந்த மூன்றாவதுநாள் போடியார் பொன்னம்பலம் அவரின் மனைவியாரோடு எங்களின் வீட்டுக்குவந்து தமது மகளுக்கும் எனது அண்ணனுக்கும் கலியாணம் பேசினார். அப்பாவும் அம்மாவும் அளவிடற்கரிய மகிழ்ச்சியோடு அதற்குச் சம்மதம்சொல்லவே..

எதற்கும் உங்களின்ரை மகனை ஒருக்கால் கூப்பிடுங்க அவரின் சம்மதத்தையும் கேட்டுத்தெரிந்தால் நல்லதல்லவா என்று போடியார்கூறவும்.

அப்பா அண்ணரை வரவழைத்து அமரவைத்து இந்தக் கலியாணப்பேச்சின் விபரத்தை விளக்கினார். அவர் வியப்போடு சற்றுயோசித்தவாறு தாமதித்து புன்னகையுதிரப் பேசினார்.

உங்களின் மகளின் விருப்பத்தையும் கேட்கவேண்டுமல்லவோ..

என்றவர்சொல்லவும். போடியாரின் மனைவியார் வெட்கப்;பட்டவராகச் சிரித்தபடி

எங்கடைமகள் சகுந்தலாதான் இவரிலை விருப்பப்பட்டு எங்களை இஞ்சை அனுபினவள்..

என்றுகூறவும், அண்ணரும் எந்தவிமறுப்புமின்றி மலர்ந்தமுகத்தோடு தனது சம்மதத்தைத் தெரிவிக்கவே..

எனது தலையில் இடிவிழுந்ததுபோன்று அதிர்ச்சியடைந்தேன். நான் இரவுபகல் எந்நேரமும் கட்டியமனக்கோட்டை உடைந்துசிதறி வீழ்ந்ததாக உணர்ந்தேன்.

சகுந்தலாவைப் பிடித்துஉலுப்பிக் கண்டபடிபேசவேண்டும் என்று எனது கோபமனம் துடித்தது. அவள் அண்ணனின் பொண்டாட்டியாகப் போகின்றாளேயென்ற பொறாமைத் தவிப்பின்வேகம் என்னைத் தாறுமாறாகச் சிந்திக்கவைத்தது.

இவர்கள்பேசியது உண்மைதானா. அவளின் உடன்பாட்டோடுதானா இந்தமுடிவு எடுக்கப்பட்டது. என்னுள் அடர்ந்துபடர்ந்த கேள்விகளுக்கு விடைகாணமுடியாது அதிர்ந்து கொதித்தவனாகத் திணறினேன்.

இரவுபெய்த பெருமழையோடு எனது கண்ணீரும்சேர்ந்து சொரிந்தது. நித்திரைவரமறுத்தது. இதயத்துடிப்பு காதுகளை அதிரவைத்தன.

படுத்திருந்தபாய் கிழியும்வரை காலால் உதைத்தேன். என்னையுசிப்பிய கோபத்தால் உரத்துச் சப்பதம்போட்டேன். விசர்பிடித்து உறுமினேன். மறுநாள் காலையில் தாயார்கேட்டார்..

என்னடா! இராத்திரிக் கூடாதகனவுகண்டனியே. ஏதோபெரிசாய்ப் புசத்திக்குழறினாய். தலைமுழுகிப்போட்டு காளிகோவிலுக்குப்போய் கற்பூரம்கொழுத்திக் கும்பிட்டு ஐயரிட்டைசொல்லி உச்சியிலை திருநீறு சாத்தவை.

என்றுசொல்லவும் அப்பாவியான அம்மாவின்மேல் அனுதாபம்வந்தது.

சிலதினங்கள்தாண்டி வீட்டுக்குவந்த போடியார் அப்பாவோடு கலியாணவீடு எப்படியெல்லாம் நடக்கவேண்டுமென்று விளக்கிக்கொண்டிருந்தார். ஆவலோடு ஆவவென்று கேட்டபடி அப்பா தலையையாட்டிச் சந்தோசமிகுதியால் உரத்துச்சிரித்தார்.

எங்கடைவீட்டு முற்றத்தில் சொக்கட்டான் பந்தல்போட்டு சோக்காகச்சோடித்து பெரியமணவறைவைத்து மூன்றுகூட்டம் மேளம்பிடித்து மூன்றுகுருக்கல்கள் ஓமம்வளர்த்;து மந்திரங்களோத எனது செல்லமகளின் கழுத்தில் தாலியேறவேணும்.

அத்தோடு அயலட்டத்தில் உள்ளவர்களையும் என்ரைவயல்களிலை வேலை செய்கிறதுகளைம் அழைத்துச் சாப்பாடுகொடுத்து அன்பளிப்புகளும் வழங்கவேண்டும் என்றது என்ரைமகளின்ரை கட்டளை.

இத்தனை ஆடம்பரமான அலங்காரப் பேச்சுக்களையும் கோட்டநான் பொறுமையிழந்தவனாக எழுந்து தரையதிரக் கால்கள்மிதித்தவாறு அங்கிருந்து அகன்றேன்.

ஒருவாரம்கடந்தது. கலியாண அடுக்குகள் அதிவேகமாகத் தொடர்ந்தன. அப்பா வேலைகளைச்சுமத்தி என்னை அங்குமிங்கும் அலையவைதார்.

துமிந்தபுரத்துக்கு றைக்டரில்போய் சாமன்களை வாங்கிவந்தேன். தவறவிட்ட சாமான்களுக்காகாச் சையிக்கிலில் பலமுறைபோய் எம்மூர்முகப்பிலுள்ள சந்தைக்கடைகளில் பொருட்களை வாங்கினேன்.

கார்வைத்திருக்கும் அண்ணரை வெளியால் செல்லவேண்டாமென்று அப்பா கட்டளையிட்டுவிட்டு என்னைத்தான் எல்லாவற்றிற்கும் ஏவிக்கொண்டிருந்தார்.

உள்ளம் உலர்ந்தவனான என்னுள் கோபத்தணல்மூளவே வேகமொடுத்த வேதனையோடு என்றுமில்லாதவாறு எல்லோரையும் எதிர்த்துப் பேசலானேன்.

கண்மடலகள்; நிறைந்துவளிந்த கண்ணீரைத் துடைத்தபடிதிரியும் என்னைப் பாசம்காட்டும் தாயர்கூடக் கண்டுகொள்ளவில்லை. எல்லோரும் கலியாண அமளியில் மூழ்கிப்போனார்கள். வேலையாட்கள் என்னிடம் கேள்விகள்கோட்டு மென்மேலும் சினத்தைமூட்டினார்கள்.

பெறுமையிழந்த என்னுள் புயல்எழுந்தது. கொட்டும் இடியும் கொடி மின்னல் வீச்சும் எனக்குள் தோன்றி இரவுபகல் எந்நேரமும் என்னைவருத்தியன.

நான் உயிராய் நேசித்தவள். மடைதிறந்த உணர்ச்சிகளை என்மனதுள் உயிற்பித்தவள். எனக்கேசொந்மென நான் முடிவெடுத்த சகுந்தலா அண்ணணின் மனைவியாகி அண்ணியாகி

இந்தவீட்டை ஆளப்போகின்றாள் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

போடியார் தனது விசாலமான வீட்டுமுற்றத்தில் சொக்கட்டான்பந்தல் போட்டுவிட்டார். மணவறையும் வைக்கப்பட்டுவிட்டது. அழைக்கவேண்டிய அனைவருக்கும் அறிவித்துவிட்டார்.

இந்த வேளையில் கொரணாநேய்த் தொற்றையும் அதற்கான கடுமையான சமூகஇடைவெளிபற்றிய விளக்கத்தையும் ஊர்முழுதும் ஒலிபரப்பினர். இவற்றை மீறிநடப்போர்மீது இராணுவம் தகுந்ததண்டனை வளங்குமென்ற எச்சரிக்கையையும் விடுத்தனர்.

கலியாணவீட்டு ஏற்பாடுகள் கைவிடப்பட்டு பதிவுத்திருமணத்தோடு தாலிகட்டும்முடிந்தது. சகுந்தலா தனது ஆடம்பரமான மாளிகைவீட்டைத் தவிர்த்து அண்ணரையும் அழைத்தவந்து எங்களின் வீட்டிலையே நிரந்தரமாகத் தங்கிவிட்டாள்.

அவர்களின் தேன்நிலவின் மகிழ்வும் தென்றலில்மிதக்கும் ஆனந்தச்சிரிப்பும் எங்களின் வீட்டுக்குள்ளேயே நிகழ்ந்தன. அவளின் சிருங்காரச் சிணுங்கல்கள் எனது காதுகளைக் கருக்கின. நெஞ்சினுள் எழுந்தபெருமூச்சை நிறுத்தமுடியவில்லை. தினமும் நித்திரையற்று யோசித்தேன். வேதனைகளுக்கு முடிவுகண்டு விடுதலைக்கு வழிதேடமுயன்றேன்.

எனது அப்பாவின் தங்கையாரும் பல்கலைக்கழகப் பேராசிரியரும் மட்டுநர் கல்லடிஉப்போடையில் வசிப்பவருமான மாமியார் கலைமகளுக்கு எனது காதல் கதைகளையும் அதன் ஏமாற்றத்தையும் இன்றைய மீளாவலிமிகு வாழ்வையும் சித்தசுவாதீனமுற்ற நிலைமையையும் விளக்கியவனாகத் தொலைபேசித் திரையில்தோன்றிக் கதைத்தேன்.

தணற்பொறிகளாய் நான் இறைத்த விசாலமிகு வார்த்தைகளின் உள்ளார்ந்த நியாயத்தைத் தெரிந்தெடுத்துப் புரிந்துகொண்டு.. மாமியாரும் அவரின் கணவரான பேராசிரியர் பேரம்பலம் மாமாவும் வெகுநிதானத்தோடு எனக்கு ஆறுதல்கூறினார்கள்.


கவலைப்படாதை. உங்குநீயிருப்பது எள்ளளவும் இனிமேல் பொருத்தமில்லை. உன்னுடைய காதற்கதை உன்னுள்ளேயே அமுங்கிப்போய் அழிந்துபோகவேணும். அதுவுனக்கும் உன்னைச்சார்ந்த அனைவருக்கும் நல்லது. நாங்களும் நீசொன்ன அனைத்தையும் மறந்து அவையாவையும் ஒருகனவகக்கருதுவோம்.

எங்கடைவீட்டுக்;குவா பிள்ளைகளில்லாத எங்களுக்கு இனிமேல் நீதான்பிள்ளையாக இருக்கவேணும். இதுகுறித்துப் பெரிதாகயோசிப்பதற்கு ஒன்றுமில்லை. நாளைக்கு பின்நேரம் நான்வந்து உன்னை ஏற்றுவேன் ஆயத்தமாயிரு..

என்னும் ஆனந்தமான செய்தியை சொல்லிவிட்டு மாமியார் அலைபேசியை அணைத்துவிட்டார். நீண்டுசுருண்டு சுற்றியவாறு என்னைத்தீண்டிய கவலைப் பாம்பை வென்றெழுந்து நிமிர்ந்து மீழவளியமைத்த மாமியையும் மாமாவையும் மனம்நிறைய வாழ்த்தினேன்.

சிற்றருவிகள் சிலுசிலுத்தோடும் வற்றாத வளங்கள்விளங்கும் அழகியகிராமமான கரடியனாற்றைக்கடந்து மட்டுநகர் கல்லடி உப்போடையிலுள்ள மாமியின்வீட்டில் தங்கிவாழ்தற்காக இப்பொழுது அவரின் காரில் நான் போய்க்கொண்டிருக்கின்றேன்.

● சிறீ சிறீஸ்கந்தராசா




# சிறுகதை என்றால்..

### அறிமுகம்

*முடிவில் திருப்பம் உடையது சிறுகதை எனும் இலக்கிய வடிவமாகும். இது நடப்பியல் நோக்கில் எழுதப்படுவது.*

உலக இலக்கியத்தில் அமெரிக்க எழுத்தாளர்களான எட்கார் ஆல்லன் போ, ஓ ஹென்றி இருவரையும் சிறுகதையின் தொடக்கப் புள்ளிகளாகச் சொல்வது வழக்கம். ஆனால் சிறந்த வடிவம் கொண்ட சிறுகதைக்கு ஆண்டன் செக்காவ் தான் முன்னோடி என்பார்கள்.

சிறுகதை என்பது இப்படித்தான் அமைய வேண்டும் என்று

திட்டவட்டமாக வரையறுக்க முடியாது. வரையறைகள் இவைதாம் என்று நாம் இங்கே எழுதிக் கொண்டிருக்கும்போதே

இவற்றையும் மீறி ஏதாவது ஒரு சிறுகதை எங்கேயோ ஒரு மூலையில் பிறந்து விடலாம்.

## சிறுகதையின் தோற்றம்

அமெரிக்காவில் தான் சிறுகதை மிக விருப்பமான இலக்கிய வடிவமாகப் போற்றப்படுகிறது. அமெரிக்காவின் மிகச் சிறந்த சிறுகதைப் படைப்பாளர்களாக விளங்கும் எட்கர் ஆலன்போ, நத்தானியல் ஹாதான், வாஷிங்டன் இர்விங், ஓஹென்றி ஆகியோர் உலக நாடுகள் அனைத்திலும் செல்வாக்குப் பெற்றவர்களாகத் திகழ்கின்றனர்.

பிரான்ஸ் நாட்டில் தோன்றிய சிறுகதைகள் உலக அளவிலேயே மிகப் புகழ்பெற்றவை ஆகும்.

மெரிமீ (Merimee), பால்ஸாக் (Balzac), மாப்பசான் (Maupassant) ஆகிய சிறுகதை ஆசிரியர்கள், ஆங்கில மொழிபெயர்ப்பின் மூலமாக உலகத்தினரால் அறியப்பட்டனர்.

இவர்களில், மாப்பசான்தான் இந்திய மொழிச் சிறுகதைப் படைப்பாளிகளுக்கு வழிகாட்டியாக இருந்திருக்கின்றார்.

ரஷ்யாவில் செகாவ் (Chekkov), துர்கனேவ், கொகொல் (Gogol) ஆகியோர் புகழ்பெற்ற சிறுகதை எழுத்தாளர்கள். இவர்களில் கொகொல் எழுதிய மேலங்கி (Overcoat) புகழ்பெற்ற கதையாகும். இக்கதையை முன்மாதிரியாகக் கொண்டுதான் ரஷ்யாவில் பலர் சிறுகதை படைத்துள்ளனர்.

இங்கிலாந்தில் ரட்யாட் கிப்ளிங் (Rudyard Kipling), ஆர்.எல்.ஸ்டீவன்சன் (R.L.Stevenson), கதரீன் மான்ஸ்ஃபீல்ட் (Katherene Mansfield), தாமஸ் ஹார்டி(Thomas Hardy), ஜோசப் கான்ராட் (Joseph Conrad), ஹென்றி ஜேம்ஸ் (Henry James), ஜேம்ஸ் ஜாய்ஸ் (James Joice) போன்றவர்கள் சிறுகதை எழுத்தாளர்களில் முக்கியமானவர்கள் ஆவார்கள்.

## மேலைநாட்டு அறிஞர்களின் விளக்கம்

அமெரிக்காவில் வாஷிங்டன் இர்விங், எட்கர் ஆலன்போ, நத்தானியல் ஹாதார்ன் போன்றவர்களும், ருஷ்யாவில் துர்கனேவ், செகாவ் போன்றவர்களும், பிரான்சில் மாப்பசானும் மிகச்சிறந்த சிறுகதைகளை எழுதியுள்ளனர். இவர்களும், இவர்களது படைப்புகளை ஆராய்ந்த திறனாய்வாளர்களும் கீழ்க்கண்ட வரையறைகளைச் சிறுகதைக்குத் தருகின்றனர்.

சிறுகதை என்பது சிறிய கதை என்ற பொருளில் இல்லாமல், ஒரு புதிய இலக்கிய வடிவத்தின் பெயரைக் குறிக்கும் தனிச்சொல் என்ற விளக்கத்தை பிராண்டர் மாத்யூ கொடுத்துள்ளார். சுருக்கமும் செறிவும் சிறுகதையின் முக்கியப் பண்புகள் என்று ஜேம்ஸ் கூப்பர் லாரன்ஸ்

கருத்துரைத்துள்ளார்.

சிறுகதை அரைமணியிலிருந்து ஒருமணி அல்லது இரண்டு மணி அவகாசத்திற்குள், ஒரே மூச்சில் படித்து முடிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் ; தன்னளவில் முழுமை பெற்றிருக்க வேண்டும். அது தரும் விளைவு ஒரு தனி மெய்ப்பாடாக இருக்க வேண்டும். கதையைப் படித்து முடிப்பதற்குள் புறத்தேயிருந்து எவ்விதக் குறுக்கீடுகளும் பாதிக்காமல், வாசகனின் புலன் முழுவதும் கதாசிரியனின் ஆதிக்கத்தில் கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும் என்று எட்கர் ஆலன்போ சிறுகதையைப் பற்றிய தமது மதிப்பீட்டைத் தந்துள்ளார்.

சிறுகதை என்பது எடுத்த எடுப்பிலேயே படிப்போரின் கவனத்தை ஈர்த்துப் பிடித்தல் வேண்டும். நெகிழ்ச்சியின்றி இயங்கி உச்சநிலை முடியும் வரை வாசகரின் முழுக்கவனத்தையும் ஒருமுகப்படுத்தி, இடையீடோ, சோர்வோ நேரும் முன்பாகவே சிறுகதை முற்றுப் பெறுதல் வேண்டும் என்று ஹெச்.ஜி. வெல்ஸ் கூறியுள்ளார்.

சிறுகதை குதிரைப் பந்தயம்போல, தொடக்கமும் முடிவும் சுவை மிக்கதாக இருக்க வேண்டுமென்று எல்லரி செட்ஜ்விக் என்ற அறிஞர் குறிப்பிடுகிறார்.

சிறுகதைகள் எளிய கருப்பொருளைக் கருவாகக் கொள்ளுதலே சிறப்புடையது என்கிறார் சிறுகதை உலகின் தந்தை எனப் புகழப்படும் செகாவ்.

1901இல், பிராண்டர் மேத்யூ என்ற திறனாய்வாளர், சிறுகதை என்பது ஒரே ஒரு பாத்திரத்தின் நடவடிக்கைகளைப் பற்றியோ, ஒரு தனிச் சம்பவத்தைப்பற்றியோ, அல்லது ஒரு தனி உணர்ச்சி பற்றியோ எடுத்துக் கூறுவதாக அமைந்திருக்கும் என்று விளக்கியுள்ளார்.

## இந்திய அறிஞர்களின் விளக்கம்

சிறுகதையின் வடிவம் கதை எழுதுபவரின் மனோதர்மத்தைப் பொறுத்தது என்று புதுமைப்பித்தன் சிறுகதையின் போக்கை விளக்கியுள்ளார்.

பழங்காலத்தில் தன்னுணர்ச்சிப் பாடல்கள் பெற்றிருந்த இடத்தைத் தற்காலத்தில் சிறுகதை என்ற இலக்கிய வகை பெற்றுள்ளது என்று கூறியுள்ளார் மு.வ.

சிறுகதை என்பது ஒரு நிகழ்ச்சியாக இருக்கலாம்; உள்ளப் போராட்டமாக இருக்கலாம். அது ஏதாவது ஒன்றாக இருக்கும் வகையில் சிறுகதை பிறக்கும். இரண்டாகவோ அல்லது அதற்கு அதிகமாகவோ இருந்தால் சிறுகதை பிறக்காது என்கிறார் க.நா.சுப்ரமணியன்.

நமது பேராசிரியர் சிவத்தம்பி..

"சிறுகதை ஒரு குறிப்பிட்ட மனோ நிலையை

அல்லது உணர்வு நிலையைக் காட்டுதல் அவசியம்"

## தமிழில் சிறுகதையின் தோற்றம்

தமிழ் மொழியில் அச்சு இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்ட பின்பு வீரமாமுனிவர் (1680-1749) எழுதிய பரமார்த்த குரு கதை என்ற கதை நூல், அவர் காலத்திற்குப் பிறகு, 1822இல் சென்னை கல்விச் சங்கத்தாரால் அச்சிடப்பட்டது. இந்நூல்தான், சில ஆய்வாளர்களால்

தமிழின் முதல் சிறுகதை நூலாகச் சுட்டப்படுகிறது.

பின்பு கதாமஞ்சரி (1826), ஈசாப்பின் நீதிக்கதைகள் (1853), மதனகாமராஜன் கதை (1885), மயில் இராவணன் கதை (1868), முப்பத்திரண்டு பதுமை கதை (1869), தமிழறியும் பெருமாள் கதை (1869), விவேக சாகரம் (1875), கதா சிந்தாமணி (1876) என்ற கதை நூல்கள் வெளியாயின.

பண்டிதர் ச.ம.நடேச சாஸ்திரி, தமிழ் நாட்டில் வழங்கி வந்த செவிவழிக் கதைகளைத் தொகுத்து, தக்காணத்துப் பூர்வ கதைகள்(1880), திராவிடப் பூர்வ காலக் கதைகள் (1886), திராவிட மத்திய காலக் கதைகள் (1886) என்ற தலைப்புகளில் வெளியிட்டார். தெலுங்கிலும் கன்னடத்திலும் வழங்கி வந்த தெனாலிராமன் கதை, மரியாதை ராமன் கதை போன்ற கதைகளும் தமிழில் அச்சாயின.

அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார் தொகுத்த விநோத ரச மஞ்சரி என்ற கதை நூல் 1876இல் வெளிவந்தது. இதில் கம்பர், ஒட்டக்கூத்தர், காளமேகம், ஏகம்பவாணன், ஔவையார் போன்றோர் வரலாறு கதையாகச் சொல்லப்பட்டுள்ளது.

திருமணம் செல்வக்கேசவராய முதலியார் அபிநவக் கதைகள் என்ற கதைத் தொகுதியை எழுதி வெளியிட்டுள்ளார். இதில் கற்பலங்காரம், தனபாலன், கோமளம், சுப்பைய்யர், கிருஷ்ணன், ஆஷாடபூதி என்ற ஆறு கதைகள் இடம் பெற்றிருந்தன.

இவ்வாறு, தமிழில் சிறுகதை முயற்சிகள் அச்சு வடிவில் சுமார் ஒரு நூற்றாண்டுக் காலம் மேற்கொள்ளப்பட்டன என்பதை அறிய முடிகின்றது.

தமிழில் மேலைநாட்டு மரபை ஒட்டிய நவீனச் சிறுகதை முயற்சிகள் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. ஆங்கிலத்திலும் தமிழிலும் நாவல் படைத்து வந்த அ.மாதவையா 1910ஆம் ஆண்டில் இந்து ஆங்கில நாளிதழில் வாரம் ஒரு கதையாக 27 சிறுகதைகளை எழுதினார். சமூகச் சீர்திருத்த நோக்குடன் இக்கதைகளைப் படைத்ததாக மாதவையா அந்நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இதில் இடம்பெற்ற திரௌபதி கனவு, குழந்தை மணத்தையும், கைம்பெண் கொடுமையையும், அவனாலான பரிகாரம் என்ற கதை வரதட்சணைக் கொடுமையையும் பேசின.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும் பல சிறுகதைகளைப் படைத்துள்ளார். நவதந்திரக் கதைகள், வேணுமுதலி சரித்திரம், மன்மத ராணி, பூலோக ரம்பை, ஆவணி அவிட்டம், ஸ்வர்ண குமாரி, ஆறில் ஒரு பங்கு, காந்தாமணி, ரயில்வே ஸ்தானம் என்று பல கதைகளை எழுதியுள்ளார். பாரதியார் கதைகள் சம்பவங்களைப் பேசுகின்றனவே தவிர, இவற்றில் சிறுகதைகளுக்குரிய உணர்ச்சி இல்லை என்று பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிடுகின்றார்.

வ.வே.சு. ஐயர் 1912ஆம் ஆண்டு, கம்ப நிலையம் என்ற பதிப்பகத்தின் மூலம் மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள் என்ற ஐந்து கதைகள் அடங்கிய தொகுதியை வெளியிட்டார். ஐந்து கதைகளில் குளத்தங்கரை அரசமரம் என்ற கதையே தமிழின் முதல் சிறுகதையாகப் பல விமர்சகர்களால் சுட்டப்படுகின்றது. வ.வே.சு.அய்யர் இக்கதையில் பாத்திர ஒருமை, நிகழ்ச்சி ஒருமை, உணர்வு ஒருமை என்ற மூன்றையும் சிறப்பாக அமைத்துள்ளதாக இலக்கிய விமர்சகர்கள் கூறுகின்றனர். இக்கதை, 1913ஆம் ஆண்டு விவேக போதினி இதழில் வெளிவந்தது.

வ.வே.சு. அய்யர் காலத்திற்குப் பிறகு நாரண துரைக்கண்ணன், தி.ஜ.ரங்கநாதன்

போன்றவர்கள் சிறுகதைகள் படைத்துள்ளனர். நாரண துரைக்கண்ணன் சமுதாயப் பிரச்சினைகளைப் பேசும் கதைகள் பல எழுதியுள்ளார்.

இவ்வாறு மாதவையா, பாரதியார், வ.வே.சு. அய்யர் போன்றோர் தமிழில் சிறுகதை முன்னோடிகளாகப் போற்றப்படுகிறார்கள்.

இக்காலக் கட்டம் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் சிறப்பான காலக் கட்டம் எனலாம்.

புதுமைப்பித்தன், கு.ப.ரா., ந.பிச்சமூர்த்தி, பி.எஸ்.ராமையா, மௌனி போன்றவர்களும், கல்கி, ராஜாஜி, கே.எஸ்.வேங்கட ரமணி, சிட்டி, சங்கரராம், லா.ச.ரா. போன்றவர்களும் இக்காலக் கட்டத்தில் சிறுகதை எழுதியுள்ளனர். புதுமைப்பித்தன் கதைகள் வடிவம், உத்தி, உள்ளடக்க முறைகளில் பரிசோதனை முயற்சிகளாக அமைந்து இலக்கிய அந்தஸ்து பெற்ற சிறுகதைகளாகச் சிறந்தன. தமிழ்ச் சிறுகதை முயற்சியை உலகத் தரத்திற்கு எடுத்துச் செல்ல முயன்றவர்களுள் புதுமைப்பித்தன் முதன்மையானவர் ஆவார்.

மணிக்கொடி என்ற இலக்கியப் பத்திரிகையுடன் தொடர்பு கொண்டு மிகச்சிறந்த படைப்பு முயற்சியில் ஈடுபட்டார். மேல்நாட்டுச் சிறுகதை ஆசிரியர்களின் படைப்பாக்கத்தை நன்கு அறிந்த அவர், அவற்றை உள்வாங்கிக் கொண்டு, தமது சொந்தப் படைப்பாளுமையைக் கொண்டு அற்புதமான சிறுகதைகளைப் படைத்துள்ளார்.

புதுமைப்பித்தன் கேலிக்கதைகள், புராணக் கதைகள், தத்துவக் கதைகள், நடப்பியல் கதைகள் என்று பலவகையான கதைகளைப் படைத்துள்ளார். வறுமையைப் பற்றிப் பொய்க் குதிரை, ஒருநாள் கழிந்தது, பொன்னகரம், துன்பக்கேணி போன்ற கதைகளையும்,

புராணக் கதை மரபை வைத்துச் சாபவிமோசனம், அகல்யை அன்றிரவு போன்ற கதைகளையும், தத்துவ நோக்கோடு கயிற்றரவு, மகாமசானம், ஞானக் குகை போன்ற கதைகளையும், வேடிக்கை விநோதக் கதையாகக் கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் என்ற கதையையும், நாட்டுப்புறக் கதைப் பாங்கோடு சங்குத்தேவனின் தர்மம், வேதாளம் சொன்ன கதை போன்ற கதைகளையும் எழுதியுள்ளார்.

தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் புதுமைப்பித்தனின் ஆளுமையும் மேதைமையும் பின் வந்த படைப்பாளிகளுக்கு முன் மாதிரியாக அமைந்தன எனலாம். புதுமைப்பித்தன் சாகாவரம் பெற்ற சிறுகதைகளைப் படைத்து, தமிழ் இலக்கியக் கருவூலத்திற்கு வளம் சேர்த்துள்ளார்.

தமிழில் சிறுகதை வடிவம் எவரால் முதலில் கொண்டு வரப்பட்டது என்பது குறித்த விவாதம் இன்றுமுள்ளது.

தனது சமகால எழுத்தாளர்களின் எதிர்விமர்சனங்களைப் புறந்தள்ளி பின்வருமாறு கூறுகிறார்:

"வேதாந்திகள் கைக்குள் சிக்காத கடவுள் மாதிரிதான் நான் பிறப்பித்துவிட்டவைகளும். அவை உங்கள் அளவுகோல்களுக்குள் அடைபடாதிருந்தால் நானும் பொறுப்பாளியல்ல, நான் பிறப்பித்து விளையாடவிட்ட ஜீவராசிகளும் பொறுப்பாளிகளல்ல; உங்கள் அளவுகோல்களைத்தான் என் கதைகளின் அருகில் வைத்து அளந்து பார்த்துக்கொள்கிறீர்கள் என்று உங்களுக்குச் சொல்லிவிட விரும்புகிறேன்"

- புதுமைப்பித்தன்

• கவிஞர். தக்ஷன், தஞ்சை

பிறிதோர் முயங்குதலில்
உடல் வேட்கையின் பரந்த வெளியில்
முகர்ந்தலையும் மிருகத்தின்
மென்வெப்ப மூச்சுக் காற்றில்
பிசிரெனப் பறந்தது காமத் துகள்..

சொட்டுத் திரவத்தின் சொற்ப பொழிதலில்
கெட்டித்து விட்ட அங்குல படுகையில்
வெடித்துக் கிளை பரப்பும்
இச்சை வேர் முனையும்
நுண்ணுனர் செல்களின் தட்டாமாலையில்
இறுகப் பற்றுதலாய் புடைக்கும் நரம்புகளும்

ஊர்ந்து கிறங்கும் உடலின் வாய்க்காலில்
கால் நனைந்தலையும் உயிரின் இலக்குகளும்

உச்சம் நோக்கி ஏகும் பாய்ச்சலின் பொருட்டு
ஊர், பெயர், இடம் அகன்று
செத்து பிறப்பதாக

பகிர்தலற்று புரண்டு படுப்பதில்
முடியலாம் இரவு..

• தி. கலையரசி

கனவுக்காட்சியைப் பாதியில்
அணைத்துவிட்டு
சட்டென விழிக்கச் செய்கிறது
அலைபேசி அலாரம்.

இன்றைய வேலைகளுக்கான
ஒத்திகையை ஒளிபரப்புகிறது
மூளை நரம்பு.

யார் முகத்தையும் ஏறிட்டுப்
பார்க்க விடாமல் செய்கிறது
பரபரப்பு.

உறவுகளுக்காக
பணத்தின் பின்னால் ஓடுகிறேன்.
பணத்திற்காக
காலத்தின் பின்னால் ஓடுகிறேன்.

அங்கும் இங்கும் என்னை
தரதரவென இழுத்துப் போகும்
வாழ்க்கையை ரசிக்க
என்றுமே தட்டிக்கழிப்பதில்லை
நான்.

● ஆதிலட்சுமி சிவகுமார்.



# நத்தையாய் நகர்தல்

பார்வையாளர்கள் யாருமின்றி கூடத்துக்குள் தொலைக்காட்சிப்பெட்டி தன்போக்கில் இயங்கிக்கொண்டிருத்தது. ஒற்றையாள் இருக்கக்கூடிய தனிச் சோபாவில் சுருண்டு உறங்கிக்கொண்டிருந்தாள் அவருடைய பேத்தி றசீத்தா.

ஒன்பது வயதுதான் ஆகிறது. ஒல்லிக் குச்சியாகத் தெரிந்தாள்.

தொலைக்காட்சியை நிறுத்தினால் உடனே விழித்துக்கொண்டு கத்துவாள். அது அவளது இயல்பாக நிலைத்துவிட்டது. மீண்டும் தன்னுடைய அறைக்குள் வந்தார். விடிந்து வெகுநேரமாகிவிட்டது. ஒரு தேநீருக்காக அடிக்கடி வாசலைப் பார்த்துக்கொண்டிருக்கும் தனது நிலைக்காக வருந்தியது அவர்மனம்.

சமையலறைக்குள் போய் தேநீர் ஊற்றிக்கொள்ள அவருக்கு விருப்பம் இருந்தது. ஆனாலும் கைகளில் ஏற்பட்டிருக்கும் தளர்வும், கண்களின் மங்கலான பார்வையும் அவரைத் தடுத்துவிடும். அவருக்கு இப்போ தன் வீடு சலித்துப்போய் விட்டது. தனக்கு வானத்தைத் துளாவிப் பறக்க இறக்கைகள் இருந்தது போலவும், அவற்றை யாரோ சிதைத்துவிட்டது போலவும் அவர் உணரத் தொடங்கினார். எல்லோர் மீதும் எல்லாவற்றின் மீதும் ஏதோவொருவித வெறுப்பு பெருகி வளர்வதையும் அவர் உணர்ந்தார்.

தனது வயதின் அடிப்படையில் தனக்கு உளச்சமநிலை அருகிவருவதாக அவருக்குள் ஒரு நினைப்பு எழுந்துகொண்டிருந்தது. முன்னைய நாட்களில் எல்லோரும் வேலைவேலையென்று வெளியே போய், பறவைகள் கூடடைவதுபோல இரவில் வந்து வீட்டுக்குள் இருப்பார்கள். இப்போ அப்படியில்லாமல், எல்லோருமே வீட்டிலிருக்கிறார்கள். வீடு வரவர ஏதோ மிருகங்களின் காட்சிச்சாலை போல மாறிக்கொண்டிருப்பதை அவர் பார்த்துக்கொண்டிருந்தார்.

இப்போது உலகம் ஏதோ வேற்றுக்கிரகமாக மாறிவிட்டதோ என ஐயப்பட்டார்.

“எல்லாரும் சேர்ந்து நாடகமாடுறாங்கள்..“ என்று தனக்குள் கொதித்தார்.

அவர் வரைக்கும் வீடு என்பது அமைதியாக நிம்மதியாக இருக்கவேண்டும் என்பதே எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால் வீடோ இப்பொழுது அந்த எதிர்பார்ப்புக்கு எதிர்மறையாகிவிட்டிருந்தது.

காலையில் கண்விழிக்கும்போதே வீட்டுக்குள் முறைப்புகளும், முட்டுப்பாடுகளும், முகச்சுழிப்புகளும் தொடங்கிவிடுகின்றன. சிலநேரங்களில் சமையலறையில் நிகழும் காரசாரமான கதைகள் படிகளில் ஏறி அவர்காதுகளிலும் விழும். ஆனால், அது அவர்களின் தனிப்பட்டவை என அவர் தன் செவிகளைப் பூட்டிக் கொள்வார்.

அவரது மகன் நல்லவன். அவனைப்போலவே மருமகளும் நல்லவள் தான். ஆனாலும் மனித உடல்களினதும் உள்ளங்களினதும் இயலாமை அவர்களுக்குள்ளும் அவ்வப்போது கீறல்களை உருவாக்கிக் கொண்டிருப்பதாக அவர் புரிந்துகொண்டார்.

ஆளை ஆள் நின்று பேச நேரமற்று ஓடிக்கொண்டிருந்தவர்களை, சடாரென்று அப்படி அப்படியே நிலையாக நிறுத்திவைத்தது கொரோனா. அதன் தாக்கங்கள் தான் மிகப்பெரியனவாக மிரட்டிக்கொண்டிருந்தன. மனிதர்கள் தம்மை ஒத்த மனிதர்களுக்கே அச்சமுற்று விலகி, வீடுகளுக்குள் குறுகிவிட்டார்கள் என்பது அவருக்கு ஏற்றுக்கொள்ள முடியாததாய் இருந்தது.

இப்போ வீடு மனித்ர்களால் நிரம்பிவிட்டிருந்தது. குழியலறையும் கழிப்பறையும் நெருக்கடியாக மாறிக்கொண்டிருந்தன. அதிலும் மருமகளின் தம்பி பிரேமன் குளியலறைக்குள் நுழைந்தால், வெளியே வருவதற்குள் அவருக்குப் பொறுமை கடந்துவிடும். மிகுந்த சிரம்ப்பட்டுத் தன் சினத்தை அடக்கிக் கொள்வார் அவர்.

உரிய நேரம் தாண்டிவிட்டபின்னர் ஏற்படும் மன உளைச்சலால் அவருக்கு கழிப்பறைக்குப் போகப் பிடிக்காமல் போய்விடும்.

“வரதன்.. இந்த வீட்டில இன்னும் ஒரு ரொய்லெட் போடவேணும்.. அதுக்கு என்ன செலவாகும் எண்டு விசாரிச்சுப் பார்.. “ என்பார் மகனிடம்.

“ஏனப்பா.. இருக்கிறது போதும் தானே.. “

“விடியவெள்ளண பிள்ளைகளும் போகவேணும்.. நானும் சுகர் வருத்தக்காறன்.. எனக்கும் அடிக்கடி போகவேணும்.. இஞ்ச ரொயில்லட்

நெருக்கடியாக் கிடக்கு.. எனக்கு உது சரிவராது.. “

“என்னப்பா நீங்கள்.. பிள்ளையள் எழும்பமுதல் எழும்பி நீங்கள் போகலாம்தானே.. “

மகனின் பதில் சொல்லவொண்ணா எரிச்சலை தந்தபோதும் தனக்குள்ளே அமைதியாகிப் போனார்.

குளிக்கவெனப் போனால் “ நான் குளிச்சிட்டு உங்கள விடுறன்.. “என்பார்கள்.

அப்படியும் காத்திருந்து குளிக்கப்போனாலும், குளியலில்நடுவில் யாராவது குளியலறைக் கதவைத்தட்டுவார்கள்.

இவர்களின் கதைபேச்சுகளில் இருந்து விடுபடவேண்டும் போல உணரும் தருணங்களில், வெளியே காலாற நடந்துவிட்டு வரலாம் என நினைப்பார்.

“வெளியிலை போறியளே.. மாஸ்க் போட்டுக்கொண்டு போங்கோ.. வயதான ஆக்களுக்குத்தான் உந்த வைரஸ் கெதியா தொத்துதாம்.. “ என்பாள் மருமகள் ரேவதி.

அவருக்கு அந்த முகமூடியை அணிய விருப்பம் இருப்பதில்லை. அதை அணிந்தாலே யாரோ முகத்தை துண்டால் அமுத்துவது போலவும் மூச்சுத் திணறுவது போலவும் திண்டாடுவார் அவர். இப்போது பல மாதங்களாக அவர் தன்னுடைய கைப்பேசியை அணைத்துவைத்திருக்கிறார். ஒருவரோடும் தொடர்புகொள்ளப் பிடிக்காதிருக்கிறது அவருக்கு.

“உனக்கு இன்னமும் நோய்த்தொற்று வரவில்லையா.. “என்பதுபோல சிலர் நலன் விசாரிக்கும்போது கெட்ட சினம் பொங்கிவரும் அவருக்கு.

ஆளாளுக்கு தாங்கள் மருத்துவர் போலவும், தன்னை நோயாளியாகவும் நினைத்து, கண்டகண்ட அறிவுரை விடுக்கும் தொலைபேசி உரையாடல்களை அவர் அறவே வெறுத்தார். பொழுது போகட்டுமே என்று செய்திகளை வாசிக்கலாமென்றால், அது இன்னமும் பெருந்தலைவலியை கொடுக்கிறது அவருக்கு.

ஒருகாலத்தில் நாடிநரம்புகளை முறுக்கேற்றும் செய்தித்தாள்களைப் படித்த அவருக்கு இப்போதைய செய்திகள் அருவெறுப்பூட்டுனவாக தெரிந்தன. அடுத்த வீடுகளை அலசி ஆராய்ந்து, அவற்றின் வறுமையையும் பலவீனங்களையும் அவரவர் குடும்பப்பிரச்சினைகளையும் செய்தியென்று சொல்லும் அவற்றைப் படிப்பது அழகல்ல என ஒதுக்கினார். உண்மையச் சொல்வதென்றால் அத்தகைய அநாகரிகங்களைப் படிக்க அவருக்குப் பிடிக்கவில்லை என்றுதான் நினைத்துக்கொள்வார்.

“உலகத்தோடை ஒட்டாமல் இப்பிடியே இருந்தியளெண்டால் நீங்கள் மனநோயாளி ஆகிப்போவியள்.. “ என வீட்டுக்கு வந்த உறவினர் ஒருவர் எச்சரித்துவிட்டுப் போனார்.

“ சும்மாதானே இருக்கிறியள் இதையொருக்கால் படிச்சுப்பாருங்கோ.. “ என்று சொல்லி மருமகள் மேசையில் வைத்துவிட்டுப் போன புத்தகத்தைப் படித்தபோது, அவருக்கு ஆவேசம் வந்தது. மொழியைச் சிதைத்து, பண்பாட்டை நகைத்து, பொய்களைப் புகுத்தி..

“ டேய்.. டேய்.. கண்ணுக்கு முன்னாலை நடந்ததுகளையே மறைச்சு.. என்ன பிழைப்படா இது.. உங்கட மனச்சாட்சிக்காவது நியாயமாக நடவுங்கோ.. “ என்று அந்தப் புத்தகத்தையே தூரத்தூக்கிப் போட்டார்.

“இந்தக் கொரோனா முடக்கம் வந்ததும் ஒருவிதத்திலை நல்லது தான்.. இல்லாட்டி கிழமைக்கு ரெண்டு கொண்டாட்டம் வைச்சிடுவாங்கள்.. காலமை பத்துப் பதினொரு மணிக்குப் போய் குந்தினால்.. இரவு தண்ணியாட்டம் முடிக்கும்வரை நிக்கவேணும்.. “ நினைத்துச் சலிப்புற்றது அவர் உள்ளம். “ நீங்கள் போட்டுவாருங்கோ மேன.. எனக்கு அங்க. வந்திருந்து அந்தக் கூத்துகளைப் பார்க்கப் பொறுமையும் இல்லை.. விருப்பமும் இல்லை.. “என்பார் மருமகளிடம்.

“இஞ்ச ஒருதரும் நிற்கமாட்டம்.. நாங்கள் திரும்ப வரப் பன்னிரண்டு மணியாகும்.. தனிய இருக்கப்போறியளே.. பேசாம வெளிக்கிட்டு வாங்கோ.. “ என்று மருமகள் ரேவதி துளைத்தெடுப்பாள். வேண்டாத வெறுப்போடு குளித்து வெளிக்கிட்டு அவர்களுடன் போவார். அன்றைய பொழுது தனக்கு நரகமாக இருப்பதை உணர்வதாக உணர்வார். எண்ணைமிதக்கும் கத்தரிக்காய் குழம்பையும் வெள்ளைச் சோற்றையும் கொஞ்சம் ஒதுக்கிவிட்டு, எதையாவது உண்பதாக காட்டிக்கொள்வார்.

தெரிந்தவர்கள் வந்து பற்களைக் காட்டிச் சிரிக்கும்போது, அந்தச் சிரிப்பின் செயற்கைத்தனம் அவரைக் கொல்வது போலிருக்கும். அதன்பின்னர் இரண்டுநாட்களுக்கு வயிற்றுப்பொருமலும், நெஞ்செரிவும் அவரை வாட்டிவதைக்கும்.

திடீரென்று ஏதோ நினைத்தவராக வெளியே வந்து எட்டிப்பார்த்தார். ஒரு சோபாவில் படுத்துக்கொண்டு, மற்றைய சோபாவில் கால்களைத் தூக்கிப் போட்டுக்கொண்டு, இந்த உலகத்தையே மறந்தவனாக அவரது பேரன் றமேஷ் கைப்பேசியில் விளையாடிக் கொண்டிருந்தான். பண்ணைக்கோழியைப்போல வயதுக்கு மீறி வளர்ந்திருக்கும் அவனைப் பார்த்து பரவசப்பட அவரால் முடியவில்லை. பதின்மூன்று வயதில் இருபது வயதுக்காரன் போலிருந்தான் அவன். அவனைப் பார்த்தபோது பரிதாபமும், கவலையுமே மேலிட்டது அவருக்கு.

“இப்ப உந்தக் கொரோனாவாலை சாப்பாட்டுக் கடையள் பூட்டு.. அதாலை உவன் வீட்டிலை இனிச் சாப்பிடுவான்.. “ என மெலிதாகத் தனக்குள் புன்னகைத்துக் கொண்டார்.

வெளியே பளிச்சென்று வெயில் எறித்துக்கொண்டிருந்தது. அலுமாரிக் கண்ணாடியில் தன்னுருவைப் பார்த்தார். தலைமுடி தன்போக்கிற்கு எல்லாப் பக்கமும் வளர்ந்திருந்தது. வெளியே போய் தலைமுடியை வெட்டுவித்துக்கொண்டு, கடைத்தெருவில் உள்ள மளிகைக்கடையில் மனதுக்கு பிடித்த எதையாவது வாங்கிவந்தாலென்ன என்று மனம் உந்தியது.

“ தம்பி.. சலூன் இப்ப திறந்திருக்குமோடா.. “

“ ஓமப்பா.. போகவேணுமே.. இப்ப கொஞ்சம் வேலை கிடக்கு.. மதியத்துக்கு பிறகு கூட்டிப்போகட்டே “ மகனின் அறையிலிருந்து கேள்வி வந்தது.

“இல்லையில்லை.. வெயில் எறிக்குது தானே.. நான் போயிட்டுவாறன்.. பழகின இடந்தானே..“

“என்ன பஸ்ஸில போகப்போறியளோ.. பஸ் றெயின் வழிய போறதுதான் மனுசருக்கு முதல் ஆபத்து.. அதில வாற சனத்திலை எத்தினை பேருக்கு உந்த வருத்தமோ.. ஆருக்கு தெரியும்.. அதிலையும் வயசான ஆக்கள் உந்தப் பயணத்தை நினைச்சும் பாக்கக்கூடாது.. காரிலை போகலாம்.. பேசாம இருங்கோ “

மருமகளின் அறைக்குள்ளிருந்தும் உபதேசம் வந்தது. அவர்கள் இருவரும் இப்போது வீட்டிலிருந்து வேலை செய்பவர்கள்.

“இல்லைப் பிள்ள.. பெரியதூரமில்லைத் தானே.. மெள்ளமெள்ள நடந்து போய்வாறன்.. “

“ஐயோ கடவுளே.. வழியில காணுற சனம் எங்கள என்ன நினைக்கும்?..வயசானவரை தனிய விட்டோம் எண்டு கதைக்கும்.. “

அவருக்கு உடலுறுப்புகள் எல்லாம் ஒடுங்கிப்போன மாதிரி இருந்தது.

மனவருத்தத்தோடு கட்டிலில் அமர்ந்தார். யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் எங்காவது ஓடிவிடவேண்டும் போலிருந்தது. தன்னுடைய முதுமையும் அதனால் உருவான இயலாமையும் தன்னை வாழ்வின் பிடிமானங்களில் இருந்து விலகச் செய்வதை உணர்ந்தவராக கலக்கமுற்றார் அவர். உடல் வியர்ப்பதுபோலத் தோன்றியது. திடீரென்று வெளிச்சுவரில் ஒரு நத்தையின் நகர்வு தெரிந்தது. அவர் அது நகர்வதைப் பார்த்தார். தலையில் இருக்கும் உணர்கொம்புகளை நீட்டுவதும், ஏதாவது எதிர்ப்பு எழும்போது ஓட்டுக்குள் சுருங்குவதுமாக அது போய்க்கொண்டிருந்தது.

● ந.க.துறைவன், வேலூர்

# கார்த்திகை தீபம்

தாமரைப் பொய்கையில் பிறந்தேன்
வளர்த்து ஆளாக்கியவர்கள்
கார்த்திகை நட்சத்திரப் பெண்கள்.

❍

ஆறறிவு படைப்பின் ரகசியம்
உணர்த்தும் பிரபஞ்ச அழகிகள்
கார்த்திகைப் பெண்கள்.

❍

எனைக் கவிஞனாக்கினாள்
மூடனாக இருந்த எனக்கு
ஞானப்பால் ஊட்டிய சக்தி.

❍

விண்வெளி மைதானம்
ஆயிரம் தோழிகளோடு நானும்
இரவில் குறும்பு விளையாட்டு.

❍

ஆசைகள் நிறைந்த மனசு
எப்பொழுதும் கொஞ்சுவாள் உருகி
என் பெரிய பாட்டி நிலா.

❍

ஒளி சிந்தும் ஒளியிருந்து
ஒளிவீசும் அழகு
நீயே உலகின் ஒற்றை நிலா.

❍

எனக்கு நானே இரவில்
வெள்ளை இருட்டில் சுடர்கிறேன்
சுகிக்கிறது என் ஆன்மா.

# யாரோ கிசுகிசுத்தார்

● கனகசபாபதி செல்வநேசன்



ஒளி மங்கிய நிலவின் வெளிச்சத்தில்
அடர் கானகத்தை ஊடறுத்து
இலக்கினை நோக்கி நாமிருவர்
பயணிக்க வேண்டுமென்று
யாரோ கிசுகிசுத்தார்.

விடியலின் புள்ளியை நோக்கி
நீண்டு செல்லும் நம் பயணம்
நம் தலைமுறைக்குள் முடிவுறாதென்பதை
நாமறிவோம் என்றும் கிசுகிசுத்தார்.

ஒரு ராக்குருவியின் சத்தத்தில்
மெல்லக் கிழிபடுகிறது இரவின் நிசப்தம்
வார்த்தைகள் ஓசை துறந்து
சமிக்ஞைகள் அனுப்புகின்றன காற்றுவழி;
விழிகளின் சுதந்திரம் உன்னிப்பாகப்
புன்னகைக்கிறது.

நீண்டு செல்கிறது இரவின் எல்லை
ஏனோ இத்தனை சலனம்
அடடா என் கடமையின் நீட்சி
விரிவுபடுத்த வேண்டுமோ?

என்ன செய்வேன் நான்?

சருகுகளின் சலசலப்பில்
சூழ்ந்து வருகிறது ஆபத்து!

இலைமேல் பனித்துளிகள்
தரை நோக்கி வந்து வியர்வைத் துளிகளாவதை
மங்கிய ஒளியில் காண்கிறேன்.

எந்த நேரமும் அனலேந்திய துகள்கள்
எங்கிருந்து வருமென்று
யாருக்குத் தெரியும்?.

அடிவானம் நோக்கி இறங்கும்
பிறை நிலவின் கடைசி வெளிச்சத்தில்
இந்தக் கானகம்தான் கல்லறையாகுமென்று
யாருக்குத்தான் தெரியும்?.

• கோபி சேகுவேரா



போன நூற்றாண்டிலிருந்து
தற்செயலாக வந்த ஒருவனுக்கு சியர்ஸ் சொல்கிறேன்
உடனே மனக்கிளர்ந்து
மூச்சிரைக்க சியர்ஸ் சொல்லும் அவனுக்கு
கைகளில் முக கவசத்தை திணித்தபடி
கடந்து செல்லும் அமரர் ஊர்தி பார்த்து
தயக்கத்தோடு சியர்ஸ் சொல்கிறேன்

யாருமற்ற இரவில்
ஷவருக்கு அடியில் நின்றுகொண்டு
கதவை தட்டுபவர்களுக்கு சியர்ஸ் சொல்கிறேன்
குவிந்து கிடக்கும் என் நிர்வாணங்களில்
தனியே நிகழா தனிமைக்கு சியர்ஸ் சொல்கிறேன்

ஒத்திகை செய்யபட்ட சில வார்த்தைகளை
திரும்ப பெறுவதற்கு சியர்ஸ் சொல்கிறேன்
மருகி மருகி எழுதப்பட்டவை
சடங்குகளாக மாற்றுவதற்கு சியர்ஸ் சொல்கிறேன்

இப்படியே
விடைகொடுக்க முடியாமல் தடுமாறி
தந்திரமாக தவிர்த்துவிடுதலுக்கு
பல பெயர்களை நான் வைத்திருக்கிறேன்
ஆனால்
நினைவிற்கு வருவது என்னவோ
இந்த சின்னஞ்சிறு சியர்ஸ் மட்டுமே
சி...ய...ர்...ஸ்...



சிறுகதை

● இலட்சுமண பிரகாசம்

# இரவல் குரல்கள்

காலையில் நேரமாகக் கிளம்பி ஸ்டூடியோவை நோக்கி சென்று கொண்டிருந்தாள். புதுப்படம் ஒன்று படப்பிடிப்பு எல்லாம் முடிந்து ஸ்டூடியோவில் டப்பிங் வேலை தொடங்கியிருந்தது.

புதுப்படம், புது தயாரிப்பாளர், புது டைரக்கடர். தயாரிப்பு செலவு நாலுகோடியில் தொடங்கி இப்போது பத்து கோடி என்று வந்து நிற்கிறது. தயாரிப்புச் செலவு ஏகத்துக்கும் அதிகமாகி பாதியிலேயே படத்தை ட்ராப் பண்ணிடலாம் என்று தயாரிப்பாளர் நொந்து போகிற அளவுக்கு நிலைமை. அங்கே இங்கே என்று ஊரிலிருந்த அரிசி மில்லு, நிலம் எல்லாத்தையும் அடகு வைத்து மீட்டர் வட்டிக்குக் கடன் வாங்கி ஷுட்டிங்கை ஒருவழியாக எப்படியோ முடித்துவிட்டார் அந்த புதுப்படத் தயாரிப்பாளர்.

புதுப்படம். தமிழுக்கு புது ஹீரோயின். முகம் தமிழ்நாட்டு முகம் இல்லை. ஷுட்டிங்கில் அந்த ஹீரோயினுக்குத் தமிழ் சொல்லித் தருவதற்கு டைரக்கடர் பட்டபாடு கொஞ்சமுமில்லை. ‘அவள் முகம் என்னமோ பளபளன்னு மின்னுது. எல்லாம் மேல்நாட்டு க்ரீம் வகைகள்தான் காரணம் என்று அந்த டைரக்டருக்கு தெரியும்.

மின்னுகிற மாதிரி கண்கள், முகவெட்டு இருக்குதே ஒழிய அந்த மூஞ்சியில் லவ் ‘எக்ஸ்பிரஷன்’ எழவு ஒன்னையும் காணும். தலைவிதிழ். ஹிந்தி படத்தில் இரண்டு நிமிட காட்சியில் வந்து போனதைப் பார்த்து தயாரிப்பாளர் இந்த பொண்ணையே ஹீரோயினாக போட்டுவிடலாம் என்று சொன்னதுக்கு அந்த படததின் டைரக்டருக்கு வேண்டும் தான் என்பது போலிருந்தது. புதுப்படம் டைரகட் பண்ண சான்ஸ் கிடைக்கறது சுலபமில்லை. படம் ஓடினாத்தான் வாழ்க்கை. இல்லை என்றால் பழையபடி பழைய படத்தோட கதைகளைச் ‘சுட்டு’ படமெடுக்கிற டைரக்டரிடம் அசிஸ்டன்ட் டைரக்டராவேதான் காலத்துக்கும் இருக்க வேண்டிய நிலை ஏற்படுமென நினைத்துக் கொண்டான் புதிய படத்தினுடைய டைரக்டர்.

புதுப்பட டைரக்டர் என்றாலே படத்தை முடித்து திரைக்குக் கொண்டு வருவதற்குள் பத்து பிரசவத்தினுடைய வலி அந்த படக்குழுவினரைவிட அந்த புதுப்பட டைரக்கடருக்கு நிச்சயம் இருக்கும்.

ஒரு காட்சி. க்ளோசப் ஷாட். ஹீரோ-ஹீரோயினோட காதல் முறிவு. சோவென கொட்டுற மழையில் அழுதுகிட்டே நடந்து போகனும். இன்னொசன்ட ஹீரோயின் வேற. காட்சியில் அழனும். ஹீரோயினுக்கு அழறதுக்கு க்ளிசரின் போடப்பட்டது. அப்போது அவள் கொடுத்த ம்எக்ஸ்பிரஷன்ழ் காட்சியோட ஒட்டாமல் இருந்தது.

இருந்தாலும் எடிட்டிங்கின் போது ஒட்டிவெட்டி பார்த்துக் கொள்ளலாம் என்று டைரக்டர் சொன்னதைக் கேட்ட ஒளிப்பதிவாளர் அந்தக் காட்சியை படம்பிடித்தார. ஷுட்டிங் எல்லாம் முடிந்து படம் இறுதிகட்டப் பணியில் இருந்தது.

ஹீரோயினுக்கு டப்பிங் பேச சரியான குரலைத் தேர்வு செய்ய வேண்டும் எனத் தயாரிப்பு நிறுவனம் முடிவு செய்திருந்தது.

நேற்று இரவு தயாரிப்பாளர் அலுவலகத்திலிருந்து அவளுக்கு அழைப்பு வந்திருந்தது. ‘மேடம் நீங்க தான் எங்க படத்தோட ஹீரோயினுக்கு வாய்ஸ் கொடுக்கணும். நிச்சயம் உங்களுக்கு நல்ல ப்பியூசர் கொடுக்கும். நீங்க நாளைக்கு வாய்ஸ் டெஸ்ட்டுக்கு ஸ்டூடியோவுக்கு வந்துருங்க மேடம்.’ அவள் நாளை வருவதாக ஒப்புக் கொண்டாள். சினிமா டப்பிங் ஆர்ட்டிஸ்ட்டுகள் தாம் நடிகர், நடிகைகளுக்கு திரையில் தங்களுடைய குரலை இரவலாகக் கொடுக்கிறார்கள் என்று ரசிகர்களுக்கு தெரிந்தாலும் பின்னணி குரல் கலைஞர்களை அவர்கள் கொண்டாடுவது இல்லை.

கரகரத்த ஹீரோயின்களுக்கு திரைக்குப் பின்னால் மென்மையான தங்களது குரலை இரவலாக ஒலிக்க விடுபவர்கள் பின்னணிக் குரல் கலைஞர்கள். அவர்களுடைய முகமோ நடையோ, பாவனையோ வேறு உருவ பிம்பங்களோ எதுவுமே திரையில் தோன்றுவதில்லை. காட்சியில் தோன்றும் நடிகர்களுக்கு உயிரையும் மட்டுமில்லை ஆன்மாவையும் அவர்களுடைய குரல் தான் கொடுக்கிறது.

சில்க் சுமிதாவின் கவர்ச்சி அழகுக்கு ரசிகர் பட்டாளம் உருவானது கூட சில்க்கின் உடலமைப்புக்கு ஏற்ற கொஞ்சுகிற மொழியில் மயக்கும் குரலும் ஒரு தனி கவர்ச்சியை உண்டாக்கியது. அழகுக்கு ஏற்ற தோரணை, மயக்கும் சொக்கு விழிப் பார்வை என எல்லாம் இருந்தும் ரசிகர்கள் சில்க்சுமிதாவை இன்றும் நினைவில் வைத்துக் கொண்டிருக்கக் காரணமே திரையில் சில்க்சுமிதா தோன்றுகிற காட்சிகளில் அவளுடைய குரலாக ஒலிக்கும் கிறங்கடிக்கிற மயக்கக் குரல்தான்.

அந்த பின்னணிக் குரல் தான் எத்தனை மயக்கமாத்திரை போல ஆண் ரசிகர்களை தன்வயப்படுத்தி வைத்திருந்தது. வீட்டில் தொலைக்காட்சியில் ஓடிக் கொண்டிருக்கும் சில்க்சுமிதா நடித்த பழைய படம், அல்லது கவர்ச்சியான காதல் பாட்டு என, எது ஓடிக் கொண்டிருந்தாலும் ஒளிபரப்பாகும் சேனல்களின் முன் உட்கார்ந்து ரசிக்கும் இந்த காலகட்ட இளைஞர்களும் விரும்பி பார்க்கிறார்கள்.

ஸ்டூடியோ அறையின் உள்நுழைந்து படத்தின் தயாரிப்பாளர், டைரக்டர், மியூசிக் டைரக்டர், ஒலிப்பதிவு டெக்னீசியன்கள் என எல்லோரையும் சந்தித்தாள் பின்னணிக் குரலை கொடுப்பவள். அந்தப் படத்தில் ஹீரோயின் நடித்த ஒரு காட்சியை திரையில் ஓடவிட்டனர்.

ஐந்து நிமிட காட்சி. அக்காட்சியில் ஹீரோயின் புன்னகைத்தவாறு ஹீரோவிடம் தன்னுடைய காதலை வெளிப்படுத்துகிறாள் அந்த படத்தின் நாயகி. சுமாரான நடிப்புதான். அந்த மூஞ் சியில் எக்ஸ்ப்ரெஷன்.

சுத்தமாக இல்லாமல் இருந்தது. முகவெட்டு, பளபளப்பு மின்னும் ம்ரோஸ் டோன்ழ் நன்றாக இருந்தாலும் அக்காட்சியில் அவளின் மொழியில் கரகரத்த குரலில் பேசும் அந்த நடிகையின் உண்மையான குரல் வசனகர்த்தா எழுதியிருந்த அழகான வரிகளில் காதல் வசனங்கள் சோபை இழந்தது போல்தான் இருந்தன.

டப்பிங் கலைஞரான அவளின் குரல் கலகலப்பான எப்போதும் மகிழ்ச்சியை அளிக்கக் கூடிய குரல். எங்கேயும் பிசிர் இல்லால் மொழியை அழகாக உச்சரிக்கத் தெரிந்தவள். சில வேளைகளில் பாடகர்கள் குழுவில் 'கோரஸ்களில்' இருந்திருக்கிறாள். விளம்பரப் படத்தில் குழந்தை ஒன்றுக்கு தனது குரலை இரவல் கொடுத்ததுதான் இவளுடைய ம்டப்பிங் கேரியரில்ழ் முதல் வாய்ப்பு. தொடர்ந்து அவ்வப்போது விளம்பரத்தில் வரும் நடிகைகளுக்கு உள்ளாடை போன்ற விளம்பம்பரங்களில் தனது குரலை இரவல் கொடுப்பாள். சம்பளம் ஒன்றும் அதிகமாய் இருக்காது. அவளுடைய குரல் விளம்பரத்தில் தோன்றும் போது நடிகையை நம்பித்தான் அந்த பொருளை வாங்கி பயன்படுத்திக் கொள்வார்கள் என்று எண்ணத் தோன்றும். அவ்வளவு இனிமை. மென்மை அவளின் தொண்டைக் குழலில் ஒளிந்திருக்கும் ஒரு மாயம் போல.

குரலை இரவல் கொடுப்பது ஒன்றும் அந்த பெண்ணின் குடும்பத்தில் புதிது இல்லை. அவளுடைய அப்பா பழைய கால சினிமாவில் சில நடிகர்களுக்குத் திரையில் பின்னணிக் குரல் கொடுத்திருக்கிறார். அப்பாவிடம் இருந்து தான் இந்த கலை அவளுக்கு வந்திருக்கும். குரலை எப்படி சிதைந்து போகாமல் இருக்க வேண்டும் என்ற உத்தியை எல்லாம் தன்னுடைய அப்பாவிடம் இருந்துதான் அவள் கற்றுக் கொண்டாள். பிறவியிலேயே அந்த குரல் வளம் அவளுக்கு இருந்திருக்க வேண்டும். குரலில் ஒரு வித்தை செய்ய முடியும். எல்லோரையும் மயக்கி வைக்க முடியும். அதை ஒரு பயிற்சியாக கற்றுக் கொண்டாள்.

திரையில் தன்னுடைய குரல் வளத்தை, மற்ற நடிகைகளுக்குப் பின்னணிக் குரல் கொடுத்து வந்த நாளில் சவாலான காட்சியாக ஒரு கற்பினியின் பிரசவத்தின் போது பின்னணிக் குரலை கொடுக்க வேண்டியிருந்தது. அப்போது சில ஆண்டுகளுக்கு முன்பு தனக்கு விபத்தில் ஏற்பட்ட கற்பம் கலைந்த வேதனையை எண்ணிக் கொண்டு அக்காட்சியில் தன்னுடைய குரலை வெளிப்படுத்தியிருந்தாள். அவளுடைய சோகம் நிறைந்த குரல் அந்த நடிகையின் உச்சபட்ச எமோஷனல்-ஆன காட்சியாக அவளுக்கு நடித்ததில் பெயரையும் விருதையும் வாங்கிக் கொடுத்தது.

பிரபலமான நடிகை. அவள் ஏற்றிருந்த கதாபாத்திரம் தன்னை ஆண் போலவே நடை உடை பாவனைகளுக்கு மாற்றி உணர்ச்சிகளை தனது நடிப்பில் வெளிப்படுத்தியிருந்தாள். அவளுடைய நடை உடை பாவனைகளுக்கு ஒரு பெண் மற்றும் ஆணின் குரலினை கலவையில் பேச வேண்டும். ஸ்டூடியோவில் ஒரே டேக்கில் அதனை செய்து முடிக்க ஒரு மாதம் ஆண் குரலின் கரகரத்த தன்மைக்கு பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய குரல்வழியான நடிப்பு அசாத்தியமானதாய் இருந்தது. அந்த நடிகையின் நடிப்புக்கு பல விருதுகளும் வந்துகுவிந்தன. அந்த நடிகையின் பேசப்பட்ட கதா பாத்திரம் குறித்து பேசியவர்கள் பின்னணிக் குரல் கொடுத்த அந்தப் பெண்ணின் முகம், உருவம் என எந்த ஒன்றையும் திரைக் கலைஞர்கள் யாரும் வெளியில் சொல்லவில்லை.

தன்னுடைய குரலை இரவலாக பெற்ற நடிகைகள் தோன்றும் காட்சிகளை அவள் இதுநாள் வரை வெளியான சினிமாவில் பார்த்தது இல்லை. தன்னை அப்படிப் பார்க்கும் தைரியம் அவளிடம் இல்லாமல் போனது கூட ஆச்சர்யம் தான். அல்லது நடந்திருந்த ஒரு சம்பவம் அந்த நிலைக்கு அவளை தள்ளியிருக்கலாம். ஒரு சினிமா பத்திரிகைச் செய்தியில் வெளிந்த துண்டுச் செய்திதான் காரணமாக அமைந்தது. அந்தச் செய்தி, அவள் தன்னுடைய குரலை இரவலாக கொடுத்த நடிகை, படம் வெளியாகும் முன்பு தனக்கு ஏற்பட்ட காதல் தோல்வியில் தனது கடைசி பிறந்தநாளின் போது தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டாள் என்ற செய்தி. அது சினிமா பத்திரிகையில் துண்டுச் செய்தியாக மட்டுமே இருந்தது.

அச்செய்தி அவளை பாதித்திருந்தது. அதன்பின் அவள் திரைத் துறையில் எந்த ஒரு நடிகைக்கும் தனது குரலை இரவலாக கொடுப்பதை நிறுத்திக் கொண்டாள்.

❍

ஒரு குரலில் ஏற்ற இறக்கங்களோடு உச்சரிப்புகளை வித்தியாசப்படுத்திக் காட்டுவதன் மூலம் திரையில் அத்துவான வெளியில் உள்ள காட்சிகளை பார்வையாளரின் ஆழ்மனத்தில் தாக்கதத்தை ஏற்படுத்தி வைக்க முடியும். அல்லது ஒரு காட்சியில் தோன்றும் நவரச பாவங்களுக்கு ஏற்ப குரலில் அழுத்தத்தையும்,

மென்மையையும் அளிப்பதின் மூலம் திரையில் தோன்றும் காட்சிகளை அரங்கில் அமர்ந்திருக்கும் ஒரு பார்வையாளரின் இருக்கைக்கு அருகில் கொண்டு வந்து நிறுத்த முடியும். பிறமொழிப் படங்கள் அடுத்த மொழியில் வெளியாகி வெற்றிபெற்று மக்களை கவர்ந்ததற்கு அக்காட்சியில் நடித்த நடிகர்களுக்கு திரையின் பின்னால் தன்னுடைய குரலை ஒன்றவைத்து அவர்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும், அவர்கள் காட்டும் ஒவ்வொரு பாவனைக்கும் சிரிப்பை, அழுகையை, மருட்சியை, மௌனங்களை அதன் உயிரோட்டத்தை பிறமொழிப் படங்களை மொழிபெயர்ப்பில் பார்க்கும் ரசிகர்களுக்கு எதிர்பாராத அனுபவத்தைத் தரமுடியும் என்ற சினிமா மேஜிக் வித்தைகள்.

மாய வித்தைக்காரன் இரண்டு உயிர்களை கூடுவிட்டு கூடுபாயச் செய்வதைப் போல பின்னணிக் குரல் கலைஞன் தன்குரலை கூடுவிட்டு கூடுபாயச் செய்து தன்னை வேறொரு உருவத்தில் உள்ள உயிர்களோடு பிணைத்துத் தன்னுடைய குரலில் அந்நடிகனை அல்லது அந்த நடிகையை நடிக்கச் செய்ய முடியும். அப்போது அந்த நடிகர், நடிகையின் ஆன்மாவாக தோன்றி திரையின் பின்னிருந்து ஒலிவடிவில் பேசுவார்கள். ஏன் அவர்கள் வாழ்வதாகக் கூட சொல்லலாம்.

மேஜிக் ஷோவில் மேஜிக் வித்தைக்காரன் தன்னுடைய பார்வையாளர்களை தன்னுடைய கட்டுக்குள், விலகாத பிடிக்குள் கொணடுவருவதற்கு அவன் செய்யும் குரல்வித்தை அபாரமான ஒன்று. அவனிடம் மேஜிக் வித்தையில் நுட்பமான அறிவியல் ஒளிந்து கொண்டிருக்கும். பார்வையாளனை அதன் பக்கம் பார்வையை செலுத்த விடாமல் தன்னுடைய குரல் ஜால வித்தையில் பேசிக் கொண்டே தன் கையில் இருக்கும் அறிவியல் நுட்பத்தை இமைக்கும் நொடிக்குள்ளாக செயல்படச் செய்து அற்புதமான மேஜிக்கை காட்டியதாக நம்பவைப்பான். தெருவில் மோடி மஸ்தான் வித்தை காட்டும் கலைஞன் தன்னுடைய பலகுரல் திறமையால் பார்வையாளர்களை மருட்சி கொள்ளவைத்து பார்வையாளர்களை பிரம்மிப்பில் ஆழ்த்துவான். பார்வையாளர்கள் அவனுடைய வசத்தில் இருந்து பிடிவிலகாது அவனுடைய

கட்டுப்பாட்டிலேயே இருப்பார்கள்.

திரையில் வரும் பாடல் காட்சிகளில் தோன்றும் நடிகர் நடிகைகளின் பாவனைகளுக்கு, திரையிசை பாடகர்கள், பாடகிகள் தங்களது குரலை நாயகனுக்கும், நாயகிக்கும் இரவலாக ஒலிக்கச் செய்வர். அப்பாடலுக்குத் தன்னுடைய முகபாவனைகயும், அசைவுகளையும் கொண்டு அந்த நடிகனும், நடிகையும் தன் ரசிகர்களை கவர்ந்திழுப்பார்கள். ரசிகர்கள் அப்பாடலை தங்களுக்குப் பிடித்தமான பாடலென கொண்டாடி மகிழ்வர். கொண்டாடப்பட்ட பாடலின் பின்னணிக் குரலாக ஒலித்த அந்த பின்னணி பாடகர்களின் முகமோ, பெயரோ, வேறெந்த அடையாலமோ அங்கு தோன்றுவதில்லை.

திரையில் பாடல் காட்சியில் தோன்றும் நடிகனின் அல்லது நடிகையின் திரை பிம்பத்தின் ஆன்மாவாகவே மாறியிருப்பார்கள். பாடகர்கள் திரையில் எழும் தனது குரலில் வாழும் கதாபாத்திரத்தின் ஜீவாத்வாமாகவே இறப்பில்லா தன்மையை பெற்று காலத்துக்கும் மக்களின் மனதில் வலம் வந்து கொண்டிருப்பார்கள்.

❍

வில்லன் கதா பாத்திரம் ஒன்று அந்த படத்தின் கதையை கடைசிவரை நகர்த்திச் சென்று சீட்டின் நுனியில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருக்கும் பார்வையாளர்களை கட்டிப் போடவைக்கும் திறனைப் பெற்றிருக்கும். ஆஜானுபாகுவான அந்த வில்லன் கதா பாத்திரத்திற்கு தேர்வு செய்யப்பட்டிருக்கும் நடிகனின் குரல் அதிர்ச்சியையோ, பயத்தையோ மற்றவர்களுக்கு ஏற்படுத்த வேண்டியிருக்கும். உருவமற்ற வில்லன் கதா பாத்திரமாக வரும் மாய உலகத்து

கதைக் கருகொண்ட படத்தில் அசரீரியாக ஒலிக்கும் குரலாக அத்திரைப்படத்தில் வரும் காட்சிக்கு கடவுளின் அரூபத் தன்மை கொண்டதாக ஒரு பின்னணி குரலிசைக் கலைஞன் தனது குரலை ஒரு ஞானியின் தரிசனமிக்கதாக மென்மையான தன்மைக்குள் தன்னை பொருந்திக் கொண்டிருப்பான். அசரீரியாக ஒலிக்கும் போதெல்லாம் பார்வையாளர்கள் திரைச் சீலையின் பின்னணியில் ஒரு உலகம் இருப்பதை உணர்வார்கள். அது அரூபமாகவே ஒலித்துக் கொண்டிருக்கும்.

மெலிந்த உடலமைப்பைக் கொண்ட உயரமான திரைக் கலைஞன் தன்னுடைய வில்லன் கதா பாத்திரத்தை ரசிகர்களின் முன்னிலையில் நிலைநிறுத்த அடித் தொண்டையில் இருந்து கனத்த குரலை இருட்டில் இருந்து எதிரொலிக்கும் ஒரு மர்ம ஒலியின் பிரதியாக திரையில் காட்ட வேண்டிய காட்சி ஒன்று இருந்தது. ஆனால் அந்த நடிகனுக்குக் குரலானது மிக மெல்லியதாகவும், ஒரு பெண்ணின் குரலைப் போன்றும் காணப்பட்டது.

படப்பிடிப்பில் அந்த நடிகன் பேசிய வார்த்தைகளில் அவ்வளவு கனமான அழுத்தம் இல்லாமல் இருந்தது. அந்த நடிகனின் இரவல் குரலாய் ஒரு பின்னணிக் கலைஞன் குரல் திரையில் ஒலித்துக் கொண்டிருந்த போது வில்லன் கதா பாத்திரம் தோன்றிய போதெல்லாம் ரசிகர்கள் அத்தனை பேரும் பயத்தில், உறைந்து போகும் அளவிற்கு கனமான அழுத்தம் அந்த குரல் ஜால வித்தைக்காரனின் குரல் நடிப்பு திரைக்குப் பின்னால் இருந்து ஒலித்துக் கொண்டிருந்தது. பின்னர் ஒரு நாள் தனது குரலை இரவலாகத் தந்த குரலிசைக் கலைஞன் வெளியில் சர்வசாதரனமான நடமாட்டத்தில் மக்களோடு மக்களாய் அவர்களிடம் தன்னுடைய இயல்பான வாழ்கையின் நடவடிக்கையை வெளிப்படுத்தியபடி இருப்பான். அங்கு நடமாடும் மக்களுக்குத் தெரியாது தனக்கு பிடித்தமான வில்லன் ஒருவனுடைய திரைக்காட்சியில் ஒலித்த

அந்த கனமான குரல் இப்போது நம்முடன் சர்வசாதாரனமாக நடமாடுபவனின் பின்னணிக் குரல்தான் அது என்று.

ஸ்டுடியோவைத் தாண்டி அவனுடைய குரலின் நடிப்பு பிரமாதம் என்று யாரும் கொண்டாடுவதில்லை. அந்தக் கலைஞன் எப்போதும் போலவே அந்த நடிகன் திரையில் தோன்றும் போதெல்லாம் அவனுடைய ஆன்மாவாகவே எதிரொலித்துக் கொண்டிருப்பான். கூடுவிட்டு கூடுபாய்ந்த பின் மீளமுடியாத பாதிப்பு, மனவழுத்தம் ஏற்பட்டதை யாரும் கவனித்துவிடப் போவதில்லை.

❍

குழந்தைகளுக்கான பொம்மைகளை தயாரிக்கும் நிறுவனம் ஒன்று அதிதொழில் நுட்பம் கொண்ட பேசும் பொம்மையை வடிவமைக்கிறது. அதனுள் பலமொழிகள் கணிணி தொழில் நுட்பத்தோடு பலமொழிக் குரல்கள் புரோகிராம்களாக பதிந்து வைக்கப்படுகின்றன. தன்னுடைய அப்பாவுடன் பொம்மைக் கடைக்குச் செல்லும் குழந்தை அந்த அதிதொழில் நுட்பம் கொண்ட பேசும் பொம்மையை விலைக்கு வாங்கிக் கொள்கிறாள். பேசும் பொம்மையை விற்பனைக்கு வைத்திருந்த கடைக்காரர் அந்த பொம்மையைக் குறித்து பலவிதமாக எடுத்துச் சொல்லத் தொடங்குகிறார்.

‘அந்த பொம்மை மிக அற்புதமான பொம்மை. நீ பேசுவதையெல்லாம் கேட்டு உன்னோடு உரையாடும். நீ அந்த பொம்மையிடம் பேசுவது மட்டுமல்ல பாடவும் சொல்லிக் கேட்கலாம்.’
‘அது பாப்பாவா? அதற்கு என்ன பெயர்?’

‘அதற்கு எந்தப் பெயரையும் நீயே சூட்டிக் கொள்ளலாம். அதற்கு நாங்கள் பொம்மை என்று மட்டும்தான் இப்போதைக்கு அழைக்கிறோம். நீ என்ன பெயரை சூட்டி அழைக்கப் போகிறாய்?ழ்.

‘அப்படியானால் நான் அந்த பொம்மைக்கு நிலா என்று சொல்லி அழைக்கப் போகிறேன்.’ அவள் புன்னகை ததும்ப அந்த பொம்மையை நிலா என்று அழைத்து தன் கைகளில் எடுத்து அந்தப் பொம்மையின் இதழில் அழுத்தமான முத்தத்தை பதித்தாள். பதிலுக்கு அந்த நிலா சிரித்துக் கொண்டு இருந்தாள். பேட்டரி ஆன் செய்யப்பட்டவுடன் அந்த நிலா பொம்மை உயிரெழுந்து குழந்தையின் பெயரை அழைத்தது. அக்குழந்தையின் முகத்தில்தான் ஆயிரமாயிரம் பட்டாம் பூச்சிகள் சிறகுகள் கொண்டு படபடவென்று காற்றுவெளியை நோக்கிப் பறந்த வண்ணமிருந்தன.

குழந்தைக்கு மகிழ்ச்சி அளித்த அந்த பொம்மை, தன்னுள் பொம்மைகள் தயாரிக்கும் நிறுவனம் புரோகிராம்களாக பதிந்திருந்த கட்டளைப் படி நிறைவேற்றிக் கொண்டிருந்தது. சில மாதங்களுக்கு. பள்ளி சென்று விட்டு வீடு திரும்பிய மாலை வேலை ஒன்றில் அதிக பாடச்சுமை காரணமாக, தான் மனஅழுத்தத்தில் இருப்பதாக அந்த பொம்மையிடம் அவள் சொல்லிச் சொல்லி அழுதபடியிருந்தாள். அந்த பொம்மையை வெறுப்பின் உச்சத்தில் மாடியில் இருந்து தரையை நோக்கிக் கீழே தூக்கி வீசினாள். அப்போது அந்த பொம்மை சிரிப்பதிலிருந்து, அழுகையைத் தொடங்கியது. நிலா.. நிலா.. என்று அதனுடைய பேட்டரி தீர்ந்து போகிறவரை.

அந்த பொம்மையின் குரலில் பதியபட்டிருந்த இருந்த மொழிகள் அத்தனையும் பேட்டரி

தீர்ந்த போது அதன் உடலைவிட்டு வேறு ஒரு பொம்மையின் உடலுக்குள் கணிணியின் வழியில் புகுந்து கொண்டிருக்கம் ஜப்பானிய பொம்மை தயாரிப்பு நிறுவனம். பொம்மையை தயாரித்த அந்த நிறுவனம் இப்போது அந்த பொம்மையை சிறுவனின் உருவ பொம்மையில் மொழியை பேசுவதற்காக புரோகிராம்களை செய்யத் தொடங்கும்.

❍

மொழிபெயர்ப்பாளர் ஒருவர் தன் நண்பர் ஒருவரின் தாய்மொழியில் இருந்து பிறமொழியில் மற்றொரு நபருக்கு உணர்ச்சியை சொற்களின் வழி பெயர்த்துக் கொண்டிருந்தார். அந்த நபர் மொழிபெயர்த்தது சொற்களாக அன்றி அவை உணர்ச்சிகளாகவே இருந்தன. மற்றொரு நபரின் தாய்மொழியில் இருந்து தனது நண்பருக்கு அவரது உணர்ச்சிகளை பெயர்க்க முயற்சித்துக் கொண்டிருந்தார்.

மொழிபெயர்ப்பு என்பது ஆகச்சிறந்த தோல்வி என்று ஒரு எழுத்தாளர் சொன்னதைத் தன்னிடம் நேர்காணல் கண்ட மொழிபெயர்ப்பாளரும் எழுத்தாளருமான அவர் பதிவு செய்திருந்தார். உணர்ச்சிகளை கடத்துவதற்கு இருவரின் குரலின் அதிர்வுகளை அவர் கண்டறிவது சிக்கலானது. மொழிபெயர்ப்பு என்பதும் ஒருவகை, ஒரு மொழியின் ஆன்மாவை இன்னொரு மொழிக்கு இரவலாக வழங்குவதாக அவருடைய அந்த நேர்காணலின் பேட்டியின் முடிவில் அமைந்திருந்தது.

மொழிபெயத்துக் கொண்டிருக்கும் பிரதியின் சொற்கள் ஒன்றையொன்று பிறமொழிச் சொற்களில் இருந்து தன்னடைய குரலை இரவலாக பெற்றுக் கொண்டிருந்தன. அங்கு கலாச்சாரங்களின் பரிமாற்றம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

துருக்கிய மொழி நாவல் ஒன்றை மொழிபெயர்த்துக் கொண்டிருந்தவர் அந்த நாவலின் ஆசிரியரின் மொழிக்குள் ஊடுருவ முயற்சித்துக் கொண்டிருந்தார். அந்த நாவல் இரட்டைக் குரலாக ஒலித்துக் கொண்டிருந்தது. அம்மொழி பெயர்ப்பாளர் மொழிபெயர்ப்பது போலில்லாமல் தன்னுடைய மொழிக்குள்ளிருந்து அம்மொழிக்கும், துருக்கிய மொழியில் இருந்து தன்னுடைய மொழிக்கும் கூடுவிட்டு கூடுபாய்ந்து கொண்டிருக்கிறார்.

பிரதியில் சிருஷ்டிக்கப்பட்ட கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றும் தன்னுடைய குரலை, தனக்கு ஏற்பட்ட துயரமான வலியை வாசிப்பவரின் பக்கத்தில் எதிரொலித்துக் கொண்டும், அவனை அடுத்த பக்கத்திற்கு தாவிச் சென்றுவிடாத படிக்கு அவனை அந்தப் பிரதியின் துயரமான பக்கங்கள் அந்த வாசகனை கொலைவெறிக்கு அல்லது சடக்கென தன்னை மாய்த்துக் கொள்ளும் தன்மைக்கு அவனை தள்ளிவிடும் அபாயம் கொண்டதாகவே இருந்தது.

எழுதி முடிக்கப்படாமல் இருந்த பிரதி தன்னை அத்தியாயங்களாக எழுதிக் கொண்டிருந்தவனை தனிமை இருளின் பிடியில் தள்ளி போதையில் உளறும் பைத்தியக்காரன் என்று ஊர்முழுக்க அவனைப் பற்றிய பேச்சுகள். முடிக்காமல் இருக்கும் அந்த பிரதி தூசுகள் படிந்து போய் ஒரு ஓரத்தில் எலிகளின் பசிக்கு இரையாகிக் கொண்டிருந்தது.

அந்த பிரதியை எழுதியவனைப் பற்றி எந்த கட்டுரையும் எழுதப்படவில்லை. அந்தப் பிரதியில் ஒலித்துக் கொண்டிருக்கும் கதாபாத்திரங்கள் அந்த காகித்தில் இருந்து வேறொரு காகிதக் கட்டுக்குள் ஒளிந்து கொண்டிருக்கின்றன. அப்பிரதியில் தோன்றிய கதாபாத்திரங்களும், அவைகளின் குரல்களும் எதிரொலித்தபடி இருக்கின்றன.

# நூல்: 'அக விடுதலையே பெண்விடுதலை!'- முனைவர் நா.நளினிதேவி




*பாரதி கண்ட வீரப் பெண்கள் இன்று உலக வாழ்க்கையின் நுட்பங்களை அறிந்து, நாற் திசைகளுக்கும் சென்று, நூல்கள் பற்பல கற்று, புதுமைகள் பல கொணர்ந்து, இத் தேசம் ஓங்க உழைத்துள்ளனர் என்றால் மிகையில்லை. இன்றைய நவீன உலகத்தில் பெண்கள் கல்வி, வணிகம், அரசியல், அறிவியல், பொருளாதாரம், விளையாட்டு எனப் பல்வேறு துறைகளில் உயர்ந்த நிலைகளில் முன்னேற்றம் பெற்றுள்ளனர். புறவாழ்க்கையில் பெண்களுக்கான விடுதலைக் கிட்டியதா? என்றால் முழுமையாக ஏற்றுக்கொள்ளவும் இயலாது. 33சதவீதத்தையும் எட்டவில்லை. அகவாழ்க்கைக்கான விடுதலை என்பது முழுவதுமாகக் கிடைத்துள்ளதா? என்றால் மிகப் பெரிய கேள்வி எழுகிறது.*

*இன்றைய கால கட்டத்தில் பெண்களுக்கு மட்டுமல்லது பெண்குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமைகளும், ஒடுக்குமுறைகளும் பெருகிவருவதை ஊடகங்களின் வழியே அறிகிறோம். இவ்வாறான நிகழ்வுகள் பெண்களுக்கு எதிராக தொடர்வதற்கான காரணம் என்ன என்பதைத் தீவரமாக ஆராய்ந்தால், ஆண்களுக்கு பாலியல் சுதந்திரம். பெண்களுக்கு பாலியல் சுதந்திரம் இல்லாத்தால் பெண்களின் விடுதலைக்கான தடைகளும் அநீதிகளும் பெருகின்றன. அத்தடைகள் என்ன, அவற்றை நீக்குவதற்கான வழிமுறைகள் என்ன என்பதை 'அகவிடுதலையே பெண்விடுதலை' என்ற நூல் வழியே ஆசிரியர் தன் கருத்தை எடுத்துரைக்கிறார்.*

*பெண்விடுதலைச் சிக்கலுக்கான தீர்வுகளை முற்றிலும் புதிய பார்வையில் சில காத்திரமான உண்மைகளோடு ஆய்வினை மேற்கொண்டுள்ளார் நூலாசிரியர் நளினிதேவி. ஐந்து இயல்களில் பல்வேறு துணைத்தலைப்புகளில், பெண்களின் அகப்புறச்சிக்கல்கள் விரிவான முறையில் ஆராயப்பட்டுள்ளன. இறுதியாக நிறைவுரையில் முழுமையான தீர்வுகளைக் கண்டறிந்து தொகுத்துத் தருகிறார்.*

*பெண்ணியம் குறித்தும் பெண்விடுதலை குறித்தும் சமுதாயத்தில் பாரதியார், பெரியார், பாரதிதாசன் போன்ற பல்வேறு அறிஞர்கள் குரல் எழுப்பிய போதும் பெண்கள் சமூகத்தில் விழிப்புணர்வு பெறவில்லை என்பதை ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். பெண் கற்பு என்ற கட்டுபாட்டுக்குள் முடக்கப்பட்டு, அமுக்கப்பட்டு, சிறைபட்டு அடங்கி ஒடுங்கி வாழ்கிறாள்.*

*பெண்ணுரிமைக்குப் பாரதி குரல் கொடுத்தாலும் பாரதி, பெண்களைக் குனிந்து கும்மியடித்துக் கொண்டாடச் சொல்வது ஆசிரியருக்கு உடன்பாடில்லை.*

பெண் விடுதலை குறித்து பல கட்டுரைகளில் பாரதியார் விரிவாகவே பேசியுள்ளார் என்றாலும் அவர் கூறிய, 'ஸ்திரீகளை மிருகங்களாக வைத்து நாம் மாத்திரம் மஹரிஷிகளாக முயலுதல் மூடத்தனம். பெண் உயராவிட்டால் ஆண் உயர முடியாது' (பக்.294) என்ற கருத்து உற்று நோக்கத்தக்கது.

பெண்கவிஞர்கள் பலரின் கவிதைகள் பெண்ணுரிமையின் பெருமிதங்களைப் பேசுவதாக எடுத்துக்காட்டுடன் விளக்குகிறார். அன்று ஆண்டாள் எழுதிய கவிதைகளே இன்று பல பெண்பாற் கவிஞர்களுக்கு உந்துசக்தியாகவும் புதிய ஒளி பிறக்கவும் வழிவகுத்துள்ளதாகக் கருதுகிறார்.

கற்பு என்ற பொய்மை ஆண்களால் பெண்களுக்குக் கற்பிக்கப்பட்டது. இதனுள் பெண் முடங்கி, கூண்டுக்குள் அடைபட்ட பறவையாய், சிறைபட்டு, சிறகுகள் முடக்கப்பட்ட பறவையாய், கற்பனைச்சுவர் தடுக்கப்பட்டு இரும்புத்திரைக்குள் மறைக்கப்பட்டிருக்கிறாள்.

பெண்கள் எத்துணை இழிவுக்குள்ளான நிலையில் 'படிதாண்டா பத்தினி' என்ற பழமொழி தோன்றியிருக்க முடியும் என்பதைப் பெண்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்பதை மனக் குமுறலாகப் பதிவுசெய்கிறார்.

பெண்ணுக்கு அச்சம் என்ற இருள் விலகி புதிய ஒளி பாய்ச்சியதுபோல் பெண் துணிவு பெற்று எழவேண்டும்.

கல்விக்கண் திறக்கப்பெற்றாலும் பெண் முடங்கியே கிடக்கிறாள். இதற்குத் தடையாக இருப்பது கற்பு, குடும்பம் என்ற புறத்தளைகளிலிருந்து பெண்கள் விடுபடவேண்டும் என்கிறார்.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் மற்றும் ஒடுக்குமுறைகள் மிகுந்துள்ளன. இத்தகைய அடக்குமுறைகளைப் பெண்கள் தங்கள் ஆற்றலால் உடைத்தெறிய வேண்டும்.

கரைஉடைந்து வருகிற புதுவெள்ளம் போல் பாய்ந்து தடைகளைக் கடந்து வந்தால் மட்டுமே பெண்ணியம் தழைக்கும் என்கிறார். இவ்வாறு தடைகளைக் கடந்து வரும் பெண்களைச் சமூகம் களங்கம் சுமத்தவே செய்யும். இத்தகைய கறைகளும் அழுக்கும் சிலகாலமே! புயலுக்குப் பின் அமைதி நிலவுவது போல் இந்த வடுக்கள் நீங்கி விடும் என்கிறார்.

தொடக்கக் காலத்தில் உழவையும், விவசாயத்தையும், பயிர்த்தொழிலையும் கண்டறிந்தவர்கள் பெண்கள். ஆடல்பாடற்கலைகளை வளர்த்தவர்கள். கற்பு என்ற ஒன்று பெண்ணுக்கு அன்று இல்லை. ஆண்களை விட பெண்களே வலிமையானவர்கள் எனபதற்குப் பிள்ளைப் பேறே சான்றாகும் என்கிறார்.

கல்வி, கேள்வி, திறமை, வலிமை எனப் பல்வேறு திறமைகளைப் பெண்கள் பெற்றிருந்தாலும் இச்சமூகத்தில் தங்கள் விருப்பங்களை செயல்படுத்த இயலாத நிலையிலேயே இருக்கின்றனர். ஆணுக்கு ஒரு வாசல் பெண்ணுக்கு ஒரு வாசல் என்று கட்டமைக்கப்பட்டுள்ளது. கற்பும் கற்பிதங்களும் பெண்களின் அறிவை மழுங்கடிக்கிறது.

பெண்களின் காதல் உணர்வுகள் ஏன் மதிக்கப்படுவதில்லை? என்ற கேள்வியை எழுப்புகிறார். பெண் தன் உணர்வை வெளிப்படுத்தினால் ஒழுக்கக் கோட்பாட்டை மீறுகிறாள் என்று கூறுவது எங்ஙனம்? எவ்வாறு அது குற்றமாகும்? என்கிறார்.

ஆண்களின் இச்சையைத் தீர்க்கும் பெண்களுக்கு மட்டும் பட்டப்பெயர்களும்

பழிச்சொல்லும். இவை ஆண்களுக்கு மட்டும் ஏன் இல்லை என்று கேட்கிறார். ஆண் தன் இச்சையைத் தீர்க்க பல பெண்களை நாடுகிறான். இத்தகைய பெண்களைத் தூற்றும் உலகம் ஆண்களை மட்டும் தூற்றுவதில்லையே! இந்த முரண் களையப்படவேண்டும் என்கிறார்.

அடக்கப்பட்ட பாலுணர்வும் கட்டுப்பாடற்ற பாலுணர்வும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளையே உண்டாக்குகின்றன. இதனால் பாதிக்கப்பட்ட பெண்கள் தற்கொலைக்குப் பலியாவது ஏன்?

கற்பு என்ற ஒற்றைச் சொல்லால் பெண்கள் இன்று அடக்கி ஒடுக்கப்படுகின்றனர். அடக்கி ஒடுக்கப்படும் போது எல்லை மீறல் இருக்கத்தானே செய்யும்! சுதந்திரமாக இருந்து விட்டால் இப்பாலுணர்வில் பிரச்சினை இருக்காது என்கிறார்.

இச்சுதந்திரம் பெண்கள் தப்பான வழியில் செல்ல வழிவகுக்கும் என்பதாக ஆண்கள் கருதுகின்றனர். ஆண்களுக்கு இருக்கும் உரிமை அனைத்தும் பெண்களுக்குக் கிடைத்துவிட்டால் இச்சமூகத்தில் வன்புணர்வுகளும் கொலைகளும் குறையும் என்கிறார்.

கற்பு என்ற எல்லைகள் வகுப்பதால்தான் நாள்தோறும் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை வயது வேறுபாடின்றி உறவு முறைகள் பிறழ்ந்து எங்கெங்கும் வன்புணர்வுகள் பெருகி வருகின்றன.

பிறப்புறுப்புகள் ஏனைய உறுப்புகளிலிருந்து அந்நியப்படுத்தி மறைக்கப்படுவதும் அவை பாலுணர்வு உறுப்புகள் என்று வன்புணர்வுக்கு இட்டுச் செல்கின்றது.

ஆண் பெண் என்ற வேறுபாடு சில உடல் உறுப்புகளால் மாற்றம் இருக்கிறது என்றாலும் கரு /தாய்மை என்ற தகுதியால் பெண் உயர்ந்து நிற்கிறாள். ஆணுக்காகப் பெண் படைக்கப்பட்டிருக்கிறாள் என்ற குப்பைச் சிந்தனைகளைத் தூக்கி எறியவேண்டும் என்கிறார்.

பாலுணர்வு என்பது தனிப்பட்டது. ஒவ்வொருவருக்குமான உரிமை. அது அடுத்தவர் உரிமையை பாதிக்கக் கூடாது.

கல்வி, வேலைவாய்ப்பு, பொருளியல் உரிமையால் பெண்ணுக்கு விடுதலை இல்லை. பாலியல் விடுதலையே பெண் விடுதலைக்குச் சரியான தீர்வு என்பதை முன்வைக்கிறார்.

வரலாற்றின் நிழலில் ஒளித்துளிகள் என்று இலக்கியங்களும் காப்பியங்களும் கற்பனைக் கதைகளும் பெண்களின் வரலாற்றைத் திட்டமிட்டு மறைத்துள்ளன என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். இவை அனைத்தும் ஆண்களால் மட்டுமே எழுதப்பட்டுள்ளதால் பெண்கள், ஆணுக்குள் அடங்கியவர்களாகவே புனையப்பட்டுள்ளனர். அவ்வை, ஆண்டாள், காரைக்கால் அம்மையார், மகாபாரதத்தில் அம்பை, பாஞ்சாலி போன்றோர் ஆண்சமூகத்தை எதிர்த்த நிலையில் இவர்களின் குரல் நசுக்கப்பட்டு கடவுளாக்கப்பட்டுள்ளனர். அவர்களின் கதைகளை உற்று நோக்கினால் அவர்கள் தடைகளைத் தகர்த்தெறிய முயன்றுள்ள உண்மைகள் பளிச்சிடும் என்கிறார்.

பெண்விடுதலை பெண்களுக்குமானது மட்டுமன்று! அது மனித விடுதலை விடுதலைக்கானது என்கிறார். 'பெண்ணுக்கு விடுதலை இல்லை எனில் அது மண்ணுக்கும் இல்லை' என்கிறார். பெண்கள் தங்கள் அகஉணர்வைத் தயங்காது வெளிப்படுத்தும் போதுதான் பெண்களுக்கான முழுவிடுதலையும் கிட்டும் என்கிறார்.

ஆண்களைவிட பெண்கள், பொறுமை, வலிமை, அறிவு, ஆற்றல், சகிப்புத்தன்மை,

பரந்த மனநலம் மிக்கவர்கள். ஒருசில ஆண்கள் பெண்களைப் புரிந்து கொண்டு பெண்ணை முன்னேற்ற பாதையில் கொண்டு சென்றுள்ளனர். அவர்களால் பல இடங்களில் பெண்கள் உயர் பதவிகளையும் வகிக்கின்றனர். பிரதமர், முதலமைச்சர், கவர்னர், குடியரசுத்தலைவர், நீதிபதி எனப் பல உயரிய பதவிகளை இன்று பெண்கள் பெற்று வருகின்றனர். பெண்கள் மதிக்கப்படுகின்றனர் என்பதும் உண்மை.

சமுதாய விடுதலை இல்லாமல் அரசியல் விடுதலையால் பயனில்லை என்று சொன்னார் பெரியார். கற்பை இருபாலாருக்கும் பொதுவாக்கினான் பாரதி எப்படி? கற்பு - கல் என்ற வேர்ச்சொல்லிளிருந்து பிறந்தவை கல்வி, கற்பு, அறிவு. கற்பிக்கப்படுவது எதுவோ அதுவே கற்பு என்பதால் கற்றால் தான் ஞானத்தைப் பெறமுடியும். “கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை“ என்பதிலும் சொன்னசொல் மாறாதது. இப்படிப் பொதுவாக கற்பிக்கப்பட்ட சொல்லை, பெண்களுக்குமட்டும் ஏற்றிக் கூறுவதில் ஆசிரியர் தனக்கு மட்டுமல்ல பெண்கள் அனைவருக்குமான கேள்வியாக கேட்கிறார்.

நம் சமுதாயத்தில் ஆணுக்குப் பாலியலில் கட்டுப்பாடு இல்லை. கற்பு என்று சொல்லிப் பெண்ணைத்தான் பூட்டி வைக்கிறார்கள், இதனால் தவறுகள் நேரிடுகின்றன. ஆணைப்போலவே பாலியல் உணர்வில் பெண்ணுக்கும் சுதந்திரம் தேவை. பாலியலில் சுதந்திரம் தமக்கும் உண்டு என்று பெண்கள் வாழவேண்டும். கற்பு என்பது இருவருக்கும் பொது என்று வந்து விடுகிறபோது வேறு பிரச்சினைகள் வர வாய்ப்பில்லை என்பதாகக் கருதுகிறார்.

பெண்ணியம் பற்றி ஓர் ஆழமான கட்டுரையை தந்திருக்கிறார். பாலியல் வரலாற்றை விவரிக்கிறார் தொன்மைக் காலத்தில் என்ன நேர்ந்தது என்பதையும் சொல்லுகிறார். தாய் முதன்மைச் சமூகத்தில் பெண்ணுக்குப் பாலியல் சுதந்திரம் இருந்தது என்கிறார். ஆண் தலைமைச் சமூகம் வரும்போது பெண்ணுக்குக் கற்பு என்று சொல்லி கட்டுப்படுத்துகிறார்கள் என்பதை விரிவாகச் சொல்லுகிறார்.

அகவிடுதலை என்றால் பாலியல் சுதந்திரம் மட்டும் என்பதை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. குடும்பச்சூழலில் குழந்தை வளர்ப்பு, உணவு தயாரிப்பு, இல்ல பராமரிப்பு என அனைத்தையும் ஆண்களும் பெண்களும் பகிர்ந்து ஏற்றதாழ்வின்றி வாழ்ந்தால் மட்டுமே பெண்கள் முழுமையாக விடுதலை பெற்றவர்களாகக் கருதப்படும் என்பதை ஆசிரியர் ஏன் கூறவில்லை என்பது எனக்குள் எழுந்த கேள்வி.

கற்பு என்ற கட்டமைப்பு பெண்களுக்கு மட்டுமே பின்பற்றப்படுவதால் இச்சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள், பாலியல் வன்புணர்வுகள் என்பவற்றால் பெண்கள் பாதிக்கப்படுவதை ஆசிரியர் மிகுந்த வலியோடு பதிவு செய்துள்ளார். அவரின் கருத்துகளை நாம் படித்து கலந்து விவாதிப்போம். பல்வேறு கேள்விகளை இந்நூலில் முன்வைத்துள்ளார். ஆசிரியரின் புதிய முயற்சியால் வெளிவந்திருக்கும் இந்நூல் பெண்களின் சிந்தனையைத் தூண்டக்கூடியதாக அமைகிறது. நூலாசிரியருக்கு உரித்தான நீரோட்டம் போன்ற அழகிய தமிழ் நடை இந்நூலிலும் மிளிர்கிறது. அனைவரும் படித்து அறிந்து கொள்ளவேண்டிய ஓர் அரிய நூல்.

நூலாசிரியர் :முனைவர் நா.நளினிதேவி

பதிப்பகம் : கைத்தடி சென்னை - 41.

துணைமை நூல்:

பாரதியார் கட்டுரைகள், சுப்பிரமணிய பாரதியார், வானதி பதிப்பகம்,சென்னை.17

• கவிஜி

# நட்சத்திரங்கள் பொறுக்குகிறேன்



*சுவர் மறைய பெருங்காடு*
*வீட்டுக்குள்*
*வீடு மறைய பெருந்தேசம்*
*மாயங்கள்*

*வலை நீள்கிறது*
*வானம் இல்லை*
*நட்சத்திரங்கள் பொறுக்குகிறேன்*

*கால்குத்தும் சிறு கல்லில்*
*பெரும் வாய்கள்*
*நறநற மொழிகளில்*
*பொடி பட கிடக்கிறது காலம்*


*சிறிது களைந்து பெரிதாய்*
*நிற்கிறேன்*
*எல்லாம் களைந்து சிறியதாகவும்*
*இருக்கிறேன்*

*இரு கண்ணிலும் இரு சுழற்சி*
*இருக்கட்டுமென இருக்கிறது*
*திறக்காத நெற்றிக்கு கண்ணும்*

*நான் காயும் என்னை*
*உற்று நோக்குகிறேன்*
*மாயவலை மெல்ல மெல்ல*
*கவிழ்கிறது*

*இளஞ்சூடும் பேரிருட்டும்*
*பரவாயில்லை போல தான்*
*கம்பளியென இழுத்து போர்த்துகிறேன்*
*என்னை*

*இருள் அசைக்கும்*
*பிறழ் கைகள்*
*திடுக்கென விழிக்கிறேன்*
*எதிரிலும் நான்*



● தங்கேஸ்

*என் கனவிற்குள் அத்து மீறீ நுழைந்து*
*என்னிடம் கிசு கிசுத்தது*
*தொங்கு வால் நட்சத்திரம்*
*''என்னை வந்து தனிமையில் பாரேன் ''*

*விழிப்புற்று மொட்டை மாடி வந்து நோக்கினேன்*
*எனக்காகவே காத்துக்கொண்டிருந்தது*
*என்னிடம் வந்து பிரியம் வழிய*
*பேச ஆரம்பித்தது*
*நட்சத்திரங்களின் மொழி தெரிந்தவன் என்பதால்*
*உன்னிடம் மட்டுமே மறைக்காமல் சொல்கிறேன் கேள்*

*ஜென்ம ஜென்மமாய் விழித்திருக்கும் சாபம் பெற்றவர்கள்*
*இருளின் மடியில் தலைசாய்த்திருப்பது ஏன் தெரியுமா?*
*சாபங்களை தீர்த்து விட அல்ல*
*வரமாக்கிவிட வே*

*நான் குழம்பி நிற்க*

புரியவில்லையா உனக்குப்புரியவேயில்லையா ?
என்று கேட்டு விட்டு தொடர்ந்தது

நட்சத்திரங்கள் மனிதர்களாகப் பிறக்கிறார்கள்
அதுவும் ஆண்களாக பெண்களாக கள்ளமற்ற குழந்தைகளாக

தாங்கள்நட்சத்திரங்களாக வாழ்ந்த காலத்தில்
நேசித்தவர்களின் ஞாபகம் அற்றவர்களாக
தூங்குவதற்கு அலைகிறார்கள்
அணுக்களில் நட்சத்திரங்களை
சுமந்து கொண்டு


நீயும் நட்சத்திரக் கனவுகள் கண்டு கொண்டிருப்பவன்தானே?
நான் மௌனிக்க
அப்படியென்றால் நீயும் ஒரு ஆதி நட்சத்திரமாய் இருந்து
மனிதனாக சபிக்கப்பட்டவன் தானே என்று உரத்துக்கேட்டது

நான் திகிலடைந்து போய் நிற்க
இரவு விடைபெறும் முன்
இருளை எங்கே ஒளித்துவைத்துவிட்டுச்செல்கிறது
சொல் பார்க்கலாம்

வானத்திலா பூமியிலா இல்லவே இல்லை
இடைவெளி விட்டு
மனிதர்கள் மனத்தில் தான் மனதில் தான்
என்று கதறி தேம்பியது

ஒரு நிமிடத்தின்
ஆயிரத்தில் ஒரு பங்கில்
ஒரு கண்ணீர் துளியில்
நான் சூல் கொண்டு
மீண்டும் கண்விழிக்க
நட்சத்திரத்தை காணவில்லை
என்னையும் தான்.

● முத்தையா சிவனேசன்
(நயினாதீவு இலங்கை)



# பருப்புச்சட்டி

முப்பது வருசம் எண்டா கொஞ்சக் காலமே எத்தின மாற்றங்கள், எல்லாமே புதுசு புதுசாய்த்தான் இருக்கு ஊரும் மாறிப் போயிற்று ஆக்களும் தான். என்ன அம்மம்மா பழைய ஞாககங்கள் வந்திட்டுப் போல இருக்கு, இறங்கிற இடம் வந்திட்டு என்ர பேரனின் குரல் கேட்டு திரும்பிப் பார்க்கிறேன். அவன் சின்னப்பொடியன் இடம்வலம் தெரியாது ஏதோ கூகுல் படத்தில பாத்துத் தான் சொல்லுறான் அந்த நாடுகளில இப்படித்தானே போனில பாத்துக்கொண்டு தெரியாத இடமெல்லாம் போய்வருங்கள். அட நம்மட சங்கக் கடைச் சந்தி, அந்த மதவடி, கிழக்கு மூலையில இருந்த வெறுங் காணி முந்தி வேலியும் இல்லாமக்; கிடந்தது சின்னையா குஞ்சிக்குத் தான் செர்ந்தம் அவரக்குத்தான் பிள்ளையள் இல்லையே வளர்ப்புப் பொடியனின்ர பொடியள் ரெண்டும் கனடாவில தான் இருக்க வேணும் அதுகள் தான் காசனுப்பி மதில் கட்டப்பட்டதோ அல்லது ஆருக்கும் கைமாறிப் போயிட்டுதோ தெரியேல்ல? சந்தியில இறங்கி ரெண்டு நட நடக்க தெற்குப்பக்கத்தில பள்ளிக்கூடம் மதில் கரையோட இருந்த விஞ்ஞான ஆய்வுகூடம் பள்ளிக்கூடத்தில முந்திப்படிச்ச கனடாவில

இருக்கிற பழையமாணவர்களால திருத்தப்பட்டிருக்கு முகப்பில பெரிய எழுத்தில எழுதிப் போட்டிருக்கினும் அதுக்கே கனகாசு முடிஞ்சிருக்கும் காசு குடுக்கிறவ இதுகள எதிர்பாப்பினும் தானே? பள்ளிக்கூடத்துக்கு வடக்கால பிள்ளையார் கோவில் வயலுக்கால நடந்து கந்தசாமி அண்ணற்ற வீட்டுக்குப் பின்பக்க ஒழுங்கையில ஏறி ரெண்டு முடக்குத் திரும்ப வீடு வந்திடும், எனக்குள்ளே நினைத்துக் கொள்கிறேன்.

மூன்று வரு~த்துக்கு முன்னுக்குத் தான் மகளும் மருமகனும் வந்து வீடு வாசலயெல்லாம் திருத்திப்போட்டுப் போனவை எனக்கு முழங்கால்ல ஒப்பரேசன் செய்திருந்ததால என்னால அப்ப வரமுடியேல்ல மாமி உங்கள ஒவ்வொரு வரு~மும் ஊர்க் கோயில்த் திருவிழாக்குக் கூட்டிக்கொண்டு போவன் எண்டு என்ர மருமகன் ஓரே சொல்லிக்கொண்டிருந்தவர். நம்ம விட்டில போய் அம்மாட கையால அங்க இருக்கிற பருப்புச்சட்டியில ஒரு நல்ல பருப்புக்கறி வைச்சு எல்லாரும் சாப்பிடவேணும் எண்டு என்ர மகள் ஒரே சொல்லிக்கொண்டிருந்தவள். அங்க கனடாவில ஊரில மாதிரி சந்திக்குச் சந்தி சாப்பாட்டுக் கடைகள் இருக்கு எல்லாக் கடையிலையும் எந்த நேரமும் சனமாய்த்தான் இருக்கும். வேலை வெட்டி எண்டு ஓடித்திரியிறதில வீடு வாசல்ல இருந்து சமைக்க ஆருக்கு எங்க நேரம் இருக்கு. மருமகனுக்கும் என்ர பருப்புக்கறி எண்டா நல்ல விருப்பம் சைவச் சாப்பாட்டக்கு அந்த ஒரு கறியே காணுமெண்டு அடிக்கடி சொல்லுவார். ஆரு கண்ணூறு பாத்திச்சினமோ தெரியெல்ல சும்மா ஓடித்திரிஞ்ச மனுசன் வேலைக்குப் போயிட்டு வந்து கொஞ்சம் களைப்பா இருக்கெண்டு செற்றியில குந்தினவர்தான்;, நானும் உடன சூடா நெஸ்டமோல்ட கரைச்சு குடிக்கக் குடுத்தன், ரெண்டு மிடறு குடிச்சிட்டு அப்பிடியே கதிரையில சாஞ்சவர்தான் எழும்பேல்ல. அம்பிலன்சில வந்து வெள்ளக்காரன்கள் எத்தன வைத்தியம்தான் செய்து பாத்தாங்கள் அவர எழப்ப முடியேல்ல ஏதோ காடியோ அரஸ்டாம் அந்த இடத்திலயே உயிர் பிரிஞ்சிட்டு. இப்பதான் எத்தின புதுப் புது வருத்தங்கள். சீவன் போகேக்க பாவம் பிள்ளயும் பக்கத்தில நிக்கேல்ல, கேள்விப்பட்டு வேல இடத்தில இருந்து ஓடி வந்தவள் மனுசன் கிடக்கிற நிலையப் பாத்து பதறிப்போனாள். மூண்டு மாதமா வீடே இருண்ட மாதிரிக்கிடந்தது பிள்ளையும் அதோட வேலைய விட்டிட்டாள், பொடியளும் வளந்திட்டுதுகள் தானே. மூத்தவன் கலியாணம் முடிச்சு மூண்டு வயசில ஒரு சின்னக்குட்டியும் இருக்கு, அவயளோடதான் இப்ப நான் ஊருக்கு வந்தனான். மருமகன் எல்லாருக்கும் சேர்த்து எனக்கும் சில்லுப்போட்டகதிரையோட இருந்து போகக்கூடிய மாதிரி ஆறு மாசத்துக்கு முன்னே பதிஞ்சு விட்டிருந்தவர். நீங்க முன்னுக்குப் போங்க நாங்க பின்னுக்கு வாறமெண்டு சொன்னதுகள் தான் எங்க வந்தது எல்லாமே தலைகீழாய் மாறிப்போயிற்றே.

ஓல்ட் கிராண்ட்மா, பேரன்ர சின்னன் எனக்கு வச்சிருக்கிற பெயர் அதுதான், “கிளவு கழட்டு கொட் இருக்கு” அதுக்கு தெரிஞ்ச தமிழில என்ர கையில போட்டிருக்கிறதக் கழட்டு வெக்கையாக இருக்கும் எணடு சொல்லுது எண்டது மட்டும் விளங்குது. மூன்றாவது தலைமுறையில உள்ளதுகள் இந்தளவு தமிழ் கதைக்கிறதே பெரிய விசயம். அங்க கனடாவில சிலர் தமிழ் நல்லாத் தெரிஞ்சிருந்தும் தமிழ மறந்துபோய் ஆங்கிலத்தில எல்லோ பிள்ளையளோட வீட்டிலையும் கதைக்கினும். நம்மட சொந்த மொழியைக் கதைக்கிறதுக்கு ஏன் தான் பஞ்சிப்படினமோ தெரியேல்ல. நம்மட நாட்டிலதான் ஒரு காலத்தில நெத்தியில இருந்த பொட்டையும் அழிச்சுப்போட்டு வாயையும் மூடிக்கொண்டு ஆரெவர் எண்டு தெரியாம இருக்கட்டும் எண்டு நடமாடித் திரிஞ்சனாங்க அந்த நாட்டில தான் எந்த மொழயைக் கதைக்கிறதுக்கும் எந்த கலாச்சாரங்களைப்பின்பற்றிறதுக்கும் நல்ல வசதியம் சுதந்திரமும் இருக்கே பிறகேன் தான் பயப்பிடுவான்.

கனடாவில பயணம் வெளிக்கிடேக்க போத்துக்கட்டினது, பிளேன் எறி வந்து கொழும்பில இறங்கி, ரெயிலேறி வந்து யாழ்ப்பாணத்தில இறங்கி, வஸ்சில ஏறி, வள்ளத்தில ஏறி பிறகு உள்ளுக்குள்ள ஓடித்திரியிற வஸ்சிலயும் ஏறி வீட்டுக்குக் கிட்ட வந்திறங்கியாச்சு இனி நடக்கிற தூரம் தான் விடு வந்திடும். வீட்டில போய்த்தான் எல்லாத்தையும் கழட்டி எறியவேணும் செருப்பும் போடாம எல்லோ ஊரில திரியிறது. குளிர்ப்பெட்டிக்குள்ள குந்திக்கொண்டு இருக்கிற மாதிரியெல்லோ அந்த நாட்டில இருக்கிறது. அங்க இருக்கிறகைக்கு பழகிப்போட்டுது, எங்க பழகிறது உடம்பு முழுக்க போர்த்துக் கட்டிக்கொண்டு நடமாடித்திரியுதுகள். ஆனாலும் சும்மா சொல்லக்கூடாது அந்த நாட்டில எல்லா வசதியும் இருக்கு, க~;டம் கரைச்சல் எண்டு சொல்லிறதுக்கு ஒண்டுமில்ல படிக்கிறதக்கு வேலை செய்யிறதுக்கு எல்லாத்துக்கும் நல்ல வாய்ப்புக்கள் இருக்கு வேலை செய்யமுடியாதவைக்கும் அரசாங்கம் காசு குடுக்கும். வயதுபோனவைக்கு எண்டு தனி மரியாதை, வைத்தியவசதி போக்குவரத்து எண்டு எல்லாமே இலவசம், அதோட சும்மா விட்டில இருக்கிற எங்கள மாதிரி ஆக்களுக்கும் அரசாங்கத்திட்ட இருந்து காசு வேற கிடைக்குது.

வயலத்தாண்டி ஒழுங்கையில காலடி வைக்கிறம் வண்டிக்கார நாமுத்தர் வீட்டு முடக்கடியில நீட்டிக்கொண்டிருந்த கல்லைக் காணேல்ல? எத்தின தடவை அந்தக் கல்லு என்ர காலப் பெயர்த்திருக்கும் ஒருக்கா ஞாபகமிருக்கு பெருவிரல் நிகமெல்லாம் பிய்ந்துபோய்க் ரெத்தம் கொட்டெண்டு கொட்டி கந்தசாமி அண்ணர் விட்டுக் கிணற்றடில போய்க் காலைக் கழுவி பிறகு அண்ணற்ற ஆச்சியெல்லோ ஏதோ கை வைத்தியம் செய்து துணியால சுத்திக் கட்டிவிட்டது பாவம் மனிசி, வண்டிலுகள் ஓடி இந்த ஒழுங்கையெல்லாம் நாசமாய்ப் போச்சு எண்டு மனிசி அப்ப சொன்னது இன்னும் ஞாபகமிருக்கு அது மனிசியின்ர ஆதங்கம் மட்டுமல்ல அதோட பக்கத்துவீட்டு வண்டிக்கார நாமுத்தர் வீட்டோட அவைக்கு நெடுநாள் குடும்பப் பகை. கல்லொழுங்கயுளுக்கெல்லாம் இப்ப தட்டிப்பரப்பி தாரும் போட்டிட்டாங்கள், சின்னன் தன்ர சில்லுப்போட்ட பாக்கையும் இழுத்துக்கொண்டு வருதெண்டா பிறகென்ன. இராசமணியண்ணர் வீடு அமிர்தலிங்கண்ணர் வீடு ஆக்கள் ஒருத்தரும் இல்லாம அழிஞ்சுபோய் கிடக்கு. பக்கத்து வீட்டு பரமத்தான் விட்டில ஆரோ தெரிஞ்ச சனத்தை இருத்தி இருக்கிறதால வீடு வாசல் பரவாயில்லாமல்க் கிடக்கு. முன் விட்டு கணபதியக்கா வீட்டில அவேட ரெண்டாவது மகன் வெளிநாட்டு வாழ்க்கை வேணாம் எண்டு விட்டெறிஞ்சு போட்டு புதுசா எல்லா வசதியளோட வீடொண்டும் கட்டி பிள்ளையளையும் படிப்பிச்சுக்கொண்டு ஊரோட இருக்கிறான். வீடும் பாக்க பளிச்செண்டிருக்கு காணி எல்லாம் சோலை மாதிரியெல்லோ இருக்கு அங்க போய்த்தான் நம்மட விட்டுத் திறப்பை வாங்கவேணும்.

நம்மட வீட்டு வெளிவளவில சாய்ந்துபோய் நிண்ட வேப்பம் மரம் இலை கொட்டிக்கிடக்கு அந்த மரத்தைப் பாக்கிற நேரமெல்லாம் என்ர கடைக்குட்டியின்ர ஞாபகந்தான் வரும். ஒரு நாளைக்கு எத்தின தரம் இந்த வேப்ப மரத்தில ஏறி விளையாடுவான். இந்த வட்டாரத்துப் பொடியள் எல்லாம் வந்து நிண்டு கூத்தாடுங்கள். அதுகள் விளையாடாத விளையாட்டா பந்தடி, கிட்டிப்புல்லு, கிளித்தட்டு, ஒளிச்சுப்பிடிச்சு எண்டு எத்தின விளையாட்டுக்களைத் தான் விளையாடுங்கள். அதோட கோயில் கொடியேறிப்போயிட்டா வீட்டிலையும் கோயில்கட்டி பூவரசம் இலையில பீப்பி செய்து மாப்பேணி மூடியை கழட்டி கடதாசி மட்டை வைச்சுக் கட்டி மேளம் செய்து எல்லாப்பொடியளும் சேர்ந்து அடிச்சுக்கொண்டும் ஊதிக்கொண்டும் திரியுங்கள். ஆறாம் வகுப்புக்கு படிக்கிறதக்கு பெரிய பள்ளிக்கூடத்துக்கு எடுபட்டு போகேக்க ஒரே அழுதுகொண்டு இருந்தவன் இன்னும் ஞாபகமிருக்கு கடைக்குட்டியல்லே ஓரே என்ர சீலையில பிடிச்சண்டு திரியிறவன் விட்டுப்பிரியிறதெண்டா கவலையாய்தானே இருக்கும்.

இவனோட சேர்ந்து இன்னும் மூண்டு பொடியளுமாய் விடுதியில இருந்து தான் படிச்சவங்கள் நல்லா படிச்சதுகள் பொடியள் மூன்று வரு~ம் பட்டினத்தில இருந்து படிச்சவங்கள் மூன்று மாதத்திற்கொருக்காய் விடுமுறை விடேக்க ஓடி வந்து வீட்டில நிற்பான் மற்றும்படி பள்ளிக்கூடமும் படிப்பும் எண்டு தான் திரிஞ்சவன் குழப்படியில்ல நாசமாய்போவான்கள் எங்க கிடந்து வந்தாங்களோ தெரியேல்ல எங்கட நாட்டுப் படைதான் எங்களுக்கு எதிரியாப் போச்சே தங்களில்ல ஆரேனும் செத்துப்போயிட்டா காயப்பட்டுப் போயிட்டா சமப்படுத்திறதுக்கு நம்மட பொடியளப்பிடிச்சு சரிக்கட்டிப் போடுவாங்கள். இப்பிடித்தான் பாலத்தடியில ஏதோ குண்டு வெடிச்சதாம் இராணுவத்தில பத்தப் பேர் பலியெண்டோண்ண பள்ளிக்கூட லீவுக்கு வழமைபோல விட்டுக்கு வந்த பொடியனப் பிடிச்சிட்டாங்கள் வாகனத்தில இருந்து இறக்கி ஒரு பத்துப் பதினைஞ்சு பேரை கூட்டிக்கொண்டு போனவங்களாம் வாகனத்தில வந்தவ சொல்லிச்சினம் இண்ட வரைக்கும் என்ன ஆனது பொடியனுக்கு எண்டு தெரியாது. நானும் தேடாத இடமில்ல பாக்காத ஆக்களில்ல எல்லாரும் கைய விரிச்சுப்போட்டாங்கள். பொடியன் இல்லாம வீடே சூனியமாயிருந்தது. பொடியனப்பிரிஞ்ச கவலை என்ர மனிசனையும் வருத்தக்காரனாக்கிப்போட்டுது. அவரும் கனகாலம் இருக்கேல்ல அடுத்த வரு~ கோயில் திருவிழாக்கு இரண்டு நாளைக்கு முதல் அவரும் மண்டையப்போட்டிட்டார். இந்தத் திருவிழா வந்தா முப்பத்தைந்து வரு~மாகுது.

என்னதான் வசதியிருந்தாலும் உலகத்தைச் சுத்தி வந்தாலும் நம்மட விட்டில வந்திருந்து கையைக்கால நீட்டி ஒரு செம்பு தண்ணிய அள்ளிக்குடிக்கேக்க இருக்கிற சந்தோசம் வேற எதிலையும் இல்ல. எவ்வளவு கலகலப்பாய் இருந்த ஊர் அக்கம் பக்கம் எல்லாம் மாறிப்போச்சு. நம்மட வயதில இருக்கிறவைய இப்ப விரல்விட்டு எண்ணலாம். சின்னனில சாப்பிட்ட ஊர்ச் சாப்பாடும் கனடா வைத்தியமும் தான் இன்னமும் நடமாடித்திரிய வச்சிருக்கு. அதுசரி நேரம் காலம் வந்தா எல்லாரும் போகவேண்டியதுதான் ஒருத்தரும் வீரம் பேசேலாது அதுக்குள்ள நீ பெரிசு நான் பெரிசு எண்டு எத்தின விதமான சனங்கள். அங்க குளிர் நாட்டில வீட்டுக்குள்ள அடைச்சு வைச்சிருந்த சின்னனும் இஞ்ச வந்தோண்ண புழுகத்தில வீட்டில நிக்காம வளவு முழுக்க ஓடித்திரியுது. எந்தநேரமும் கையில வச்சு அமத்திக்கொண்டு இருக்கிறதையும் இப்ப கண்ணிலையும் காணேல்ல. அரிசிக்க கல்லுப்பிறக்கிறது மாதிரி ரெலிபோன கையில வச்சுத் தட்டி தட்டிக் கொண்டு; பத்தாக்கறைக்கு காதிலயும் ஒண்டைக் கொழுவிக்கொண்டுதான் அந்த நாட்டில பொடியளெல்லாம் நடமாடித்திரியுங்கள். தாய் தகப்பனோட இருந்து கொஞ்ச நேரம் விட்டில ஆறுதலாய் கதைக்குதுகள் இல்லவீயே இப்ப இங்கையும்தான்; எல்லாம் மாறிப் போயிற்று எண்டாலும் அந்தளவுக்கு இன்னும் மாறேல்ல எண்டுதான் நினைக்கிறன் போகப்போகத்தான் தெரியும்.

தெற்குப்பக்கத்தில நிண்ட தென்னம்பிள்ளைக் கண்டுகளெல்லாம் நல்லா பெரிசா உயர்ந்து வளர்ந்திட்டுதுகள் நான் போகேக்க கையால எட்டி இளநீர் புடுங்கக்கூடியது மாதிரி இருந்தது இப்ப அண்ணார்ந்து பாக்க வேண்டியிருக்கு வளவையும் விட்டையும் சுத்திப் பாக்கிறதக்கே மூண்டு நாள்த் தேவை இனி உற்றம் சுற்றம் எண்டு போய்வர அதோட நம்மட சனங்களும் கேள்விப்பட்டு வந்து போக மூண்டு கிழமை என்னத்தக் காணும். மூண்டு கிழமை எப்பிடிப்போனதெண்டே தெரியேல்ல எனக்கு திரும்பிப்போக வேண்டும் எண்ட கட்டாயம் இல்ல சின்னனுகள், படிக்கிறதுகள் வேலைசெய்யிறவை கட்டாயம் திரும்பிப் போய்த்தானே ஆகவேணும். நம்க்கென்ன எங்கையிருந்தாலும் ஒண்டுதான் இந்த மண்ணில சாகிறதுக்கு குடுத்து எல்லோ வைத்திருக்கவேணும.; என்ன அம்மம்மா கடுமையான யோசனையாய் இருக்கிறிங்க, ஊருக்க வந்ததும் பழைய நினைவுகள் வந்திட்டுப்போல கிடக்கு. இரண்டு வயதில போனதில


எனக்கொண்டும் ஞாபகம் இல்லாமல்க்கிடக்கு பேரனின் குரல் கேட்டு திரும்பிப் பார்க்கிறேன். ஓம் தம்பி நீ ஊரவிட்டு நாங்க பயணம் வெளிக்கிடேக்க ஒரு சின்னத் தவ்வல், உன்ர பிறந்த இராசிதான் எல்லாரையும் நாட்டைவிட்டு அப்புறப்படுத்திட்டுது. உங்களுக்கு அந்த நாட்டில படிப்பு நல்ல வேலையள் எண்டு நல்லாய்த்தானே இருக்கிறீங்க. தம்பி நான் இங்க நிக்கட்டுமாடா நான் அங்க வந்து என்ன செய்யிறது. இருக்கிற இன்னும் கொஞ்ச காலத்க்கு நம்மட ஊருல நம்மட சனத்தோட இருந்திட்டுப்போறன் எனக்குத்தெரியும் உன்ர கொம்மா கொதிச்செழுவாள் எண்டு அது தெரிஞ்சுதான் என்ர கடவுச்சீட்டையும் கல்லோட சேர்த்துக்கட்டி பக்கத்து வளவுப் பாண்கிணத்துக்க நேற்றே போட்டிட்டன் சும்மா உன்னட்ட கதைவிட்டுப்பார்த்தனான். நீங்க நாளைக்கு பயணம் தலைகீழா நிண்டாலும் நான் வரேலாது. தம்பி என்னப்பற்றி ஒருத்தரும் யோசிகக்கத்தேவையில்ல. அப்புவின்ர பென்சன இஞ்ச பழையபடி மாத்திவிட்டிட்டா எனக்கு அது சோறுபோடும் ஆரும் எனக்கு காசு அனுப்பவேணும் எண்டில்ல சுகமா நீங்க போயிட்டு வாருங்கோ. தம்பி மறந்திடாம அந்தப் பருப்புச்சட்டியை எடுத்துக்கொண்டு போ எத்தின வருசமானாலும் அந்த வாசனை இன்னும் சட்டியில இருக்கு அதுதான் ஊர் வாசனை மண் வாசனை அது இந்த மண்ணில தான் இருக்கும் கிணத்துத் தண்ணி, வீட்டுத் தென்னமரத்துத்; தேங்காய்ப்பால், வளவு மரத்துக் கறிவேப்பில எண்டு எல்லாம் சேர்ந்த சுவை அது எண்டைக்கும் மாறாது மாற்றவும் முடியாது. அந்த சட்டியை மாதிரி எங்கட கலாச்சாரம் பண்பாடுகளையும் பொத்திப் பொத்திப் பாதுகாக்க வேணும். அது தான் முக்கியம். அந்த சட்டியை உடைச்சுப்போடாம கொண்டுபோய் அம்மாவிட்டக் குடு இந்த அம்மம்மாவை நினைச்சு அந்த சட்டியில காய்ச்ச பருப்பு நல்லா வரும் அதோட என்ர ஞாபகமும் வரும்.

யாவும் கற்பனை

• கௌந்தி மு, சென்னை.

# இரயில் நிலையப் படிகட்டுகள்

எவரேனும்
கைப்பையைப்
பிடிங்கிவிடக்கூடுமென்றும்..
எவரேனும்
கழுத்துச்சங்கிலியை
அறுத்துவிடக்கூடுமென்றும் ..
எவரேனும்
தவறான எண்ணத்தில்
நெருங்கிவிடக்கூடுமென்றும்..
எவரேனும்
கைப்பேசியைப் பிடிங்கிக்கொண்டு
ஓடிவிடக்கூடுமென்றும்..
எவரேனும்
ஏதாவதொரு பொய்கூறி
தான்
ஏமாற்றப்படக்கூடுமென்றும்..
எவரேனும்
கத்தியைக்காட்டி
மிரட்டக்கூடுமென்றும்..
இப்படியாக ஏதாவதொன்று
நினைத்தபடியே
இருள்சூழ்ந்த
இரயில் நிலையப்படிகட்டுகளை..
அச்சத்துடனே
தடதடக்கும் மனதோடு
வேகமாகக் கடக்கும்
கால்களுக்கு நடுவில் தான்..
வாழ்க்கையை நகர்த்த
ஐந்துக்கும் பத்துக்கும்
அங்கேயேப்படுத்துறங்கும்
கூட்டத்தின் கால்களும்...



# முற்பகல் பார்ப்பின் பிற்பகல்?

மிகவும் வயதானமுதியவர் தலையில் சுமக்கமுடியாமல் பழக்கூடையை சுமந்தபடி சப்போட்டா சப்போட்டா என்று கூவியபடியே சென்றார். கிழிந்து வயிறு தெரியும்படியான சட்டையும் அதனுள் ஒட்டிய வயிறும் அதைச்சுற்றி கட்டியிருந்த லுங்கியுமாக முகச்சவரம் செய்யாத முகத்துடன் சென்றார். இதை நான் வீட்டிலிருந்தபடியே சாளரத்தின் வழியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்.

அவர் வயதில் பாதி வயதே எனக்கிருக்கும். ஆனால் நான் வீட்டில் அமர்ந்தபடியே குளிரூட்டப்பட்ட அறையில் குளிர்ந்த பழச்சாறு அடங்கிய கிளாசுடன் வேடிக்கை பார்க்கிறேன். அந்த பழவியாபாரியோ கொளுத்தும் வெயிலில் தாங்கமுடியா சுமையுடன் காலில் செருப்பு கூட இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறார். என்ன உலகமடா இது. சிலர் பிரம்மா அவன் தலையில் அப்படி எழுதியிருக்கிறார் என்பார்கள். இன்னும் சிலர் நீ பிறந்த இடம் அப்படி? அவன் பிரம்மாவின் பாதத்தில் இருந்து பிறந்துவிட்டான் என்பார்கள்.

இன்னொரு பிறவியைப் பார்ப்போம். இப்பெண் எங்கிருந்து பிறந்திருப்பாள் என்று சொல்லுங்கள். பக்கத்து வீட்டுப்பெண். ஆசிரியையாகப் பணிபுரிகிறாள். வீட்டிலிருந்து

வெளிவந்தவள்,

“சப்போட்டா ஏப்பா சப்போட்டா இங்க கொண்டா” என்று கூப்பிட அம்முதியவரும் கிட்டவந்து கூடையை இறக்கினார்.

“சப்போட்டா எவ்வளவு?” விலைகேட்டாள் அப்பெண்.

“ரூவாய்க்கு நாலு தாயி”

“என்னய்யா இப்படி அநியாயமாச் சொல்லுற. ரூபாய்க்கு எட்டு குடுக்கறாங்க”

“அதெப்படிம்மா, மார்க்கெட்டிலே ஆறுன்னு வாங்கித்தான் விக்கிறோம். இந்த இரண்டு பழத்த வித்து வருகிற காசுலதாம்மா எங்களுக்கு கஞ்சி” என்றார் முதியவர்.

எப்படியோ அடித்துப் பிடித்து பேரம்பேசி ரூபாய்க்கு ஐந்து பழங்கள் என்று வாங்கினாள். இதைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு மனதுக்கு வருத்தமாக இருந்தது. கையிலிருந்த பழச்சாறு சூடாக இருப்பதைப்போல் உணர்ந்தேன்.

மாதங்கள் சில சென்றன. மதுரைக்கு வந்திருந்த நான் தெற்குவாசலில் உள்ள துணிக்கடையில் குழந்தைகளுக்கு சில துணிமணிகளை எடுத்துவிட்டு கடையிலிருந்து இறங்கினேன். அப்போது ஒரு முதியவர் கையில் ஒரு தூக்குப் பாத்திரத்துடன் நின்றிருந்தார். என்னைப் பார்த்தவுடன் போளி போளி என்று என்று விற்கத்தொடங்கியவர்,

“ஐயா, போளி வேணுமா நல்லா இருக்கும்” என்று கேட்டார்.

“வேண்டாங்க” என்றேன்.

“ தம்பி, ஏழைக்கு உதவுங்க தம்பி, மூன்று மணி நேரமாய் விற்கிறேன். ஒன்றுகூட விக்கல. இத விற்றால்தான் எனக்கும் என் மனைவிக்கும் ஒருவாய் கஞ்சி”

பெங்களூரில் சப்போட்டா விற்ற அந்த முதியவரை கண்முன் கொண்டுவந்து நிறுத்தினார் இந்த போளி விற்பவர். இவரும் முதியவர்தான்.

இவர் பிரம்மாவின் பாத்ததில் இருந்து பிறக்கவில்லை என்பது அவர் பேசும் தொணியில் இருந்து தெரிந்தது. அவர் தோற்றமும் என்னிடம் கேட்டவிதமும் சமூகத்தின் மேல் எனக்கு சீற்றத்தை ஏற்படுத்தியது. எந்த வியாபாரமும் செய்து பிழைக்கலாம் தவறில்லை. ஆனால் முதுமையில் வறுமை கொடுதையானதல்லவா?

ஓய்வெடுக்க வேண்டிய வயதில் உழைத்தால் ஒருவாய் கஞ்சி என்ற நிலையும் சமூகத்தில் இருக்கிறதே. ஔவையார் இளமையில் கொடுமை என்று மட்டும் பாடியிருக்கிறார்.

முதுமையிலும் கொடுமை இருக்கிறதே என்று பலவாறு எண்ணியபடியே அவரிடம் எவ்வளவு போளி உங்களிடம்

இருக்குமெனக் கேட்டதற்கு நாற்பது ஐம்பது இருக்குமென்றார். சரி அவ்வளவையும் வாங்கிக் கொள்கிறேன் என்று ஐம்பது ரூபாயை அவரிடம் கொடுத்தேன். முகமலர்ந்த அவர் என்னிடம் கையிலிருத்த இலையில் கட்டி போளிகளை கொடுக்க வந்தபோது வேண்டாம் என்றேன். அதையும் விற்றுக்கொள்ளுங்கள் என்றேன்.

அவர் தம்பி எனக்கு பிச்சை வேண்டாம் என்று சொன்னதுடன் ஐம்பது ரூபாயையும்

திருப்பிக் கொடுத்தார். நான் அவரிடம் ஐயா உங்களுக்கு பிச்சைபோடவில்லை. நீங்கள் போளிகள் அவ்வளவையும் விற்றுவிட்டீர்கள். இதைக்கொண்டுபோய் யார் பசியால் வாடியபடி உங்கள் கண்முன் தெரிகிறார்களோ அவர்களுக்கெல்லாம் கொடுங்கள் என்றதும் பணத்தைப் பெற்றுக் கொண்டார். ஆனால் என்னிடம் ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று ஒரு கேள்வி கேட்டார். அதற்கு நான் அவரிடம்,

"இந்த ரூபாயை கோவில் உண்டியலில் போடவேண்டும்என்றுதான்கொண்டுவந்தேன். அதைவிட இங்கு ஒருவருக்கு கொடுத்தால் நல்லது என்பதை உணர்ந்தேன்" என்றேன்.

"என்ன சொல்றீங்க, தம்பி"

"கோவில் உண்டியலில் பணமில்லாமல் இல்லை. இந்த பணத்தை உங்களிடம் கொடுத்தால் உங்களுக்கு ஒருவாய் கஞ்சியும் சிலருக்கு பசிதீர போளியும் கிடைக்கிறது" என்றேன்.

அவர் உடனே கையெடுத்து கும்பிட்டார். அவர் கைகளை இறக்கி ஏதோ இன்று ஒரு நாள் நான் கொடுத்தேன். உங்களைப் போன்ற முதியோர்களை அரசாங்கம் அல்லவா காப்பாற்ற வேண்டும் என்று அவரிடம் சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தேன். சப்போட்ட விற்ற முதியவரிடம் பக்கத்துவீட்டு ஆசிரியை பேரம்பேசி பழங்களை வாங்கியபோது ஏற்பட்ட வலி மறைந்தது.

பேரம் பேசியதை தவறென்று சொல்லவில்லை. எங்கு பேச வேண்டும் யாரிடம் பேரம் பேசவேண்டும் என்பதை எண்ணவேண்டும். உணவகங்களிலும் மதுக்கடைகளிலும் திரைப்பட அரங்கங்களிலும் என்ன விலை என்றாலும் கொடுக்கும் இவர்கள் ஒட்டிய வயிற்றுடன் உழைக்கும் மக்களின் உதிரத்தை உறிஞ்சிகிறார்களே இவர்களெல்லாம் பிரம்மாவின் எந்த இடத்தில் இருத்து பிறந்தார்கள்?

● பிரபுசங்கர். க

# தகப்பன்களின் கதை

எந்த ஊர்ல இருந்து வர்றீங்க??
ஊர் பெயரை சொன்னார்

எத்தனை மணிக்கு வேலை முடியும்??
இரவு எட்டு மணி ஆயிடும்

அப்படினா எத்தனை மணிக்கு வீட்டுக்கு போவீங்க??
ரெண்டு பஸ் புடிச்சு போக
எப்படியும் பதினொரு மணியாகும்

காலைல திரும்ப எப்ப கிளம்புவீங்க??
காலைல ஏழு இருபதுக்கு நேர் பஸ் இருக்கு
அதுல கிளம்பிடுவேன்

இங்கேயே ரூம் எடுத்து தங்கலாம் இல்ல
அவ்வளவு கஷ்டப்பட்டு எதுக்கு தினமும் போயிட்டு வர்றீங்க???
"பாப்பா தூங்காம காத்திருப்பா சார்"

இது தகப்பன்களின் கதையும்
விண்மீன்களுக்காக காத்திருக்கும்
இரவின் கதையும்....

# பச்சைப் புல்வெளிகள்

• வெள்ளூர் வை.க. சாமி

*சேவல் கூட ஆழ்ந்த நிலையில்,*
*ஆத்துகாரி அணைத்து எழுப்புகிறாள்,*
*அடுத்த வேலை சாப்பாட்டிற்கு!*

*முப்போகம் விளைவித்த காலம் போய்,*
*ஒரு போகமாவது விளைவிப்போம் என்று*
*இளங்குளிர் பனியில் எருபூட்டி உளிக்கலப்பையோடு,*
*சற்றே சிறிதூரத்தில் வயலை அடைந்தேன்.*

*நிலத்தை இருகூறாக இருமுறை உழுது,*
*பின்! இருநாள் கழித்து மீண்டும் ஓர் முறை*
*ஓரடிவரை உழுவிட்டு, தண்ணீரில் சேறுகளயாக்கி,*
*மட்டப்பளவையில் சமதளமாக்கினேன்.*

*வருணனை நினைத்து வாரி இறைந்தேன்,*
*வயலில் விதைநெல்லை, மாதம் கழிய!*
*நாத்து பிடிங்கி கட்டி வைத்தேன்,*
*கட்டியவள் முதல் நாற்று நட வேண்டும் என்று!*


*சாண உரமிட்டு, பின் நாலுமங்கையர், நாலாபுரமும் ,*
*நாவிசையில் நட்டு வித்தால் முதல் நாற்றிணை.*
*நாள் கழிய, தவளைகள் துள்ளி விளையாட,*
*உர மருந்துகளை தூவி வரப்பிலமர்த்தேன்.*

*பச்சை புல்வெளிகள் என்னை சூழ்ந்திருக்க,*
*இளந்துளிர் காற்றுடன், நெற்கதிர் வாசமும் பிணைந்து*
*தன் மனை திரும்ப, என் மனமில்லை, எம்மனதில்!*

*மங்கிய மஞ்சள் நிற கதிர்களை அறுவடை முடித்து,*
*அரை நிர்ணய விலையில் விற்று,*
*கடைத்தெருவில் ஒரு ஆளாக்கரிசிக்கு அதிவிலையில்*
*பெற்று, மனம் கனத்து மனை வந்தேன்.*

*மாதம் கழிய!*
*சேவல் கூட ஆழ்ந்த நிலையில்,*
*ஆத்துகாரி அணைத்து எழுப்புகிறாள்,*
*அவள் அரவணைப்பில்*

● சரஸ்வதிராசேந்திரன்



# கனவுகளின் கானல்

*''ரவி என்ன திடீர்னு மாயவரம் கிளம்புறீங்க ?''*

*''சுகுணா என் கனவு இல்லத்துக்கு பணம் புரட்டத்தான் அப்பாவைப் போய் பார்த்து ஏற்பாடு பண்ணனும் இல்லையா அதுக்குத்தான்''*

''இதுவரையில் அவர்களுக்கு நாம நம்ம சம்பளத்திலே ஒண்ணுமே செய்யலை இப்ப எந்த மூஞ்சியை வைத்துக் கொண்டு பணம் கேட்கப் போகிறீர்கள் அவர்களே பென்ஷனில் வாழ்கிறார்கள்'

'சுகுணா அவர்கள் சம்பாத்தியம் எல்லாம் ஒரே மகனான எனக்குத்தானே அவர்கள் வேறு யாருக்குக் கொடுக்கப் போகிறார்கள்''

''எனக்கு இது சரியாபடலை அப்புறம் உங்க இஷ்டம் போயிட்டு வாங்க''

திடீரென்று வந்து நின்ற ரவியைப் பார்த்து மலைத்தனர் பெற்றோர்

''என்னப்பா ரவி அபூர்வமா இருக்கே உன் வருகை வா குளிச்சிட்டு காஃபி சாப்பிடலாம் '' அம்மா அலமேலு சொன்னாள்

''இதோ வரேன்மா ''

''வந்ததுதான் வந்தே மருமகளையும் அழைச்சுட்டுவந்திருக்கலாமே ''கேட்டாள் அலமேலு

''அவளுக்கு லீவு இல்லேம்மா நானே அவசர வேலையா வந்தேன். அப்படியே உங்களை பார்த்துட்டுப் போகலாம்னுதான் வந்தேன் ''

''ரவி வேலையெல்லாம் எப்படி போகுது ? எப்படியாவது ஒரு வீட்டை வாங்கிட்டால் அனாவசியமா வாடகை கொடுக்க வேண்டாமே ''அப்பா

மாணிக்கம் சொல்ல அவன் தயக்கம் எளிதானது

''ஆஹா நம்ம வேலை சுலபமாயிட்டு பேசிட வேண்டியதுதான்

''அப்பா அது விஷயமாத்தான் நான் வந்திருக்கேன் ''

''சொல்லுப்பா என்ன சொல்லப்போறே ?''

''நான் ஆசைப்பட்ட மாதிரி அண்ணா நகரில் ஒரு வீடு வந்திருக்கு அதை வாங்கலாம்னு நினைக்கிறேன்''

''என்ன யோசனை வாங்கிட வேண்டியதுதானே வருஷம் ஓட விலையும் ஏறிடுமே இதுக்கா ஓடி வந்தே போனிலே சொல்லிட்டு வாங்குகிற வேலையைப்பார்ப்பியா ''

''அப்பா அங்கதான் ஒரு சிக்கல் விலை மூணு கோடி சொல்றாங்க அந்த அளவிற்குப் பணம் இல்லையே அதான் உங்ககிட்டே கேட்கலாம்னுதான் ''

''என்னப்பா விளையாடுறியா என்கிட்டே ஏதப்பா பணம் ?''

''இந்த வீட்டை விற்றால் ஒரு கோடிக்குப்போகும் என் சேமிப்பும் சுகுணா சேமிப்பும் சேர்த்தால் ஓரளவுத் தேறுமப்பா ''

''சரிப்பா நான் விலை பேசிட்டு சொல்றேன் ''

தான் வந்த வேலை ஈஸியா முடிந்து போனதில் மகிழ்ச்சியுடன் சென்னை கிளம்பினான்

''சுகுணா சக்ஸஸ் இனி வீட்டை வாங்க ரெடியாகிட வேண்டியதுதான் சுறு சுறுப்பானான்

‘ரவி போனதும் அலமேலு பிலு பிலுவெண்று பிடித்துக்கொண்டாள்.

கணவரை ''ஏங்க அவன் பெரிய வேலையில் உள்ளான்

இரண்டுபேரும் சம்பாதிக்கிறாங்க சொந்தமா வீடு வேணுமின்னா அவன் தானே வாங்கணும் இந்த வீட்டை விற்கச்சொல்ல அவன் யார் நீங்க எப்படிஅதுக்கு ஒத்துக்கலாம் என் கிட்டே சம்மதம் கேட்க வேண்டாமா ?''

''அலமேலு நீயா இப்படி பேசுற அவன் நமக்கு ஒரேபிள்ளை நம்ப பணமெல்லாம் கடைசியிலே அவனுக்குத்தானே சேரப் போகிறது அதை இப்பவே கொடுக்கிறதிலே என்ன தப்பு வீடு வாங்கத்தானே கேட்கிறான் ‘சமாதான படுத்தி சம்மதிக்க வைத்தார

''சுகுணாவிடம் விஷயத்தை சொன்னதும் அப்ப உங்க கனவு

நிறைவேறப்போகுதுன்னு சொல்லுங்க''

''அதெப்படி சுகுணா முக்கால் கிணறுதானே தாண்டியிருக்கேன்

இன்னும் கால் கிணறுக்கு உன்தயவுதான் தேவை ''

‘ என்ன ரவி சொல்றீங்க புரியலையே “

''சுகுணா நீ உங்க அப்பாகிட்டே சொல்லி பணம் வாங்கி வந்தாதான் பூர்த்தியாகும் என் கனவு ''

''என்ன சுகுணா நான் பாட்டுக்குப் பேசுகிறேன் நீ சைலண்ட் ஆகிட்டே ''

''இல்லே ரவி நம்ம கல்யாணத்துக்கு ஒத்துகிட்டதே பெரிய விஷயம் வரதட்சணையே வேண்டாம்னு சொன்ன நீங்க இப்பப்போய் பணம் கேட்டா ஞ். பாவம் அவர்கள் ரிடையர்ட் ஆனபிறகு அவர்கள் கிட்டப்போய் ''

''எங்க அப்பாவும் ரிடையர்ட் தான் நீயும் என்னைப்போல உங்க வீட்டுக்கு ஒரே பெண்தானே நான் கேட்கலே நீயும் உன் பங்குக்கு கேட்டுப்பாரேன் இது ஒரு உதவிதானே இது என் வாழ்நாள் கனவு வெளியிலே போய் கடன் வாங்குனா வட்டி கூடப்போகும் வாழ்நாள் பூரா கடன் அடைக்கவே சரியாகிடும் உனக்கு இஷ்டமில்லேன்னா நான் கடன்தான் வாங்கணும் வேறுவழியில்லை யோசித்துப்பதில் சொல்லு ''

ரவி சொல்வதும் உண்மைதான் அப்பா என்ன சொல்வாறோ என்ன சொல்லுறது அவர் பெற்றோர்களே பணம் கொடுக்கும் போது நம் பெற்றோரும் உதவத்தானே வேண்டும் புறப்பட்டாள்

'' நீ என் பெண்தான் அதுக்காக விரலுக்குத்தக்க வீக்கம் வேண்டாமா குடியிருக்க வீடு வேண்டும்தான் அது நம்ம சக்திக்குத் தகுந்தாற்போல்இருக்கணும் ஒரு வி ஐ பி இருக்கும் தெருவிலே விடு வாங்கணும்னாஇது பேராசை இல்லையா கனவு இருக்கலாம் அதுக்கு நீங்கதான் சம்பாதித்து வாங்கணும் மூன்று கோடி வீட்டிலேதான் வாழ முடியுமா என்னம்மா பேசறே ?' நீலகண்டன் கேட்டார்

''அப்பா அவருடைய அப்பா தன் வீட்டை விற்று பணம் கொடுக்கும் போது நீங்க உங்க

பெண்ணுக்காக உதவ வேண்டாமா ?''

'என்னங்க நம்ம பெண்ணுக்கு செய்யாம யாருக்கு செய்யப் போறோம். எனக்கும் கூட இந்த பெரிய வீட்டிலே வேலை செய்ய முடியலே பேசாம இதை வித்துட்டு ஒரு சின்ன வீடா பார்த்துட்டுப் போனால் நல்லதுதானே ?''

'' காயத்ரி நீயா இப்படி பேசுறே கல்யாணம் புதுசிலே நீ என்ன சொன்னே நமக்குன்னு ஒரு சொந்த வீடு வாங்கினா போதும் நாம சிக்கனமா வாழ்ந்திடலாம்னு சொன்னே அதுக்காகத்தானே நானே கடனை உடனை வாங்கி இந்த வீட்டை உன் பெயருக்கு வாங்கி கொடுத்தேன் மறந்துட்டியா ?''

'' மறக்கலைங்க இது நம்ம பெண் யாரோ எவரோ இல்லையே தேவைப்படும்போது ஒருத்தருக்கு உதவுதுதான் உதவி நம்ம பெண்ணும் மாப்பிளையும்தானே அதிலே வாழப்போறாங்க சரின்னு சொல்லுங்க நாம சின்ன வீடாபார்த்து வாடகைக்கு இருப்போம் ''

''அம்மா நீங்க ஏன் வாடகைக்கு இருக்கணும் நாங்க வாங்கப்போறா வீட்டிலேயே இருக்க வேண்டியதுதானே ''

''அது மட்டும் வேண்டாம்மா பெண் வீட்டிலே போய் இருப்பதெல்லாம் சரி வராது நாங்க இங்கேயே இருக்கிறதுதான் நல்லது ''

சம்பந்திகள் தங்கள் வீட்டை விற்றுப் பணம் கொடுத்து ரவியும் ஒரு நல்ல நாளில் அண்ணா நகர் வீட்டிற்கு குடிபோனார்கள் இரண்டு சம்பந்திகளுமே அவன் வீட்டில் இருக்க விரும்பாமல் அவரவர் ஊருக்குப்போனார்கள் ஒருமாதம் சுகுணாவும் ரவியும் உல்லாசமாக இருந்தார்கள் அதற்குள் அமெரிக்கா செல்ல ஆன்சைட் ஆஃபர் வர ரவிக்கு நப்பாசை அமெரிக்காவில் போய் சில வருடம் வாழலாமே என்று இருவரும் அமெரிக்க மோகத்திற்கு ஆசைப்பட்டு செல்ல ஏற்பாடு நடந்தது.மூன்று கோடி ரூபாய் வீட்டை வாடகைக்கு விட்டுப்போக மனமில்லாமல் பெற்றோரை வந்து இருக்கச்சொல்ல இரு குடும்பமும் மறுத்துவிட சும்மாவே பூட்டிவிட்டு அமெரிக்கா கிளம்பினார்கள்.

''பார்த்தியாடி இந்த காலத்து பிள்ளைகளுக்கு திருப்தி என்பதே கிடையாது இப்படி பணத்தை கொட்டி வாங்கிட்டு அலட்சியமா வீட்டைப் பூட்டிட்டு போயிட்டுதுகள் ஐ டியிலே வேலை பார்க்கிற பலபேரை பார்க்கிறேன் இப்படி நிலையில்லாமல் ஆசைப்பட்டு சேவிங்ஸே இல்லாம கஷ்டப்படப்போறதுகள் '' நீலகண்டன் புலம்பினார் பாவம் ரவி போன நேரம் கொரோனா தொற்று அமெரிக்காவையே ஆட்டிப்படைத்தது.


''ரவி நாம அவசரப்பட்டு விட்டோமோ பெற்றோர்கள் மனதை கஷ்டப்படுத்தி வீட்டை வாங்கிட்டு உடனே அமெரிக்கா வந்த நேரம் சரியில்லை அவர்கள் சாபம்தான் நம்மை அலைக்கழிக்குதுன்னு நினைக்கிறேன் இப்ப நாம அங்கே போகவும் முடியாது இங்கே இருக்கவும் பயமாஇருக்கே ''

' நீ சொல்றதும் சரிதான் கனவு கனவுன்னு சொல்லி அந்த கனவு இப்போ கானலா போயிட்டே இருதலை கொள்ளியா தவிக்கவேண்டி வந்திருச்சே'' புலம்புவது தவிர வேறு வழி

● ஆதி. பார்த்திபன்

# மழையோடு நீ செல்லும் பாதை

உன் அந்தர நடையினூடே வெளித் தளும்பும்
ஓர் மழை- நீ இப்பொழுது குடித்து முடித்த
ஆறு,எல்லாம் இயற்கை
உன் பச்சை நடை நீலப் பார்வை
எல்லாம் வரலாறு
இடி மின்னல் தூறல் என பரிணமிக்கும்
உன் உணர்வுகளின் பாதை
மழையே நீயாகுமோர் அணைப்பு
நீ செல்லுமிடமெல்லாம் தூறல்
இப்படித்தான் வலுக்கிறது காதல்
நானும் நீயும் பிரிந்த இடத்தில் மீண்டும்
கறுக்கிறது வானம்-மீண்டும் சேர்கையில் ஈரம்
குளிர்கிறது நிலம்
உன் விரல் நழுவி விழும் துளிகளை
சொட்டு சொட்டாக குடித்து இறந்து விடுவதே
மோட்சம்
கூரான உதடுகளைக் கிழித்தெடுத்தென்
மார்புக்குள் தை,எல்லாம் மழை
உனது பிரவாகத்தின் ஒற்றைத்திவலை.



● இராம. பெருமாள் ஆச்சி

அங்குல அங்குலமாக நகர்கின்றன
பொழுதுகள்.
சிறு துளி வெயிலை உண்ட இலைகளைச்
சற்றேக் குளிரச் செய்கின்றது தென்றல்..

மேக முகடுகளில் தன்னை மறைக்கும்
கதிரவனின் கண்ணாமூச்சி விளையாட்டில்
சற்றே சிணுங்கி சுருங்குகினறன
சூரியகாந்திகள்..

தன் நிழல் தன்னுள் மடியும் வரை
சுற்றிக் குடை விரிக்கின்றன மரங்கள்..
வெயிலோடு சிறு புற்களையும் விழுங்கும்
மாடுகள் அந்தியில் அசைபோடக்கூடும்
பகற்பொழுதின் துணுக்குகளை..

சூரியக்கதிரில் தகதகத்த நன்னீர்
குட்டைகள் சற்றே பொலிவிழக்கின்றன
மங்கும் இருளில்..
போகும் போதும் வரும்போதும் சிறகுகளால்
வானம் ஊரசிச் செல்கின்றன பறவைகள்..

வண்ணச்சிந்து பாடிய கானக வண்டுகள்
இருளில் மௌன இசை பழகுகின்றன.
ஆந்தைகளும் ,மழைக்காலத் தவளைகளும்
சேர்ந்திசைக்க
மெல்லிய அசைவுகளில்
நடனமாடுகின்றன மரக்கிளைகள்.

யாருமற்ற வனாந்திரப் பெருவெளியில்
நகர விருப்பமின்றி நின்று நிதானமாக
இரசிக்கின்றது நிலா.

மலரும் பூக்களின் ஓசை தேனீக்களின்
செவிகளைச் சென்றடைவதற்குள்
வண்ணத்துப்பூச்சிகள் குறுக்கிடுகின்றன
மின்மினிகளின் ஒளி□, ஒலியில்
மங்கிவிடுகின்றது இரவின் மௌனம்..

● சிவமணி, வத்தலக்குண்டு

# இளகுதல்

இளகுதலின்
சுகம் வரமா, சாபமா

ஒருவன் எதிர்பாராது
இளகச் செய்கிறான்

ஒருவன் எதிர்பாராது
இளகுகிறான்

இளகச் செய்பவனின்
கண்ணீரின் உண்மை
இளகுபவனின்
கண்ணீரோடு கரைகிறது

இளகவும் செய்யாமல்
இளகவும் முடியாமல்
இளகுதலின் இல்லாமை
உயிர்ப்பு இல்லாத இருப்பு

இளகுதலும், இளக வைத்தலும்
ஒரு வரம்
இளகி கொண்டே
இருப்பது தான் சாபம்



# தவிப்பு

'விடியமுதல் வெளியே போன துரையப்பன், மதியமாகும்போது கழுத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு வந்து திண்ணையில் சரிந்தான்.

'இண்டைக்கும் அடிப்பிலே உலை ஏறாதுபோல கிடக்கே'

உள்ளம் வெதும்ப, சின்னத்தங்கம் அவனைப் பார்த்தான். அவன் இவளையும், இவள் அவனையும் பார்த்துக்கொண்டிருக்க, குழந்தைகள் 'வழக்கம் போலவே' ஒப்பாரிவைக்கத் தொடங்கிவிட்டன:

'ஆச்சி பசிக்'குதணை. சோறு தாணை'

சின்னத்தங்கம் அடுக்களைக்குள் சென்று உறியிலிருந்த பழஞ்சோற்றை இறக்கி வைத்துவிட்டு, அடுக்குப் பெட்டிக்குள் வைத்த பனாட்டுத்தட்டைத் தடவ ஆரம்பித்தாள்.

'சீமாட்டி சின்னத்தங்கம் 'குபேரன்' துரைப்பனைக் கைப்பிடித்து மூன்று ஆண்டுகள். ஒரு நாள்கூட நல்ல சோறுகறி வாயில் வைத்தறியாத ஒரு ஜீவன் அவள். மிஞ்சிப்போனால் நெத்தலிக்கருவாட்டுக்கறியும், அமெரிக்கன் மாப்புட்டும், பனாட்டுத் துண்டுகளும்தான் அவள் கண்ட சொகுசு.

இந்தக் 'குபேர வாழ்க்கை' போதாதென்று மூன்று ஆண்டுகளுக்குள்ளே இரண்டு 'குழந்தைச் செல்வங்கள்;' கேட்கவேண்டுமா? யாழும் குழலும் தோற்றுவிக்குமளவுக்கு, 'இன்னிசை'யை

ரசித்துக்கொண்டிருந்தது துரையப்பன் குடும்பம். இதோ இந்த நாலாவது வருஷம்.. கஞ்சியும் கூழுமாய்க் காலம் கடத்திவந்த துரையப்பன் குடும்பம் இடைப்பட்ட காலங்களில் உப்புக்கஞ் சியோடு படுத்த இரவுகளே அதிகம். அடுப்பே புகையாத நாட்களும் உண்டு.

துரையப்பன் முகத்தில் கண்ணீர்த் துளிகள் 'பொடுக்கிட்டு' விழுந்தன. அன்றும் அவன் வேலைக்குப் போகவில்லை. வேலையே கிடைக்காத அந்தப் பயங்கர உலகத்தை நினைத்தபோது அவர் நெஞ்சு ஆக்ரோஷித்தது. அப்படியே அயர்ந்துவிட்டான். நள்ளிரவு. கண்களை அகலத் திறந்து விழித்துப் பார்த்தான். அரிக்கன் லாம்பு மங்கலாய் எரிந்துகொண்டிருந்தது. மெதுவாகத் தணித்தான். விளக்கின் ஒளி லேசாக மங்கியது. அவனுக்கு ஒரு வித 'மயக்கம்' உலகம் பிரளயம் எடுத்து இரைந்து கொள்வதாக அவனுக்கு ஓர் உணர்வு. அவன் சடலம் எரிந்தது. இரத்த நாளங்கள் குமுறி, முறுகித் துடித்தன. 'கிண்' என்று அனற் காற்று தேகம் முழுவதும் படர்வதுபோன்ற ஒருவித வீறுணர்வு. உடம்பு துன்னியது.

'தங்கம்'

வறட்டிய தொண்டை கரகக்க மெதுவாக அவளை அழைத்தான். நெஞ்சில் இடியேறு விழுகிறதாக ஒரு பிரமை.

'நானும் ஒரு மனுசனா? ஒரு கவளம் சோற்றுக்கு வழியைக் காணன், அதுக்குள்ளே 'இது' என்ன சவத்துக்கு?'

இருந்தும் கெந்தக மேனியை அவன் மனசால் அடக்க முடியவில்லை. போராட்டம் சினைப்பெடுக்கிறது.

சில விநாடிகள் கழிந்தன.. மீண்டும் உடல் கெந்தகித்து எழுந்தது.

'சீ, நான் ஒரு நாய்ப் பிறவி. இல்லை, 'ஆட்டுக்கிடாய்' போலக் காமம் பிடித்தவன்'

அவனின் மனக் குரங்கு கோணிக் குமைந்தது.

பக்கத்தே மூன்று வருஷங்களுக்குள் கிடைத்த 'செல்வங்கள்' கந்தைத் துணிகளால் போர்த்தப்பட்டதாக மூடப்பட்டுக் கிடந்து உறங்கிக்கொண்டிருந்தன. என்றாலும், அவற்றையெல்லாம் அடித்து மீறி எகிறிய உணர்ச்சிகள் மேனியிற் சில்லிட்டன.

'ஐயோ, எனக்கு இந்த எண்ணம் வரவேண்டாம். தங்கம் விரும்பினாலும்.. நான்..ம்கூம்..அதுவும் பாவம், வருத்தக்காறி. இந்தச் சண்டாள உறவு இனி வேண்டாம்'

தனக்குள் கறுவிக்கொண்டான். அவன் கண்கள் கிறங்கின. உடல் தீய்ந்தது. கண்கள் அவளை உணர்வூறி வெறித்துப் பார்த்தன. ஷணத்தில் வெறித்த அந்தக் கண்கள், மயக்கமுற்றுப் பூஞ்சணமடித்துப்போய்விட்டன. அப்பால் அவனுக்குக் கண்கள் தெரியவில்லை. காதுகளும் கேட்கவில்லை.

ஆறு மாதங்களை எப்படியோ இப்படி இறுகப்பிடித்துத் தனது இந்தச் சடலத்தைக் கட்டி வைத்தவன் அவன். மின்மினி விளக்கொளியில் தங்கச் சரடுபோல் தங்கம் அப்போது பிரகாசித்தாள். கண்களை விழித்துப் பார்த்தான். அவள் நிமிர்ந்து மல்லாக்காய்க் கிடந்து உறங்கிக் கொண்டிருந்தாள். கரங்கள், கால்கள், சர்வாங்கம்.. எல்லாமே வெறிகொண்டு துடித்தன.

‘தலைக்கு மேல் வந்த வெள்ளம் சாண் ஏறினால் என்ன, முழம் ஏறினால் என்ன? இரண்டும் ஒன்றுதான்’

ஒரு ‘திடீர் ஞானம்’ அவனுக்கு உதித்தது.

‘தங்கம்.. ஏய்..’

அவளின் காதோடு வாளை வைத்து மெல்ல அரட்டினான். அந்த ஆளரவம் கேட்டு இந்த அழகொளி வீசும் பொற்சிலை திரும்பியது.

‘ஏய் தங்கம்’

‘ம்..’

‘த்சொ.. ஏய் தங்கம்’

உணர்ச்சிப் பிளம்பான அனற்கொதிப்பு அகோரித்துப் பற்றியது. அடுத்த கணம் கடலில் விழுந்தாயிற்று. அற நனைந்தவனுக்கு கூதல் என்ன, கொடுகடி என்ன? நனைந்தவன் நனைந்தவன்தான். விடிந்தது. ஆனால், துரையப்பனுக்கு அந்த விடிவே நெஞ்சில் இடி விழுந்தது போலாயிற்று. ஒரே ஏக்கம். அந்தத் தவிப்பை, அவளுக்கு வரும் ‘அந்த நாளை’ எதிர்பார்த்து மனதிற் குமைந்துகொண்டிருந்தான்.

அவளுக்கு அந்த ‘வழக்கமான நாள்’கூட வந்துவிட்டது. ஆனால், அவன் எதிர்பார்த்தது வரவில்லை.

‘தங்கம்’

ஈனக் கண்களால் துரையப்பன் அவளை அழைத்தான். அவன் முகத்தில் திணறடித்த தவிப்பும், நெஞ்சில் விவரிக்கமுடியாத சுமையும் கூடின.

‘இப்ப எதுக்கு இந்தச் சோகம்? நீங்கள் சரியான அவசரம் பிடிச்ச மனுசனப்பா’

‘அது சரி தங்கம், ‘அது’ என்ன மாதிரி இருக்கு?’

‘மாதிரி என்ன? இந்த முறை தப்பாமல் சனிக்கும்’

‘ஆ’

அவன் விழிகள் பேந்தப் பேந்த முழிசின. அவளுக்கென்ன, அவனல்லவா உழைத்து மாரடிக்கவேணும். அவளுக்கு, ‘பெறுவது’ தானே வேலை.

‘என்ன தங்கம், நீ உப்பிடிச் சிரிக்கிறாய். வாய் துறந்து சொல்லு.. இப்ப என்ன மாதிரிக் கிடக்கு? ஏதாவது மாற்றம் கீற்றம் இருக்கா?’

‘என்னத்தைச் சொல்றதாக்கும். இனிமேல் கிட்டா தெண்ட நினைப்பில அவசரப்பட்டு நடந்திட்டு, இப்ப ஏன் உப்பிடி அங்கலாப்பான்? இதோட மூண்டாகிவிட்டால்..?’

என்ன தங்கம் நீ விளையாடுகிறாய். உண்மையைச் சொல்லு. தேகம் இப்ப எப்படி இருக்கு?’

அவனின் பதைபதைப்பைக் கண்டு அவள் அழுதே விட்டாள்.

'எல்லாம் நாலு அஞ்சு நாளில் தெரிஞ்சிடும். அதுவரை மனத்தை அலட்டிக்கொள்ளாமல் இருங்கோ. 'கடவுள் தருவதை' நாங்கள் என்ன செய்யமுடியும்?'

'ஒரு குவளை கஞ்சி குடிக்கவே நாய் படாப்பாடு. இந்தக் கஸ்டத்தைப் போக்காத இந்தக் கடவுள் இதை மாத்திரம் அள்ளிக்கொட்ட வந்திட்டாராம். உலகத்துப் பெண்களுக்கெல்லாம் அவர்தான் பிள்ளைகளைக் கொடுத்தாரா?

சீறிச் சினந்துகொண்டே துரையப்பன் வெளியே கிளம்பினான்.

'வரேக்க பிஞ்சுப் பப்பாளிக்காய் கிடைச்சால் கொண்டு வாங்கோ. அதையாவது திண்டு பாப்பம்'

அவள் கேட்ட பப்பாளிக் காய்களோடு அவன் செக்கல் நேரம் வந்து சேர்ந்தான்.

விடிந்துகொண்டு வந்தது.

ஆனால், அவனுக்கு விடிவதாயில்லை, மனசு குமைந்து கறுவியது. பிரமை பிடித்தவன் போல் எழுந்த அவன் நெஞ்சில் ஒரே இடியேக்கம்.

'வருகிற நாள்' போய், நான்காம் நாளும் வந்து விட்டது.

உணர்ச்சிப் பிரவாகத்தை அடக்கிப் பொறுத்துப் பார்த்திருந்த விடிவுநாள் அது. விடிவையும் இரவையும் நிர்ணயிக்கும் சோதனை நாள்.

'தங்கம்'

அவள் கவலை தோய்ந்தபடியே முகத்தைதக் கோணிக்கொண்டு அவனைப் பரிதவித்துப் பார்த்தாள்.

'என்ன தங்கம், சரிபட்டு வந்ததா?'

'ஒண்டையும் யோசிக்காமல் கண்கடை தெரியாமல் நடந்திட்டு இப்ப விழி பிதுங்க முழித்தால்..?'

'நீ சொல்றது சரிதான் தங்கம். ஆனால்..?;'

'ஆனால் என்ன..?'

'நான் சொன்னதை மட்டும் நீ கேட்டு நடந்திருந்தால் இப்படியெல்லாம் நாங்கள் தவிப்பானேன்?'

இரண்டு வருஷங்களுக்கு முன் அவன் அவளிடம் 'கர்ப்பப்பையை ஒப்பரேஷன் செய்ய வேண்டும்' என்று ஆலோசனை கூறினான். அவளோ தன்னை ஒரு சோஷலிஷ நாட்டுப் பெண்ணென நினைத்து, 'பிள்ளைப் பாக்கியம் வேணும்' என்று ஆசைப்பட்டு அந்த ஆலோசனையை நிராகரித்துவிட்டாள்.

இப்போது இந்தப் 'பெரும் பாக்கியம்' கிடைத்திருக்கிறது.

அந்தி பிந்தி இருட்டியது.

அரிக்கன் லாம்பை அவள் கொழுத்தினாள். அவள் மனசிலே ஒளி இல்லை. தன்பாட்டில்

திண்ணையில் படுத்துக்கொண்டு பீடித்துண்டை பற்ற வைத்த வண்ணம் 'ஈன ஜென்மம் எடுத்தேன் என் ஐயனே' என்ற சுடலை ஞானப் பாடலை முணுமுணுத்துக்கொண்டிருந்தான். அப்போது அவன் நெஞ்சு குமுறிக் கலங்கி உருகிக் கண்ணீராய் வழிந்தது. தங்கம் பதறி, விம்மி, ஊளைக்குரல் எடுத்து அழுதாள். தாய் அழ, குழந்தைகள் அழத் தொடங்கின.

;நீ அழாதை தங்கம். நான் படுபாவி.. ஒரு குடும்பத்தை உழைச்சுக் காப்பாத்த வலுவில்லாதவன்.. நீ அழாதை..'

'உதென்ன பேச்சு. ஆகவும் சின்னக் குழந்தை போலப் பேசவேண்டாம். உழைப்பு ஒண்டு இல்லையே தவிர இந்தக் குடிசை வாழ்க்கையில் எங்களுக்கு என்ன குறைஞ்சுபோச்சு?'

'அதுக்கில்லை, நாங்கள் ஏழைகளாய்த்தான் சீவிக்கிறம். ஆனால், உணர்ச்சி செத்தவர்களாகவும் ஆசையை அறுத்தவர்களாகவும் சீவிக்க முடியாது. தங்கம் நாங்கள் செத்த பிணங்களைவிடக் கேவலமாக..'

அவன் தொண்டை கரகரத்தது.

தங்கம் கேட்டாள்:

'இன்றைய மேடுபள்ள வாழ்வில் ஏழைகள் வாழ்க்கையின் எதிரிகளுடன் மாத்திரமல்ல, தங்கள் உடல்களில் தோன்றுகிற இயற்கை உணர்ச்சிகளுடனும் போராடவேண்டியிருக்கிறது. அதுவும் ஏழையின் தலையில் ஒரு தியாக வேள்வியாகிவிட்டது' என்று கூறிய நீங்களே இப்பிடி மனம் தளர்ந்து கலங்கினால், நான் தாங்குவேனோ?'

'ஓம் தங்கம், அதுசரிதான். ஆனால்..'

'என்ன சரிதான். எங்க சிரியுங்கோ பார்ப்பம்'

அவள் சிரிப்பித்தாள்.

'இங்கே பாருங்கோ'

'என்ன தங்கம்'

'இதோ விடிவு'

'அப்படியா சங்கதி, எங்கே?'

'சும்மா கிடவுங்கோ. நீங்கள் எதிலும் பச்சைப் பிள்ளைமாதிரி'

நாணத்தால் சிவந்துபோன அவள் முகத்தில் ஒரு விடுதலை ஒளியை அவன் கண்டான். அந்த ஒளிக்குள்ளே அவன் தவிப்புள்ளம் புகுந்து விடிவு கண்டது.

அவள் புடவையை அவன் பார்த்தபோது..

அதிலே செங்குருதி வடு..

'அப்பாடா!'

அவன் மனம் இன்ப சாகரத்தில் சஞ்சரிக்கலாயிற்று.

அவன் சிரித்தான். அவளும் சிரித்தாள்.

'அம்மாடி, ஒரு கண்டம் தவறிவிட்டது.. இனி, கவனம்'

சுட்டி விரலால் செல்லமாக அவனை உறுக்கினாள் தங்கம்.

# அன்னைக்கென்று பட்டாடை கனவு..!

● த. ரவீந்திரன்,
திருச்செங்கோடு..

*வாழ்ந்த நாளில் ஒருமுறையும் அணிந்ததில்லை கடைசி வரை*
*கந்தலை மாற்றுச் சேலையாக*
*உடுத்தி கரை சேர்க்க உழைத்த*
*என் அன்னைக்கு..!*

*வாழ்வின் பெரும் கனவாக நினைத்திருந்தேன் முதல் மாத*
*ஊதியத்தில் அன்னைக்கு ஒரு பட்டுச் சேலை..!*

*எதார்ச்சையாக மரணம் வந்த நாளில் அப்போது தான்*
*பிறந்த வீட்டு கோடி துணியென புதிய சேலை உடுத்தினாள்*
*அன்னைக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை நினைவை துறந்த*
*நிலையில் ..!*

*முடிவில்லா கனவிற்கு*
*முகங்கள் உண்டு அதிகாலை கனவெனில் தவறாது கைகூடும்*
*என்றாள் உலகத்தின் உண்மையென என் அன்னையும்..!*

*அதிகாலை கள்ளூரும் நேர கனவென்றில் காஞ்சிப்*
*பட்டெடுத்து வந்திருந்தேன் அன்னைக்கென்று மார்கழி*
*மாதத்தில்*
*அவள் அதை உடுத்தி*
*என் முன்னின்று சொன்னாள் ஆனந்தத்தில் திளைத்திருக்கேன்.!*

*கண்விழித்து கண்துடைத்து கண்ணெதிரே தேடினேன்*
*அன்னையை..!*

*மெல்ல மெல்ல உணர்ந்தேன்*
*அதிகாலை கனவு பலிக்கும் என்றுணர்ந்த நான்*
*மறந்தே போனான்*
*மார்கழி மாத கனவு*
*பலிக்காது என்று..!*

*ஆண்டுகள் கடந்து யுகங்கள்*
*ஆனாலும் என் அன்னைக்கு*
*பட்டாடை என்பது கனவாகவே*
*உள்ளது பட்டோடு காத்திருக்கும்*
*எனக்கும்..!*

● அ.முத்துவிஜயன்



# வத்திப்போன ஈரம்

*பொன்னுசாமி ரோட்டுல யார் வாரதுன்னு பாத்துக்கிட்டு இருந்தார். சரியாத்தெரியல மங்கலா கலங்கலா இருந்துச்சு. கண்ணு. கண்ணுல வேற தண்ணி வழிஞ்சிச்சி. வர வர பார்வை சரியாத்தெரியிறதில்ல.*

*வாங்கிப்போட்ட கண்ணாடி ஒடஞ்சிபோச்சி பேத்தி தட்டிவிட்டதுல. ஒரு குருட்டு நெதனத்துல வண்டி ஓடிக்கிட்டு இருக்குது. வயசு வேற 78 ஆயிப்போச்சு. கைகாலுக்கு அடிக்கடி சொகமில்லாமப்போகுது. பெரியாஸ்பத்திரில தான் போய் பாக்கனும். டாக்டர் வயசானா அப்புடித்தான் இருக்குமுய்யான்றாரு.*

*இப்ப போட்டிருக்குற ஒருபக்கம் ஒடஞ்ச கண்ணாடி அஞ்சாறு வருசத்துக்கு முன்னாடி*

*கண்சிகிச்சை கேம்ப்ன்னு அரவிந்த் ஆஸ்பத்திரில போட்டப்ப செக் பண்ணி ஆப்பரேசன் பண்ணிட்டு அவுகளே குடுத்தது*

*இப்ப ஒடைஞ்சி போனதுனால மாத்தனும். ராமசாமி டவுனுக்கு போனப்ப அவன்கிட்ட குடுத்து விட்டு சரிபண்ண எம்புட்டாகுமுன்னு கேட்டு வரச்சொன்னேன். 200 ரூ ஆகுமுன்னு சொன்னாகலாம்..*

*மயன்கிட்ட நேரம்பாத்துக்கேட்டு வாங்கனும். வீட்டுக்குள்ள கேட்டா பிரச்சனை யாயிடும். அன்னிக்கி கேட்டப்ப அவன் பொஞ்சாதி இப்ப என்ன அவசரம் பெருசுக்கு. கலெக்டர் உத்தியோகத்துக்கு கண்ணாடி இல்லாம போகமுடியாதோ ந்னு எரிச்சலோட சொன்னது மனச கொடஞ்சிருச்சி. நாப்பொழப்பு தான் பொழைக்க வேண்டியதா இருக்குது. மானத்த எல்லாம் பாத்தா போய்ச்சேரவேண்டியதுதான் அதைதொலைச்சிட்டு காதைப் பொத்திக்கிட்டு த்தான் பொழப்பு ஓடுது. மருமக பேசுற பேச்சை என் பொஞ்சாதி கேட்டா ஒரு நிமிசம் பொறுக்கமாட்டா. நல்ல வேளை மானத்தோட போய் சேந்துட்டா.*

*இன்னிக்கி மகன்கிட்ட கேட்டுற வேண்டியதுதான் னு தீர்மானம், பண்ணி வீட்டுக்கு வெளிய போய் நின்னுக்கிட்டாரு பொன்னுசாமி. அவன் வேலைக்கிகெளம்ப பைக்க எடுக்கும்போது புடிச்சிற வேண்டியதுதான்னு. அதுமாதிரியே நின்னுக்கிட்டு இருக்கப்ப அவன் வெளிய வந்தான் அவன் கிட்ட கண்ணாடியகாமிச்சாரு இவரு. இதமாத்தனும்.டவுக்குப்போய்ன்னு சொன்னாரு.*

*அவன் கேட்டான் எம்புட்டாகுமாம்ன்னு 200 ரூ ஆகுமாம். போக்குவரத்தோட 250 குடுப்பா ந்னு கேட்டாரு. அப்ப அவன் சொன்னான் இந்தமாசம் செலவு அதிகம். சம்பளம் வாங்கிட்டு பாக்கலாம் இப்ப என்ன அவசரம். சும்மாதான இருக்கீங்கன்னான். கண்ணு தெரியலப்பா முந்தாநாளு தடுக்கி விழுந்துட்டேன்னாரு. அதுக்கு அவன் வெளியபோகாதீங்கவீட்டுக்குள்ள இருங்கன்னு சொல்லிட்டுப்போயிட்டான்.*

*இப்பயெல்லாம் வெள்ளனாவே பசிக்க ஆரம்பிச்சிடுது. காலையில ஒரு டீ மருமக குடுக்குறதுக்குள்ள போதும் போதுமுன்னு ஆயிடுது. பசி வயத்த கிள்ளுது ஒரு டீய வெள்ளனாக்குடிச்சாத்தான் வெளிக்கி போகுது. பசியும் தாங்குது அப்ப விட்டா கட்டிக்கிது வயிறு வலிக்குது. அதுக்குத்தான் வெள்ளனா ஒரு டீ கடையில குடிக்கிறது ராமசாமி கடை டீ நல்லாருக்கும். இதுக்காகவே மககிட்ட காசு வாங்கி வைச்சிந்தாரு இவரு.*

*ஒருவழியா மூக்கால அழுதுக்கிட்டே 250 ரூவாயக்குத்தான் மகன். அதுவும் வீட்டுக்குள்ளயே மருமக என்னமோ சொல்லிச்சு. இவரு காதுல வாங்கலை என்னத்தச் சொல்லிறப்போகுது. தண்டச்செலவு ந்னு சொன்னமாதிரிதான் கேட்டுச்சு. சொல்லிட்டுப்போகன்னும். காசு குடுக்குறவுக என்னத்தையாவது சொல்லத்தான் செய்வாக..*

*ஒரு வழியா கண்ணாடிய எடுத்துக்கிட்டு டவுனுக்கு கெளம்பிட்டாரு. பஸ் வர லேட்டாகுமுன்னு சேர் ஆட்டோவில போயிட்டார் கூட பத்துரூவா. சமாளிக்கலாம்ன்னு. நெனச்சிக்கிட்டு கண்ணாடிகடைக்கிப்போனாரு.*

*அவரு கண்ணாடிகடையில இத குடுத்து ஒக்குட்டுத்தரசொன்னாரு. எம்புட்டாகுமுன்னு கேட்டாரு. அவன் சொன்னான் 250 ரூ ஆகுமுன்னு. இவரு கேட்டாரு ராமசாமி வந்து கேட்டப்ப 200 தான் அசொன்னீகளாமே. அதுக்குள்ள வெலை ஏத்திப்புட்டா எப்புடின்னு ?ன்னு கேட்டாரு இருக்குறது 230 ரூ தான்ற பதட்டத்தோட.*

அப்ப அவன் சொன்னான் அது போனமாசம். இப்ப வெலை ஏறிடுச்சு.ஜி.எஸ் டி வரிவேற இருக்கு மொத்தம் 270 ஆகுமிப்பன்னான். இவரு எண்ணிப்பாத்தாரு 230 தான் இருந்துச்சி பைக்குள்ள இருக்குற ஒரு ரூ ரெண்டு ரூ எல்லாம் சேத்தாலும் 242 த்தாண்டல. பசி வேற கண்ணக்கட்டுச்சு. கடைக்காரன் கிட்ட கேட்டாரு அய்யா என்கிட்ட இம்புட்டுத்தான் இருக்கு கண்ணாடிய சரிபண்ணிக் குடுங்களேன்னாரு,. வெரசாவேணுமா பைத்தந்தா போதுமான்னான். மொத காச முடிவுபண்ணுங்க ந்னு கையில இருந்ததைக்குடுத்தாரு.

அவன் வாங்கி எண்ணிப்பாத்துட்டு 242 தான் இருக்கு அது இல்லாம 100 ரூ நோட்டுல எண்ணக் கரையும் லேசா கிழிஞ்சும் இருக்கு. குடுத்தா ஆரும் வாங்க மாட்டாங்க. நீங்க கண்ணாடிய குடுத்துட்டு போய்ட்டு பைய வாங்க. நாளப்பின்ன.காசக்கொண்டாங்க நான் ஒக்குட்டு வைச்சிருக்கேன்னான்.

பொன்னுச்சாமிக்கு திக்குன்னுச்சு. இந்தகாச வாங்கவே ஒருமாசமாச்சு.இன்னும் காசுகேட்டா அடிக்காம விடமாட்டான். மருமக திட்டித்துப்புடுவா. ஒருமாசமாகுமோ ரெண்டுமாசமாகுமோ.. இது இருக்குறதால ஓரளவு கண்ணு தெரியுது. இது இல்லாம நடந்தா விழுகவேணியதுதான்னு நெனச்சிக்கிட்டு கண்ணாடியயும் காசையும் குடுங்க நான் போய்ட்டு வாறேன்னு வாங்கிட்டு வெளிய வந்தார்.

உச்சி வெயிலு மண்டய பொழக்க பஸ் ஏற நடந்து வந்தாரு. கண்ணு ரொம்ப மங்கலாதெரிஞ்சது. அப்ப யாரோ எதுக்கோ தோண்டி வைச்ச பள்ளத்த சரியா மூடலபோல தடுமாறி விழுந்தார். கால் முட்டில சரியான அடி உசுறுபோறமாதிரி வலிச்சது. கைலதடவிப்பாத்தாரு பிசுபிசுன்னு ஒட்டுச்சு. ரத்தம் போல அதோட எந்திரிச்சி நொண்டி நொண்டி நடந்தாரு. கொஞ்சதூரம்போயி பஸ் ஏறிட்டு டிக்கெட் எடுக்கையில பையத்தொட்டுப்பாத்தாரு பையில இருந்து காசு கொஞ்சம் விழுந்த எடத்துல விழுந்துருச்சு போல. காசு கொறஞ்சது..

இப்ப த்திரும்பப்போய் மகன்கிட்ட காசுகேட்டா

மயன் வையுவான் மருமக கொன்னேபுடுவா

அழுகையாவருது..

என்னவெக்கங்கெட்ட பொழப்பு இது

இன்னேரம் அவ இருந்திருந்தா

காதுல கழுத்துல கிடக்குறத

அடகுவைச்சாவது வாங்கிப்போடுய்யான்னு

குடுத்துருப்பா..அவபோனதுக்கப்புறம்

என் பாடு நாய்பொழப்பாப்போச்சு..

இந்த வெக்கங்கெட்டபொழப்ப நெனச்சா செத்துறலாம்போல இருந்தது அப்ப பொஞ் சாதிய நெனச்சாரு. மகராசி போய் சேந்துட்டா நிம்மதியா எனக்கு வேலை வரலயேன்னு தேம்பி மனசுக்குள்ள அழுக ஆரம்பிச்சிட்டாரு.. ஆனா கண்ணுல ஒரு சொட்டு தண்ணி வரல..அதுவும் வத்திப்போச்சு அழுது அழுது..

# பாரியன்பன் - கவிதைகள்

● பாரியன்பன்

நம் வீட்டு மதில் மேல்
அமர்ந்த காக்கைகள்
இருபுறமும் மாறிமாறி
கரைந்தன.
மதியம் உன் வீட்டுக்கு
நான் வந்தேன்.
மாலையில் என் வீட்டுக்கு
நீ வந்தாய்.
நம் இருவர் வீட்டிற்கும்
கடைசிவரை வரவேயில்லை
விருந்தாளிகள்.

❍

நெடுநாள் கழித்து
சொந்த ஊர் பயணம்.
வரவேற்பிலும் பாசத்திலும்
சற்றும் குறையாத
சுற்றமும் நட்பும்.
பழைய அசல்
காணாமல் இருந்தது
எனது கிராமம்.

❍

பக்தி சிரத்தையுடன்
கடவுளை வேண்டினால்
எல்லாமும் அருள்வதாய்
செல்கிறார்கள்
ஆன்மீகப் பெரியோர்கள்.
அனைத்தும் நிறைவாய்
பெற்றிருக்கும் கடவுளிடம்
நாங்கள்
வேண்டிக் கொண்டுதான்
இருக்கிறோம்.
எங்களுக்கு
அள்ளித் தர வேண்டாம்.
கிள்ளித் தரக்கூட மனமில்லை
அந்தப் பொல்லாத கடவுளுக்கு.



❍

காந்தி உருவம் பதித்த
ரூபாய் நோட்டுகளே
உழைப்பையும் அறிவையும்
தீர்மானிக்கிறது.
எனது வியர்வையும்
அவனது மூளையும்
பேரமாவது கூட
காந்தி உருவம் பதித்த
ரூபாய் நோட்டுகளுக்காகத் தான்.
காந்தியல்லாத
நோட்டுக்களாக பெறப்படுபவை
அனைத்தும் செல்லாக் காசுகள்.

❍

அந்தக் கடவுளிடத்தில்
நான் எட்ட நின்றே
கோரிக்கை வைக்கிறேன்.
இந்த வண்டுகளுக்கு
ரொம்பவும் தான் துணிச்சல்.
பூக்களின் கருவறைக்கே சென்று
ரகசியம் பேசுகின்றன.

# மனரேகைகளின் பரமபதம்

• வேதா. இலங்காதிலகம் டென்மார்க்

*அகம் திறந்து பாராட்டி*
*முகம் மலர்ந்து வரியொட்டல்*
*மகிமையுடன் திறனை ஒப்புதலாக்கும்.*
*அகிற்கூட்டு வார்த்தை அங்கீகாரம்*
*சுகித்தலாகி வேர் நீண்டு*
*திகிலழித்துத் திராணியேற்றும் சிகரமேற.*


*கரணமடித்துப் பாலனுக்கும் பலமேற்றும்*
*அரணித்தலாகும் அன்பு வார்த்தைகள்*
*இரணியமாகும், மழையாகும் இதமிகுமொழிகள்.*
*பரணிபாடும் பாங்காக எழுத்துலகில்.*
*உரமிகு அங்கீகார மொழியால்*
*தரமற்றுத் தோற்பவனும் நந்தவனமாகும் நிலையுண்டு*

*கனமான தோல்வியால் நிலைமாறினும்*
*தனமாகும் பாராட்டால் வனமாகும்*
*மனதின் ரேகைகளின் பரமபதம்*
*தினம் வெற்றிக் கதிரொளி விரிக்கட்டும்.*
*வானளாவிய அதிகாரம் ஏளன*
*இளக்காரம் தோல்வியின்றுஜீ உயரட்டும்.*

*இனிய வலியகற்றும் மென்மை*
*கனியும் இதமுடை வார்த்தைகள்.*
*மனித இதயத்துச் சிறகுகளே*
*புனிதமாய் அடைகாக்கிறது வார்த்தைகளை.*
*காலையோ மாலையோவெனும் இதமான*
*மானசீக பேறுதான் மொழி.*

*தீராநதி ஓயாத போராட்டம்*
*சீராயோடும் நிபந்தனையற்ற எழுத்து*
*சோராது இதயத்துச் சிறகுகள் வெப்பமாகி*
*போராக ஏவாது இதமாயெழுதுவது*
*மனித நுண்ணறிவின் விரிப்பு*
*புனிதப் பழமாகும் கருத்து.*
*காவல்காரன் வீடு*
*தகவல் கசிந்துவிட்டது*
*ஒளித்த இனிப்பிற்குள் எறும்புகள்*

*(அகிற் கூட்டு - சந்தனம். சுகித்தல் .நலமாக. ஆரணித்தல் - காவல் செய்தல், இரணியம் - பொன்)*



● சா.கா.பாரதி ராஜா

கடற்கரையில் என்னோடு
போட்டிக்கு கவிதை எழுதுகிறது
ஈரத்தில் கால்பதிக்கும் நண்டு

இரவு எவ்வளவு அழகானது
உணர்த்தியது குழந்தை
ஆழ்ந்த உறக்கத்தில்

தியானத்தை கலைத்த எறும்பு
நசுக்க நினைக்கத் திரும்புகிறேன்
புத்தரின் மடியில் எறும்புகள்

புகைத்த அப்பா
அடுப்படியில் அம்மா திட்டுகிறாள்
இப்போது புகைக்கிறது குடிசையும்

ஏ! எறும்புகளே!
சுதந்திரமாக செல்லுங்கள்
இது மனிதர்களுக்குத்தான் சிறைச்சாலை